

# தமிழரசு

16-1-1979 50காசு.









# மதுவை ஒழித்து மகிழ்ச்சி நிலவச் செய்வோம்!




"சாராயம் நம் உடலையும்,
நடத்தையையும், அறிவையும்
பாழாக்குகிறது!"

"மலேரியா முதலிய நோய்கள் உடலை
மட்டுமே பாதிக்கும்; மது பானங்களும்,
கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும்
பாதிக்கும்."

**— அண்ணல் காந்தியடிகள்**

"மதுவிலக்கு இல்லையேல்
அரிசனங்களுக்கும்,
விவசாயத் தொழிலாளர்களுக்கும்
விமோசனம் இல்லை!"

**— பேரறிஞர் அண்ணா**



வெளியீடு :—
இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

மலர் 9 இதழ் 14

16.1.1979

# பொங்கல் வாழ்த்து

—பி. சி. கணேசன்
கூட்டாசிரியர்.



**போ**ங்கல் திருநாள் தமிழர்களின் தனிப் பெரும் திருநாள். இதற்கு அறுவடைத் திருநாள் என்கிற சிறப்புப் பெயரும் உண்டு. உழைப்பினை மதிப்பதும், போற்றுவதும் தமிழரின் பண்பாடு. உழைக்காதவரை மக்கள் இனத்தில் தாழ்ந்தவராகக் கருதுவது தமிழரின் மரபு. பொங்கல் திருநாளுக்கு உழவர் திருநாள் என்கிற பெயரும் உண்டு. எத்துணைதான் செல்வங்கள் பெருகினும், நாகரீகம் வளர்ந்திடினும் நிலத்தின் வளத்தை நம்பாமல் வாழ்வு வளம் பெறுவது அரிது.

தொழில் வளர்ச்சி அடைந்த சமுதாயங்கள்கூட விவசாயத்தைப் புறக்கணித்து வாழ்வது முடியாத காரியம். இன்னும் சொல்லப் போனால் பயிர்கள் பூமியை ஆதாரமாகக் கொண்டு செழித்து வளம் தருவது போலவே அத்தனை தாதுப் பொருள்களும் நிலத்திலிருந்துதான் வெட்டி எடுக்கப்படுகின்றன. இவைகளைக் கொண்டுதான் ஆலைகள் அமைகின்றன; உற்பத்திக்கு வேண்டிய இதர கச்சாப் பொருள்களும் உருவாகின்றன.

உயிருக்குத் தேவையான உணவும், மானத்தைக் காக்கும் உடையும், வாழ்க்கைக்கு அமைப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் இருப்பிடமும் ஆகிய அனைத்துமே பூமி அளித்த செல்வங்களால் உருவாகின்றவைதான்.

நீரின்றி அமையாது உலகு. சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்; உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; இப்படி நிலத்தை நம்பிச் சொல்லப்பட்ட விஷயங்கள் பல.

செய்கின்ற தொழிலைப் போற்றாத இனம் சீரழிந்து மறைந்து போகும். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!

இந்த உணவை அளிப்பதற்காக உழைக்கின்ற பெருமக்களுக்கு, அவர்களுக்கு உதவுகின்ற இயற்கைக்குத் துணை இருக்கின்ற இதர உயிர் இனங்களுக்கு, நன்றி செலுத்திடும் நன்னாள்தான் பொங்கல் திருநாள்.

உழைக்க வேண்டும்.
அனைவரும் உழைக்க வேண்டும்.
உழைப்புக்கு மரியாதை வேண்டும்.
அனைவரும் உழைப்பை மதிக்கக்
கற்றுக்கொள்ள வேண்டும்.
நன்றியுடன் இருக்க வேண்டும்.


இம்மாதிரி பல்வேறு உண்மைகளை அடுக்கடுக்காக உணர்த்திடும் ஒரு திருநாள் பொங்கலைத் தவிர வேறு எதுவும் இருக்க முடியாது. உலகிலுள்ள இனங்களில் மூத்த இனம் என்கிற பெருமைக்கு உரியது தமிழ் இனம். இந்த இனம் தனது எதிர்காலத்தைச் செம்மையாக அமைத்துக் கொள்ள வேண்டுமானால் உழைப்பில் நம்பிக்கை வைக்க வேண்டும். உழைப்பவர்களை மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்; உழைக்கின்ற மனோபாவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். அனைவரும் சேர்ந்து, வேற்றுமை மறந்து ஓரினம் என்கிற உணர்வோடு செயல்படுகின்றபோதுதான் வளர்ச்சி சாத்தியமாகிறது. முன்னேற்றம் ஏற்படுகிறது. எதிர்காலம், பிரகாசம் பெறுகிறது.

'தமிழரசு' தன்னுடைய பொங்கல் வாழ்த்துக்களை அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறது.



# வளமான தமிழகத்தை உருவாக்குவோம்!

## — தமிழக முதல்வர் —



பல்வேறு சோதனைகளுக்கு நம்மை உள்ளாக்கிய 78-ஆம் ஆண்டைத் தாண்டி, புதிய ஆண்டில் அடிஎடுத்து வைக்குமுன்பு, கடந்த ஆண்டில் நாம் நடந்து வந்த பாதையை நினைவு படுத்திக் கொள்வது நல்லது என்று கருதுகிறேன்.

78-ஆம் ஆண்டில், செயற்கையாகவும், இயற்கையாகவும் விளைந்த பல துன்பங்களைத் தமிழக மக்கள் சந்தித்திருக்கிறார்கள். அவைகளை எல்லாம் அரசின் முன்னெச்சரிக்கையான செயலாலும், மக்களின் கட்டுப்பாடான உணர்வாலும் கடந்து வந்திருக்கிறோம். ஆனாலும் கடந்த நவம்பர் திங்களில் கடுமையான புயல் வெள்ளத்தின் காரணமாக ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலம் நீரில் மூழ்கியது. நீலகிரி மாவட்டத்தில் சில இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டு நூற்றுக்கு மேற்பட்டோர் உயிரிழந்தார்கள்.

புயல், வெள்ளம், நிலச்சரிவு இவற்றால் ஏராளமான இழப்புகள் ஏற்பட்டன. என்றாலும், தமிழக அரசு முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுத்ததன் காரணமாக பெருத்த சேதம் —குறிப்பாக உயிர்ச்சேதம் ஏற்படாமல் தவிர்க்கப் பட்டது.

1979 புத்தாண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த நேரத்திலும் வழக்கத்திற்கு மாறான இடைவிடாத மழையாலும், அதன் விளைவாக ஏற்பட்ட வெள்ளத்தாலும் சென்னை நகரிலும் தமிழகத்தின் வேறு பகுதிகளிலும் கடுமையான பொருட்சேதமும், உயிரிழப்புகளும் ஏற்பட்டு நம்மைப் பெருங்கவலைக்கு உள்ளாக்கி இருக்கிறது.

தமிழக அரசு பாதிக்கப்பட்டோரின் துயர் துடைக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. இந்தத் துயர் துடைப்புப் பணிக்கு உறுதுணையாக நின்று இரவென்றும் பகலென்றும் பாராமல் ஒத்துழைப்பளித்திடும் அரசு அலுவலர்களுக்கும், காவல் துறையினருக்கும் இராணுவத்தினருக்கும், பொதுமக்களுக்கும் இதர சமூக அமைப்புகளுக்கும், என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதிகமான மழையின் காரணமாகத் தண்ணீர்ப் பஞ்சம் நீங்கிவிட்டது என்கிற மகிழ்ச்சி ஒரு புறமிருந்தாலும், வீடு இழந்து வெவ்வேறு இடங்களுக்குக் குடிபெயர்ந்து உணவு சமைக்கவும் வழியில்லாது மக்கள் எத்தகைய துன்பங்களுக்கு ஆளாகி இருக்கிறார்கள் என்று பார்க்கும்போது, நெஞ்சம் நடுங்குகிறது.

அவர்களின் துன்பத்தைப் பற்றிக் கொஞ்சமும் எண்ணிப் பார்க்காமல் இந்தச் சந்தர்ப்பத்திலும் சமூக விரோதிகள் மேலும் அவர்களுக்குத் துன்பம் கொடுக்க முயற்சிப்பதை என்னென்று சொல்வது, துன்பத்திற்கு உள்ளானவர்களின் துயர் துடைக்க அரசு மேற்கொள்ளும் பணிகளைக் குறை சொல்ல வேண்டும் என்று

அரசியல் நோக்கத்தோடு சிலர் பழி சுமத்தும் காரியத்தில் இறங்கியிருக்கிறார்கள்.

வீடுகள் இழந்து வேறு இடங்களில் குடி பெயர்ந்து சொல்ல முடியாத கஷ்டங்களுக்கு ஆளாகி இருக்கும் ஏழை எளிய மக்களுக்கு அனுப்பப்படுகின்ற உணவைக்கூட பறித்துச் செல்லுகின்ற செயலில் ஒரு கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் ஈடுபட்டார் என்பதைக் கேள்விப்படும்பொழுது மனிதாபிமானம் உள்ள எவரும் அந்தச் செயலை வன்மையாகக் கண்டிக் காமல் இருக்க முடியாது.

அதே சமயம், தங்களுக்கு ஏற்பட்ட கஷ்டங் களைப் பெரிதுபடுத்தாமல் தொல்லைகளை



அமைதியாக ஏற்று ஒழுங்குடனும் கடடுப்பாட்டு உணர்வுடனும் நடந்து கொண்ட ஏழை எளிய மக்களை நான் பெரிதும் பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன்.

எரிமலை, பூகம்பம், கடற்சூறாவளி போன்ற இயற்கையின் தாக்குதல்கள் மிகுதியாக உள்ள ஜப்பான் நாடு பெரும் அளவுக்கு முன் னேறி இருப்பதற்கு அந்நாட்டு மக்களின் ஆற்றல் மிக்க உழைப்பும் தன்னம்பிக்கையுந்தான் காரணம்.

சமீபத்தில் நான் ஜப்பானில் இருக்கும் போதே ஒரு சமயம் அங்கு நிலநடுக்கம் ஏற்பட் டது. அந்தச் சந்தர்ப்பத்திலும் ஜப்பானிய மக்கள் கொஞ்சமும் பதட்டம் அடையாமல் தங்கள் வேலைகளில் தொடர்ந்து ஈடுபட்டார்கள். நில நடுக்கத்தால் பாதிக்கப்படாத வீடுகளை விஞ் ஞான அறிவு நுட்பத்துடன் அவர்கள் அமைத் திருக்கிறார்கள். அவர்களின் உழைப்பும், எந்தக் கஷ்டத்தையும் மன அமைதியோடு தாங்கும் துணிவும் அந்த நாட்டைப் பொருளாதார வள முடைய நாடாக உருவாக்கி இருக்கிறது.

தமிழ்ப் பெருங்குடி மக்களும் கடின உழைப் பில் ஈடுபட்டு, தமிழகத்தை வளம் சிறக்கச் செய் யும் பணியில் தங்களை முழுமையாக அர்ப்பணித் துக்கொள்ள இந்த நன்னாளில் சூளுரை மேற் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளு கிறேன்.

தொழிலாளர்களும், தொழில் அதிபர்களும் நாட்டின் நலனை மனத்தில் கொண்டு ஒத்துழைத்து, அதே சமயம் தொழிலாளர்கள் தங்களுடைய நியாயமான உரிமைகளை விட்டுக் கொடுக்காமல் தங்கள் கடமையைச் செய்து உற்பத்தியைப் பெருக்கிடும் பணியில் ஈடுபட வேண்டும் என்று வேண்டுகிறேன்.

தொழிலாளர்கள் மாணவர்கள் மீதுள்ள வழக்குகளை அரசு திரும்பப் பெற்றிருக்கிறது. அனைவரும் யாருக்கும் தொல்லை தராமல் தங்கள் தங்கள் கடமைகளைச் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்கிற நல்லெண்ணத்திலேயே அரசு இதைச் செய்துள்ளது. கோரிக்கை எதுவானா லும் அதனைச் சமரசமாகப் பேசி, சுமுகமான தீர்வு காணமுடியும் என்பதில் தமிழக அரசு உறுதியான நம்பிக்கை கொண்டிருக்கிறது.

1979–ஆம் ஆண்டு குழந்தைகள் ஆண் டாக அறிவிக்கப்பட்டுள்ளது. குழந்தைகளின் எதிர்காலம் சிறப்பாக அமைந்தால்தான் வருங் காலத் தலைமுறையும் சீரிய முறையில் உருவாக முடியும். குழந்தைகளின் நலன் பேணும் பலவிதத் திட்டங்களைத் தமிழக அரசு செயல்படுத்த இருக்கிறது என்கிற மகிழ்ச்சியான செய்தியை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

மாவட்டத் தலைநகரங்கள், தாலுகாத் தலைநகரங்கள் ஆகியவற்றில் குழந்தைகளுக் கான விளையாட்டு மைதானங்கள், அவர்கள் படிப்பதற்கு ஏற்ற நூல்களைக் கொண்ட குழந்தைகள் நூல் நிலையங்கள், குழந்தைக் கல்விக்கான இதர ஏற்பாடுகள் ஆகிய அனைத் தையும் செய்ய தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காக மத்திய அரசு ஒதுக்கியுள்ள நிதியை தமிழக அரசு முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும்.

அதுபோலவே, வெள்ளத்தால் பாதிக்கப் படாத வகையில் ஏழை எளிய மக்கள் வாழும் பகுதிகளை உருவாக்கும் யோசனையும் தமிழக அரசுக்கு இருக்கிறது. வெள்ளம் வந்தால் வீட்டில் இருந்து சாப்பிடக்கூட முடியாத அவல நிலைக்கு ஆளாக, ஏழைகளின் வீடுகள் தண்ணீரில் மிதக் கும் அபாயத்தைப் போக்கும் வகையில் திட்ட மிடப்படும் என்பதை மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆகவே, அனைவரும் அரசு நிறைவேற்ற இருக்கும் திட்டங்களுக்கும், ஆக்கப் பணிகளுக் கும், முழு ஒத்துழைப்பு அளித்து வளமான தமிழகத்தை உருவாக்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என்னுடைய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

# அல்லல் துடைத்த அமைச்சர்கள்



கடந்த ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதியில் இடைவிடாத அடைமழை காரணமாகத் தமிழ கத்தில் குறிப்பாகச் சென்னை மாநகரில் வரலாறு காணாத வகையில் வெள்ளம் பெருக் கெடுத்து, மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

வங்காளக் குடாக் கடலில் உருவாகியுள்ள புயலால் தொடர்ந்து வடகிழக்குப் பருவ மழை தீவிரமடைந்தது.



**சோதனை மேல் சோதனை!**

கடந்த நவம்பர் திங்களில் ஏற் பட்ட கடுமையான புயல், வெள் ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்க ளின் கண்ணீர் இன்னும் உலர வில்லை; அதற்குள்ளாகப் புத் தாண்டுத் தொடக்கத்திலேயே கடும் மழை வெள்ளம் வந்து கடும் சோதனைக்குள்ளாக்கி யிருக்கிறது.

கடந்த 77 ஆண்டுகளில் டிசம் பர் திங்களில் பெய்த மழைகளி லேயே, கடந்த டிசம்பர் திங்க ளில் பெய்த மழையின் அளவே மிக அதிகமாகும்!




சோதனை மேல் சோதனை வந்தாலும், அவற்றையெல்லாம் கொஞ்சமும் தளராமல், துவளா மல் நேருக்கு நேர் நின்று, போர்க் கால நடவடிக்கை போலவிரைந்து நடவடிக்கைகள் எடுத்து வரு கிறது தமிழக அரசு.

**சேற்றில் நடந்தார் முதல்வர்!**

சென்னையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை





# அட்டை சொல்லும் செய்தி



மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் பார்வையிட்டார்.

சேற்றிலும், சகதியிலும் நடந்து போய் அவர், வெள்ளத்தால் தவிப்போருக்கு ஆறுதல் கூறினார். வீடு இழந்தவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்படுவதையும் அவர் பார்வையிட்டார்.

புழலேரி, செம்பரம்பாக்கம், சோழவரம், பூண்டி ஆகிய ஏரிகளையும் முதல்வர் அவர்கள் பார்த்தார். ஏரிகளில் அதிகாரிகள் மேற்கொண்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைளைகயும் அவர் பார்வையிட்டார்.

**வேட்டி-சேலை :**


வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேட்டி, சேலைகளை முதல்வர் அவர்கள் வழங்கினார். கோட்டூர்புரம் பகுதியில் பாதிக்கப்பட்ட 3,200 பேர்களுக்கு ஜனவரி முதல் நாள் வரை முதல் கட்டமாக வேட்டி, சேலைகள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு முழுவதும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து ஆறுதல் கூற முதல்வர் அவர்கள் ஒரு வாரக் காலம் சுற்றுப்பயணம் செய்து நிவாரணப் பணிகளை நேரில் பார்வையிட்டார்.

ஜனவரி 4ந் தேதி கோவை சென்று அங்கிருந்து உதகை, குன்னூர், கோத்தகிரி, மேட்டுப் பாளையம் போன்ற பகுதிகளுக்குச் சென்று நிலச்சரிவிலும் மழையிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார்.

பிறகு தென்னார்க்காடு, மதுரை, முகவை மாவட்டப்பகுதிகளுக்கும் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார்.





**அமைச்சர்கள் ஆறுதல் :**

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள், வெள்ளத்தில் மிதக்கும் குடிசைகளைப் பார்வை யிட, தண்ணீரில் நடந்து போய் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார்.

சென்னை மாநகரில் தாழ்வான குடிசைப் பகுதிகள் நீரில் மூழ்கின. இதனால் பாதிக்கப்பட்ட மக்களை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் நேரில் சென்று பார்த்தார். அவருடன் சென்னை மாநகராட்சித் தனி அலுவலர் திரு இ. இராமதாஸ், ஆணையாளர் திரு ஆறுமுகம்



ஆகியோர் சென்றிருந்தனர் பாதிக்கப்பட்ட மக்கள் மாநகராட்சிப் பள்ளிகளில் தங்க ஏற்பாடு செய்யப்பட்டது. இவர்கள் வீடு திரும்பும் வரை மாநகராட்சி மூலம் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. மற்றும் அவர்களுக்கு நோய்த் தடுப்பு ஊசி போடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

**நவீன வடிகால்கள் :**

சென்னை நகரில் மழைக் காலங்களில் தேங்கியுள்ள தண்ணீரை உடனடியாக வெளியேற்றுவதற்கு ரூபாய் 30 கோடி செலவில் நவீன வடிகால்கள் அமைக்கத் திட்டமிட்டுள்ளது என்றும், அதை உடனடியாக மாநகராட்சி எடுத்துச் செய்யும்படி உத்தரவு போடப்பட்டுள்ளது என்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கூறினார்.

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் கொட்டும் மழையிலும் குடிசைப் பகுதிகளைப் பார்வையிட்டார். அங்கு நடைபெறும் நிவாரணப் பணிகளை அவர் துரிதப்படுத்தினார்.

**திடீர் சோதனை !**

மழையினால் பாதிக்கப்பட்ட பல்வேறு பகுதிகளில் தமிழக அமைச்சர்கள்நிவாரணப்பணிகள் எப்படி நடைபெறுகின்றன என்பதைத் திடீர்ச் சோதனை மூலம் கண்டறிந்தனர்.





சைதாப்பேட்டை, கிண்டி, காந்தி மண்டபம், கோட்டூர்புரம் ஆகிய இடங்களில் தங்கியிருக்கும் மக்களை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் சந்தித்து அரசு அளிக்கும் வசதிகள் சரிவர கிடைக்கின்றனவா எனக் கேட்டறிந்தார்.

வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ கல்வித்துறை மூலம் அமெரிக்க 'கேர்' நிறுவனம் வழங்கிய நன்கொடையைக் கொண்டு உப்புமா வழங்கப்பட்டது. வியாசர்பாடியில் இந்த உப்புமா தயாரிக்கப்படுவதை மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் பார்வையிட்டார்.

## குறைகளைக் கேட்டனர் :

அம்பத்தூர், கொரட்டூர் போன்ற பகுதிகளில் மாண்புமிகு போக்குவரத்துத்துறைஅமைச்சர் திரு பொன்னையன் அவர்கள் குடிசை இழந்த மக்களுக்கு ஆறுதல் கூறினார்.

கோபாலபுரம், சிந்தாதிரிப் பேட்டை, பேசின்பிரிட்ஜ் ஆகிய இடங்களில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களை மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் செல்வி பி. டி. சரசுவதி அவர்கள் சந்தித்து ஆறுதல் கூறினார்.

கோட்டூர்புரத்தில் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் சுற்றிப் பார்த்து மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் செம்பரம்பாக்கம் ஏரியைச் சுற்றிப் பார்த்தார். சத்தியவாணிமுத்து நகர், அயோத்தியாக் குப்பம் ஆகிய இடங்களில் பாதிக்கப்பட்ட குடிசைவாழ் மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறினார்.

## குடிசை கட்ட உதவி :

மழையினால் குடிசை இழந்தவர்களுக்குப் புதிதாகக் குடிசை கட்ட அரசு ரூ. 100 உதவிப்பணம் வழங்கும் என்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் தெரிவித்தார். வேளச்சேரிப் பகுதியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

மாண்புமிகு உணவு அமைச்சர் திரு ஜி. ஆர். எட்மண்ட் அவர்கள் பட்டினப்பாக்கம், காசிமேடு முதலான பகுதிகளுக்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சென்னை நகரில் பல பகுதிகளில் தமிழக அமைச்சர்கள் சேலை, வேட்டிகள் வழங்கினர். இரவு பகல் பாராமல் அமைச்சர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டனர்.

அமைச்சர்கள் திரு செ. அரங்கநாயகம் அவர்கள், திரு ஜி.ஆர். எட்மண்ட் அவர்கள், திரு ப. குழந்தைவேலு அவர்கள், திரு பெ. சவுந்தரபாண்டியன்அவர்கள் ஆகியோர் துணிகளை வழங்கினர்.

இந்த மழையினால் பெரிதும் பாதிக்கப்பட்டது, சென்னை நகரம்தான். சென்னையில் ஏறத்தாழ 40,000 குடிசைகள் முற்றிலும் அழிந்துவிட்டன. சென்னை நகரில் ஏறத்தாழ ஒன்றேகால் இலட்சம் பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.



## 50 கிலோ அரிசி !

சென்னையில் கடும் மழையில் வீடு இழந்து தவிக்கும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 50 கிலோ அரிசி கொடுக்கப்படுகின்றது. இதற்கான உத்தரவை மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் பிறப்பித்தார்.

இந்த 50 கிலோ அரிசி வழங்கப்படுவதைத் தமிழ்நாடு முழுவதும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அமல்படுத்த முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

சென்னையில் வீடு இழந்து தவிக்கும் 10 ஆயிரம் குடும்பங்களுக்கும் இந்த இலவச அரிசி வழங்கப்படும்.

## டாக்டர்கள் சிகிச்சை :

சென்னை நகரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 100 டாக்டர்கள் சிகிச்சை அளித்து வருகிறார்கள்.

வெள்ளத்தில் சிக்கியவர்களுக்கு உதவி செய்யவும், காலரா



# சென்னை மாநகராட்சியின் அரும்பணிகள்

சென்னை நகரில் விடாது பெய்த மழையின் காரணமாகச் சுமார் 22,500 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. சுமார் 1,12,500 பேர் வீடு இழந்தனர். 42 எருமைகள் மாண்டன.

நெல்சன் மாணிக்க முதலியார் சாலைப் பாலம் அடித்துச் செல்லப்பட்டது. நமசிவாயபுரம் பாலத்திற்குப் பெருத்த சேதம், மழையென சொன்ன மாத்திரத்தே நடுங்கும் கோட்டூர்புரம் மீண்டும் மிதந்தது வெள்ளத்தில். வியாசர்பாடியில் குடிசைகளில் வாழ்ந்து வந்த மக்களை விரட்டி விட்டு, அங்கெல்லாம் வெள்ளம் குடி புகுந்தது. அஜீஸ் நகர் சுடுகாடு வெள்ளக்காடாகிப் பிணம் புதைப்பதற்கு இடமே இல்லாமற் போயிற்று.

மாநகராட்சி அலுவலர்களும் ஊழியர்களும் பம்பரமெனச் சுழன்று, இரவு பகல் பாராமல் அவர்களது வீடுகளில் வெள்ளம் புகுந்து சேதம் விளைவித்ததையும் பொருட்படுத்தாது விரைந்து செயல்பட்டனர்.

பெரிதும் பாதிக்கப்பட்ட ஏழை மக்களுக்கு உடனடியாக மாநகராட்சிப் பள்ளிகளில் இடமளித்து அவர்களைப் பாதுகாத்தனர். காந்தி மண்டபம், பொறியியல் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, டாக்டர் அம்பேத்கார் கல்லூரி ஆகிய இடங்களில் பெரிய முகாம்களைத் துவக்கி வீடிழந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்குப் புகலிடமும் உணவும் அளித்து அல்லற்பட்டவர்களுக்கு உதவிகள் செய்யப்பட்டன.

சுமார் 275 இடங்களில் உணவு கொடுக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட குடிசைப் பகுதிகளுக்கே மாநகராட்சி ஊழியர்கள் நேரில் சென்று உணவுவளித்தது பாராட்டத்தக்க இக்குறுகிய 10 நாட்களில் 14,63,650 பேர்களுக்கு உணவு அளிக்கப்பட்டது ஒரு பெரிய சாதனையாகும். கடந்த 1977-ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்தின்போது 20 நாட்களில் 2,48,500 பேருக்கு உணவு வழங்கப்பட்டதை ஒப்பிட்டுப் பார்க்கையில், இப்பொழுது ஆற்றிய பணி தனித்துச் சிறந்து விளங்குகிறது.


இக்குறுகிய காலத்தில் 54,107 குழந்தைகட்குப் பால் வழங்கப்பட்டது. 30,008 பேருக்குக் காலரா தடுப்பு ஊசி போடப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் இரவு பகல் பாராமல் துயரங்களுக்கு ஆளான மக்களுக்கு உடனடி உதவி செய்து அவர்களுக்கு ஆறுதல் அளித்து ஆற்றிய பணி மக்கள் நெஞ்சத்தை விட்டு என்றும் அகலாது.

போன்ற தொத்து நோய் பரவாமல் தடுக்கவும் தமிழக அரசு தீவிரக் கவனம் செலுத்தி வருகிறது.

சென்னையில் இதற்காக 16 நடமாடும் மருத்துவ மனைகள் இயங்கி வருகின்றன. மொத்தம் 9 மருத்துவக் குழுக்கள் இப்பணியில் ஈடுபட்டுள்ளன.

இதேபோல சென்னை மாநகராட்சி சார்பில் 7 நடமாடும் மருத்துவ மனைகள் இயங்கிவருகின்றன. இந்தக் குழுக்கள் பணி புரிவதை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு சவுந்தரராசன் அவர்கள் பார்வையிட்டார்.



**சாலைச் சீரமைப்பு :**

வெள்ளத்தால் பாதித்து நாசமடைந்த சென்னை நகரச்சாலைகளை விரைவில் சீர்படுத்த மாநகராட்சி ஏற்பாடு செய்துள்ளது.

தமிழ்நாட்டில் சாலைகளைப் பழுதுபார்க்கவும், அபிவிருத்தி செய்யவும் ரூ. 7.5 கோடி செலவில் ஒரு திட்டத்தை மாநில நெடுஞ்சாலைப் பிரிவு மேற்கொண்டுள்ளது.

**சிறப்பான நிவாரணப் பணி :**

''வெள்ள நிவாரணப் பணிகளைச் சிறப்பாகச் செய்த் திரு எம்.ஜி.ஆர். அவர்களைப் பாராட்டுகிறேன்'' என்று முன்னாள் முதல்வர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் கூறியுள்ளார். மேலும் அவர் கூறியுள்ளதாவது:

''வெள்ளத்தில் சிக்கித் தவித்த மக்களைக் காப்பாற்ற முதலமைச்சர் எம். ஜி. ஆரும், மற்ற அமைச்சர்களும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுச் சிறப்பாகச் சேவை செய்தது மிகவும் பாராட்டுக்குரியது.

''அவர்கள் செய்த பணிகளை எண்ணிப் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், மக்களுக்கு உரிய நேரத்தில் உதவி செய்பவர்களைப் பாராட்டத்தான் வேண்டும்''

இவ்வாறு கடும் சோதனையிலும் பெரும் சாதனை படைக்கும் வகையில், தமிழக அரசு நிவாரணப் பணிகளை நெஞ்சமெல்லாம் வாழ்த்திடும் வண்ணம் செய்தது என்றால் அது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை!

# ஜனவரி 26

புனிதம் நிறைந்த ஆண்டுவிழா இது—
மும்முறை ஆசி பெற்றது !

49 ஆண்டுகளுக்கு முன் இன்றுதான்
பூரண சுய ராஜ்யம் வேண்டும் என்று
குரல் கொடுத்தோம் !.

—1950ல் இதே நாளன்றுதான் நாமே
குடியரசு ஆட்சி முறையை ஏற்றுக் கொண்டோம்
நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்
போன்ற உரிமைகளை உறுதிப்படுத்தும் அரசியல்
சட்டத்தையும் ஏற்றுக் கொண்டோம்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் இதே காலக்கட்டத்தில்தான்
அரசியல் சட்டத்தில் உறுதி செய்யப்பட்ட ஜனநாயக
பாதையில் மீண்டும் அடியெடுத்து வைத்தோம்.

இந்தக் குடியரசு விழாவை கொண்டாடும்போது
நமது உரிமைகள் மீட்கப்பட்டதற்காக
நன்றி செலுத்துவோம்.

சமத்துவத்துக்காகவும் சுதந்திரத்துக்காகவும்
உயிர் கொடுத்த உத்தமர்களின்
கனவுகளை நனவாக்கப் பாடுபடுவோம்.

சமூக, பொருளாதார, அரசியல் நீதிகளை
துரிதமாக நிலைநாட்ட நம்மை மீண்டும் அர்ப்பணித்துக்
கொள்வோமாக.

davp

# புதிய பேராசிரியர்கள்


பேரறிஞர் அண்ணா



எவ்வளவோ ஜீவராசிகளிலே மனிதன் ஒருவன். ஆனால் எல்லா ஜீவராசிகளையும் விடத் தானே மேலானவன் என்பது அவன் எண்ணம். அதனை, ''அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது'' என்ற மொழி பலப்படுத்தியும் விட்டது. மாடுபோல உழைக்கிறான்; நாய்போல அலைகிறான்; ஆந்தை போலக் கத்துகிறான்: ஆமை போல நகருகிறான் என்று கேலி செய்து ஜீவராசிகளை மனிதன் உவமை காட்டுகிறான். குரங்குச் சேட்டை, நரித் தந்திரம், புலிக் குணம், பாம்புப் பல்லன் என்று பலப்பல கூறுகிறான். சில சமயம், மையலில் சிக்கிடும்போது, குயில் போலக் கொஞ்சினாள், மயில்போல ஆடினாள் என்றும் சொல்கிறான். ஆனால் பெரும்பாலும், மனிதனுடைய நினைப்பு, மற்ற ஜீவராசிகளைவிடத் தான் உயர்ந்த நிலை எய்தி இருப்பதாகத்தான். மிருகத்தனம், மிருகப் பிராயம் என்ற சொற்றொடர்களை மனிதன் உபயோகிக்கிறான் கேவலத்தைக் குறிக்க; மிருகங்களுக்கு யார் வக்கீல்! குயிலின் நாதத்தைக் கேட்டு ரசித்தாலும், அதனை யார், கட்டணமாகக் கொண்டு, மனிதச் சமுதாயத்தின் மீது மானநஷ்ட வழக்குத் தொடர முன்வரப் போகிறார்கள்? அவ்விதம் வந்தாலும், நீதிமன்றத் தலைவர் மனிதராக இருப்பின் மற்ற ஜீவராசிக்குப் பிடிக்காது. மனிதனோ மற்ற ஜீவராசி தன்னை விசாரிக்கும் உரிமை பெற்றதாக ஒப்புக்கொள்ளவே மாட்டான். ஆண்டவனை அழைக்கலாம்; அழைத்தால் தந்திரம் தெரிந்த மனிதன் அரைப்பலம் கற்பூரத்தோடு வந்துவிடுவான்; நீதிச் சக்கரம் அப்போது எப்படி உருளுமோ யார் கூற முடியும்!

சிற்சிலர், மற்ற ஜீவராசிகளுக்காக வாதாடி இருக்கிறார்கள். மிருகங்களின் கஷ்ட நிவாரணச் சங்கத்தாரை அல்ல நான் குறிப்பிடுவது; மேதைகள், கவிகள் சிலர், மனிதனிடம் இல்லாத சில அபூர்வ குணங்கள் மற்ற ஜீவராசிகளிடம், மனிதனால் கேவலப்படுத்தப்பட்ட மிருகங்கள், பட்சிகள் ஆகியவைகளிடம் இருப்பதாக எடுத்துக் காட்டியுள்ளனர். மாளிகையின் மனோஹரத்தைப் பற்றிப் பாடிடும் சிருங்கார ரசக் கவிவாணர்களின் கலைக் கண்களுக்கு மயிலும் குயிலும், புறாவும் பிறவும், மாதரின் பண்புகளை விளக்கும் எழிலுருவங்களாகக் காட்சி தருவதுண்டு. காவியங்களிலே இத்தகைய வர்ணனைகள் ஏராளம்; அழகுபடவும் இதுபற்றிக் கூறியுள்ளனர். நான் குறிப்பிடுவது இவற்றை அல்ல. இது, வெறும் மனமகிழ்ச்சிக்குப் பயன்படும்; உவமை அழகை வெளிப்படுத்தும்; நான் குறிப்பிடுவது வேறு. அந்த மிருகங்கள், பட்சிகள் ஆகியவற்றினைக் காட்டி, மனிதருக்குப் புத்தி புகட்டியுள்ளனர் சிலர்; இந்தப்

சென்னை விலங்குகள் வதை தடுப்புச் சங்கத்தின் நூற்றாண்டு நிறைவு விழா 15-12-'78 அன்று நடைபெற்றது. இதனையொட்டி, விலங்குகளின் பெருமை குறித்துப் பேரறிஞர் அண்ணா அவர்கள், பல்லாண்டுகளுக்கு முன்பு எழுதிய சுவையான கட்டுரையை இங்கே வெளியிட்டுப் 'புதிய பேராசிரியர்களுக்கு' நாமும் வாழ்த்துத் தெரிவித்துக்கொள்கிறோம் .



புது முறையைய்யே நான் குறிப்பிடுகிறேன. பழைய முறைதான் உங்களுக்குத் தெரியுமே கடவுளின் தூதராகக் குரங்கையும், கடவுளின் வாகனமாகக் கருடனையும் சித்திரித்துக் காட்டி இருக்கிறார்கள் காவிய கர்த்தாக்கள். புதுமுறைக்காரர்கள் இதனைச் செய்யவில்லை. அவைகளைக் காட்டி, மனிதரை இடித்துரைத்துள்ளனர். கவிகள் மட்டுமல்ல, கவி பாடிடாத மேதைகள் சிலரும் இதனைச் செய்துள்ளனர். மனிதன், மனிதன் என்று பெருமையுடன் மார்தட்டிக் கொள்கிறார்களே, அது சரியா? அவ்விதம் பெருமைப்படக் காரணம் இருக்கிறதா? அவ்விதமான மேல்நிலை அடைந்ததாக எதை ஆதாரம் காட்டமுடியும் என்று கேட்டிருக்கிறார்கள் சிலர்-கொஞ்சம் காரசாரமாகக் கூட! . . .



தமிழ்நாட்டிலே, இந்தப் புது முறையான எண்ணத்தை அழகாக மட்டுமல்ல, ஆழ்ந்த கருத்துடன் உபயோகித்தவர், தோழர் மா. சிங்காரவேலு அவர்கள், மறைந்த அந்த மாவீரர், அறிஞர்களின் நூல்களைப் படிப்பதையே தமது பொழுது போக்காகக் கொண்டவர். எந்த விஷயத்தையும், காரணத்தோடு விளக்க வேண்டும் என்பதிலே மிக்க அக்கறை கொண்டவர்.

''மனிதன் தனது வாழ்க்கையிலே எந்த விதத்தில் உயர்ந்தவன் என்று சொல்லக்கூடும், அதிக விரைவில் செல்லுவதற்கு ரயிலும், ஆகாய விமானமும் கண்டுபிடித்தான் என்று சொல்லலாமா? பட்சிகள் மணிக்கு 60, 70 மைல் பறக்கின்றன. மான், குதிரை முதலிய விலங்குகள் மணிக்கு 30, 40 மைல் ஓடும் சக்தியைப் பெற்றுள்ளன. பங்களாக்களிலும், மாளிகைகளிலும் வசிக்கின்றானாம் மனிதன்; ஆனால் பட்சிகள் வெகு நேர்த்தியான கூடுகளில் வசிக்கின்றன. பனி நிறைந்த வட முனையில் ***(North Pole)*** பீவர் ***(Beever)*** என்ற ஜீவன் கட்டும் அறைகள், மனிதனால் கட்டமுடியாது. தேன் ஈக்கள் கட்டும் அறைகள், என்ன விசித்திரமானவை!

''ஆயுதங்களை உபயோகிப்பது மனிதன் ஒருவனுக்குத்தானா தெரியும்? கட்டைகளையும் தழைகளையும் குரங்குகள் தங்கள் எதிரிகள் மேல் எறிகின்றன. மனிதன், மிருகங்களைவிட அதிகமாகத் தன் கைகளுக்கு அகப்படும் பொருள்களை உபயோகித்துக் கொண்டானே ஒழிய, வேறுவித விசேஷமொன்றுமில்லை.

''கல்வி கற்பதால் ஏதாகிலும் வித்தியாசமுண்டோ வெனில், சிறு குட்டிக் குரங்குகளுக்கு அதன் தாய்மார்கள், இதைச் செய்யாதே, அதைச் செய் என்று கற்றுக் கொடுக்

கின்றன. பட்சிகள் பறக்க, தங்கள் குஞ்சுகளுக்குப் பறந்து காட்டுகின்றன. எலிக் குஞ்சுகளைப் பிடிக்கப் பூனைகள், பூனைக் குட்டிகளுக்குக் கற்றுக் கொடுக்கின்றன. மிருகத்திணின்று பெறப் பெற்ற மனிதன் தனது வாழ்க்கைக்கு வேண்டிய கல்வி கேள்விகளுக்கு ஆதாரம் மிருகங்களின் வாழ்க்கையிலிருந்தே சிறுபான்மையாகப் பெறப்பெற்றிருக்கிறான்'' என்று தோழர் மா. சிங்காரவேலர் கூறினார். அவருடைய வாதம், அந்த அளவோடு நின்று விடவில்லை.

''மனிதன், மிருகங்களைவிடக் கொடியவன், ஏனெனில் வாழ்விலே தீங்கையும் உண்டாக்கிக் கொண்டான். அந்தத் தீங்குகள் மூன்று:

1. பொதுவாக உபயோகிக்க வேண்டிய உணவு, உடை, இருப்பிடம் ஆகிய மூன்றையும் தனி உடைமை ஆக்கினது.

2. உபயோகித்து வரவேண்டிய பொருள்களின் மேல் இலாபம் என்ற திட்டத்தை ஏற்றி, இதனை நிலவரி என்றும் குடிவரி என்றும் வழங்கி, பெரும்பான்மையோருக்கு, வாழ்வுக்கு வேண்டிய அத்தியாவசியமான பொருள்களைப் போதுமானவரை கிட்டாமல் செய்வது வருவது.

3. மக்கள் வாழ்வுக்கு வேண்டியபொருள்களைப் பொதுவாக வினியோகித்து வரவொட்டாமல் சிலரே அப்பொருள்களைக் கையாண்டு வருவது.

இந்த மூன்று தீங்குகளை மனிதன் செய்ததன் பலன், பஞ்சம், பட்டினி, நோய், கொள்ளை, கொலை, போர் எனும் இன்னோரன்ன பிற கேடுகளையும் புரட்டு, பொய், வஞ்சகம், சூது என்பவைகளையும் உண்டாக்கி விட்டன. எனவே, மனிதன், மிருகங்களைவிட ஏதோ மகா மேதை என்று ஏன் கூற வேண்டும்?'' என்று அந்தப் பெருங் கிழவனார் கேட்டுச் சென்றார். மணிக்கணக்கிலே, நாட்கணக்கிலே, சிந்தனைக்கு வேலைதரும் அறிவுரை மட்டுமல்ல அது; மமதை கொண்ட மனிதன், வெட்கத்தால் தலையைத் தொங்க விட்டுக் கொள்ள வேண்டிய நிலையை உண்டாக்கும் உரை அது.

* * * *

அதுபோலவே, கவிமணி தேசிக விநாயகம் அவர்கள், மக்களின் வாழ்க்கை முறையிலே உள்ள கேடுகளையும் கொடுமைகளையும் கண்டு, கவலை கொண்டு, மனித சமுதாயத்துக்குப் புத்திபுகட்ட எண்ணுகிறார். இதற்குப் புத்தன் மொழி, பூர்விகப் பெரியவர்களின் மொழி ஆகியவைகளை எடுத்துக் காட்டுவதுதான் சாதாரணமாக உள்ள முறை. ஆனால் கவிமணிக்கு வயது 70 ஆகிறது; காலமெல்லாம் கவி பாடிப் பாடிப் பார்த்தார்; நாட்டு மக்களின் வாழ்விலே உள்ள கொடுமைகள் போகவில்லை; எனவே, ''சே! இந்த மனிதர்களுக்குப் புதிய பேராசிரியர்களைத்தான் நியமிக்க வேண்டும்'' என்று எண்ணினாரோ என்னவோ, மிருகங்களை அழைத்து வருகிறார் மனிதனுக்குப் புத்தி புகட்ட, மனிதனைக் கேலி செய்ய!


''காட்டில் ஓநாயும் நரியும் கடுவாயும் புலியும்
நாட்டு நாகரிகம் கண்டு நகைக்க லாச்சுதையோ''

என்று பாடி இருக்கிறார்.

மிருகங்கள் கண்டு கேலி செய்து சிரிக்கக் கூடிய விதமாக வாழ்கிறார்கள் நாட்டில் உள்ள மக்கள் என்று கூறுகிறார். மனிதன், மிருகங்களைக் கேலி செய்தான், கவி, மிருகங்களை விட்டு மனிதனைக் கேலி செய்யச் சொல்கிறார்!

சின்னாட்களுக்கு முன்பே, ''சுரபி'' என்றொரு தோழர் ''சக்தி'' என்ற தமிழ் இதழிலே, காலஞ்சென்ற மா. சிங்காரவேலர் போல, மனிதனால் பழிக்கப்படும் ஜீவராசிகளின் சார்பிலே, வாதாடிக் காட்டினார். ஆசாமி கொஞ்சம் தைரியஸ்தர் என்று நினைக்கிறேன். ஏனெனில், அவர் வாதாடியது பாம்புக்கு! ஆமய்யா ஆம்! விஷப் பல்லோடு இருக்கிறதே பாம்பு, கண்டதும் அடிக்கிறோமே, அந்தப் பாம்பின் சார்பிலே வாதாடி இருக்கிறார் இனிய எளிய கவிதை உருவிலே; மறுக்க முடியாத காரணங்களோடு, பாம்பின் வாயிலாகவே பேசுகிறார். மொழி இனிய தமிழ். கவிதையின் கருத்து இது:

பாம்பைப் பார்க்கிறான் ஒருவன். அவனுக்கு ஒரு சந்தேகம் வருகிறது. இவ்வளவு கொடிய பாம்பு ஏன் சிருஷ்டிக்கப்பட வேண்டும்? ஏனோ சிருஷ்டித்துத் தான் தொலைத்தாரோ கடவுள்? பார்க்கவே அருவருப்பான உருவமாவது அமைத்தாரா, பளபளப்பான உடல் தந்தார் ஏன்? என்று கோபம் பிறந்தது. ஆண்டவன் எதிரே வரவில்லை. ஆகவே அவரைக் கேட்க முடியவில்லை. பாம்பினையே கேட்டுப் பார்ப்போம் என்று எண்ணிக் கேட்கலானான். உள்ளே கடுவிஷம், வெளியே கண்கவரும் உடை. ஏ! பாம்பே! கொடியது செய்யும் உனக்கு ஏன் இந்தக் கோலாகலமான வாழ்வு! என்று கேட்கத் துணிந்தான்; கேட்கிறான்; கேளுங்கள்:



''பாம்பே உன்னைப் படைத்தவரார்
பளபள வென்றுடல் கொடுத்தவ ரார்
தீம்பா லமுதம் படைத்தாலும்
சீறும் மதியைக் கொடுத்தவ ரார்''

பாலூட்டி வளர்த்தாலும், பாம்பு கடிக்கத்தான் செய்யும்; கடித்தால் விஷம் ஏறத்தான் செய்யும். இதைக் கேட்டான் பாம்பை நோக்கி; இதே கருத்தை வேறு சில கவிதைகள் மூலமும் கேட்கிறான். பாம்பு பதில் கூறுகிறது:

இவ்வளவு சாதாரணமான கேள்வியைப் போய்க் கேட்கிறானே மனிதன் என்ற கோபம் பாம்புக்கு இருக்குமல்லவா! எனவே பாம்பு அலட்சியமாகவே பதில் சொல்கிறது.

''உன்னைப் படைத்த உத்தமனே
உலகை வகுத்த பெரியவனே
என்னை உலகில் படைத்திட்டான்
எழிலார் உருவங் கொடுத்திட்டான்''

என்று.

பாம்புக்குத் தெரியுமல்லவா, மனிதன் தன்னைப் பார்த்துக் கேட்டதற்குக் காரணம் அறியாமையாலே அல்ல, ஆணவத்தால் அவ் விதம் கேட்டான் என்று. எனவே, தீர்மானித்து விட்டது, அவனுக்குச் சுடச்சுடப் பதில் தர வேண்டுமென்று. கூறுகிறது கேளுங்கள்:

''உள்ளும் புறமும் ஒன்றென்றே
உலகின் தலைவன் நானென்றே
கொள்ளும் மனிதன் தன்னில்யாம்
கொடியம் அல்லேம் அல்லோமே''

மண்ணிலே நமக்கு நிகர் யார் என்று மமதை கொண்டுள்ளனரே மனிதர், அவர்களை விட, நாங்கள் ஒன்றும் கொடியவர்களல்ல என்று பாம்பு கூறுகிறது. அது தன் இனத்துக்காகவே பேச ஆரம்பித்துவிட்டது. மனிதன் திகைத்தல்லவா போயிருப்பான்! பாம்பு, மனிதனைப் பார்த்து, உன்னைவிட நான் கொடியவனல்ல என்று சொன்னால் மனிதன் என்ன எண்ணுவது!

என்ன தைரியம்! எவ்வளவு நெஞ்சறிந்த பொய்! விஷத்தைப் பல்லிலே வைத்துக் கொண்டு திரியும் பாம்பா, இப்படிப் பேசுவது! என்று மனிதன் எண்ணியிருப்பானல்லவா? பாம்பு அதனை உணர்ந்துகொண்டது. மனிதனை ஏதோ ஏட்டிக்குப் போட்டியாகத் தூற்றுவது என்று எண்ணியிருந்தால், உன்னை விட நான் ஒன்றும் கெட்டவனல்ல என்று கூறினதோடு பாம்பு ஓடிப்போயிருக்கும். தூற்றவில்லையே பாம்பு, குற்றச்சாட்டு அல்லவா செய்கிறது! எனவே தைரியமாகவே தன் கட்சியை எடுத்துப் பேச ஆரம்பித்துவிட்டது. மனிதன், பதில் கூறமுடியாமல் திணறும்படியான காரணங்களைக் காட்டுகிறது பாம்பு.

''பட்டுடையால் வெற்றுடலை மூடமாட்டோம்

பகட்டான ஆபரணம் பூண மாட்டோம்

சட்டமொடு சாத்திரங்கள் பேசமாட்டோம்

தந்திரமே மந்திரமாய்க் கொள்ளமாட்டோம்

பஞ்சைகளை அடிவயிற்றில் அடிக்கமாட்டோம்

பரமஉப காரியெனத் திரியமாட்டோம்

அஞ்செழுத்தும் ஆறெழுத்தும் ஓதமாட்டோம்

அகத்தினிலே பாதகத்தை வளர்க்கமாட்டோம்

இவ்வளவு தூரம் இடித்து இடித்து மனிதன் மூச்சுத் திணறும்படி அடித்துவிட்ட பிறகு, பாம்பு கேலியும் செய்கிறது மனிதனை.

''புனிதனவன் தந்த வுடல்தன்னைத்தாங்கித்

புற்றிடத்தே ஒடுங்கிஉயிர் வாழ்வோம்ஐயா



மனிதனெனும் பிராணியினைக்
கண்டபோழ்தில்

மைல்தூரம் பறந்தோடி ஒளிவோம்நாமே''

என்று கூறிற்று பாம்பு.

மோசக்காரன், கபடன் என்று ஆதாரத்தோடு மனிதனைக் கூறிவிட்டுப் போகிறது பாம்பு. மனிதன், என்ன பதில் சொல்வான்? என்ன இருக்கிறது சொல்ல?

பாம்பு முன்பெல்லாம் கவிகளுக்குப் பயன்பட்ட வகைக்கும், இப்போது பயன்பட்ட விதத்துக்கும் உள்ள வேறுபாடு குறிப்பிடக் கூடியது மட்டுமல்ல, கூர்ந்து கவனிக்கப் பட வேண்டியது. ஏனெனில், கலைப் புரட்சியிலே இது ஒரு பகுதி; முறை மாறுகிறது என்பதைக் காட்டுவது, இந்நிலை. இந்தப் புது முறைக் கவிதா உள்ளம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனிடம் பூத்துக் கனிந்து குலுங்குவதைப் பல இடங்களிலே பார்க்கலாம். ஓர் எடுத்துக்காட்டு. புறாக்களைப் பார்க்கிறார். கவி, பல புறாக்கள் ஒன்றுகூடி இரையுண்ணுகின்றன. நம் கண்களுக்கு அவை வெறும் புறாக்கள் தானே! அவர் கண்களிலே தெரிவது புறாக்கள் மட்டும் அல்ல.

''இட்டதோர் தாம ரைப்பூ
இதழ்விரித் திருத்தல் போலே
வட்டமாய்ப் புறாக்கள் கூடி''

இருக்கும் காட்சி தெரிகிறது. அழகு மட்டுந்தானா தெரிகிறது; அருமையான பாடமும் தெரியக்கண்டு, தெரிவிக்கிறார் நமக்கு.

....அவற்றின் வாழ்வில்
வெட்டில்லை குத்து மில்லை;
வேறுவே றிருந் தருந்தும்
கட்டில்லை; கீழ்மே லென்னும்
கண்மூடி வழக்கமில்லை.''

என்று கூறுகிறார். மனிதன், தலையைத் தொங்கவிட்டுக் கொள்ளத்தானே வேண்டும்! கல்லூரிகளிலே, உலகின் வரலாற்றினைப் படிக்கும் மாணவரிடையே கூடவன்றோ, சாப்பாட்டு இடபேதம் இருக்கிறது! இந்தப் புறாக்களைப் பார் மனிதா! வேறு வேறு இருந்து அருந்தும் கட்டு இல்லை; கீழ்மேல் என்னும் கண்மூடி வழக்கம் இல்லை என்று ஒரு குத்துக் குத்துகிறார் புரட்சிக் கவிஞர்.

பலர் புறாவைப் பார்ப்பர். ஆனால், பூரிப்புடன் பார்ப்பது அவைகளின் சரசத்தைத் தான்! கவி, அது தெரிந்தவர். தெரிந்து, அந்தக் காதல் ராஜ்யத்திலே உள்ள நீதியைக் காட்டுகிறார், மனிதர் திருந்தட்டும் என்ற எண்ணத்தோடு.



தங்கப்பதுமை போல் ஒருத்தி தனக்கென்று இருக்கும்போதுகூட, தையற்காரரின் திறமையாலோ, பூச்சுக்காரர் திறத்தாலோ நெஞ்சம் கொஞ்சம் மீனுக்குடன் வரும் பெண்ணைக் க்ண்டால் மனத்தைப் பறிகொடுக்கிற ஆண் உலகுக்கு, புறாவைக் காட்டிப் புத்தி புகட்டுகிறார் கவி.

''ஒருபெட்டை தன் ஆணன்றிவறொன்
வேறொன்றுக் குடன்படாதாம்
ஒரு பெட்டை மத்தாப் பைப் போல்
ஒளிபு ரிந்திட நின்றாலும்
திரும்பியும் பார்ப்ப தில்லை வேறொரு
வேறொரு சேவல்!''

என்று கூறுகிறார் கண்ட இடத்தில் கண்ணையும் கருத்தையும் அலையவிடும் காளைகளுக்காக வேண்டி!

''அப்படியே நடந்துவிடுகிறதா? தகாத செயலே நேரிடாமலா போகும்?'' என்று கேட்பர் சிலர்; இது தெரிந்து கவி,

''அவள் தனி; ஒப்பவில்லை;
அவன், அவள் வருந்தும் வண்ணம் தவறி
ழைக்கின்றான்''

என்று கூறுகிறார். எந்த நிலையில் ''இக்கட்டு'' நேரிடுகிறது என்பதை விளக்க, புறா தனியாக இருக்கிறது; நாதனில்லா நேரம் மற்றோர் புறா. வலியச் சென்று வம்பு செய்கிறது; வருந்தும் வண்ணம் தவறும் இழைக்கிறது. முற்றும் துறந்த முனிபுங்கவரின் தர்ம பத்தினி அகலிகைக்குக்கூட இக்கதி நேரிட்டு இருப்பதாகப் புண்ய கதை இருக்கும்போது, ''தவறு இழைக்கும்'' நிலை புறாக்களிடையே இருப்பது அக்ரமமா! அவை, ஆகமம் பயின்றனவா, யோகம் புரிந்தனவா? அகலிகை யாவது, தெரிந்து திகைத்தாள், தடுத்தாள் இல்லை என்றார் ஒரு கவி; மற்றொரு கவி, தெரிந்தாள், மகிழ்ந்தாள், பெருமையுடன் என்று தெரிவிக்கிறார்; புறா தகாத செயல் செய்யும்போது நமது கவி, அவள் வருந்தும் வண்ணம் அவன் தவறு இழைப்பதாகத்தான் சொல்கிறார்.

''வருத்தமோ, மகிழ்ச்சியோ தவறு தவறுதானே!'' என்று நாம் கேட்போமல்லவா? கவி அதற்கும் இடம் கொடுக்கவில்லை. அந்தச் சந்தர்ப்பத்தையும் வீணாக்கவில்லை, மனிதனுக்கு மதி புகட்ட உபயோகித்துக் கொள்கிறார். தகாத செயல் நடந்துவிட்டது ஏன்?

. . . . அன்பு
தவழ்கின்ற புறாக்கள் தம்மில்
ஒரு சில தறுதலைகள்
கவலைசேர் மக்க ளின்பால்
கற்றுக்கொண் டிருக்கக் கூடும்''

என்கிறார் கவி. இன்னமுமா சூடு தர வேண்டும்? போதாதா?

பட்சிகளைப் பழைய காலக் கவிகள் தூதுபோக, சோலையில் பாட, ஆட, சுந்தரிகளின் கூட்டில் தங்க வைத்தனர்; இதுபோல், பேராசிரியர்கள் நிலையைத் தந்தது இல்லை. பாம்பு கடவுளருக்குப் பள்ளி கொள்ளவோ, ஆபரணமாக இருக்கவோ, உபயோகிக்கப்பட்டு வந்ததே தவிர, மனிதருக்குப் புத்தி புகட்ட அழைக்கப்பட்டதில்லை. பண்டைக் கவிகள்.




''நாதர் முடிமேலிருக்கும் நாகப் பாம்பே
நச்சுப்பையை வைத்திருக்கும் நல்ல
பாம்பே
பாதாளத்தில் குடிபுகும் பைக்குள் பாம்பே
பாடிப்பாடி நின்று விளையாடு பாம்பே!

என்றுதான் பாடினார்கள். பாம்பு பாடம் கூறவந்ததாகப் பாடியதில்லை.

புதுப்பாடல் மட்டுமல்ல; புதுமுறை என்பதாலேயே இதனைக் கலைத்துறை மூலம் கருத்திலே தெளிவு புகுத்த வழி ஏற்படவேண்டும் என்று ஆசைப்படும் நாம், வரவேற்கிறோம் பாரதிதாசன், இந்தக் கலைப்புரட்சியின் கர்த்தா. அவர் பாடினார் என்பது மட்டுமல்ல, அத்தகைய பாடல்களைப் பாட வேண்டும் என்ற ஆர்வம் எழச் செய்துவிட்டார். கவிதை பாடியது மட்டுமல்ல, அவ்விதக் கவிதா உள்ளம் ஏற்படச் செய்துவிட்டார்.

* * * * * *



''புரட்சிக் கவிஞரின், கவிதா மண்டலத்திலே உலவுபவர்களிலே, தோழர் சிவப்பிரகாசம் ஒருவர். அவர், எட்டு ஆண்டுகளுக்கு முன்பு, இப்புது முறையிலே ஓர் கவிதை இயற்றினார்.

பாம்பு கேலி செய்கிறது மனிதனைப் பார்த்து சுரபியின் பாடலில், 1946-ல் ஜூன் சக்தி' இதழில், புதுவைச் சிவப்பிரகாசம் அவர்களின் கவிதையிலே, பட்சிக்கூட்டம் முழுவதுமே சேர்ந்துகொண்டு அவரைப் படாத பாடு படுத்துகிறது. அவர் ஒரு தவறும் செய்யவில்லை. கவிதை எழுதலாம், அதற்கான மனமகிழ்ச்சி பெறலாம் என்று சோலைக்குப் போகிறார். அங்கே, கிளியும் மைனாவும் காக்கையும் இராசாளியும் பிறவுமாகப் பல பட்சிகள் உள்ளன. சும்மா இருந்தனவோ புள்ளினங்கள்! இவரைக் கண்டதும், மனித குலத்தைக், குறிப்பாகத் தமிழரையே தாக்கத் தொடங்கின. தமிழரின் ஜாதி பேதம், மாயாவாதம் பேசும் நிலை, அடிமைத்தனம், மூடப் பழக்க வழக்கங்கள் யாவற்றினையும் கண்டிக்கவும் கேலி பேசவும் முனைந்தன. கேட்டபோது கவிக்குக் கோபம் பிறந்தது. என் தமிழ் இனத்தை இப்பறவைகள் இப்படியா கேலி செய்வது என்று எண்ணினார்; அவைகளின் நாவை அடக்கப் பதில் கூறத் துடித்தார்; முடியவில்லை. ஏன்? பட்சிகள் கூறியவை அனைத்தும் மறுக்க முடியாத உண்மைகள்!

''கேவலப் பட்சிகள் கேலி என்னைச் செய்குவதோ?
நாவை அடக்காமல் நான் சும்மா ஏகுவதோ?
என்றெண்ண யானும் பதில்தேடிச் சொல்லுதற்கு
முன்வந்தேன்; ஆனால் முடியாமற் போயினதே!''

என்று கவி கூறுகிறார்.

அவர் மட்டுமென்ன, நம்மாலும் முடியாது போலிருக்கிறது அந்தப் பட்சிகள் செய்த நையாண்டிக்குப் பதில் கூற, இதோ அவருடைய கவிதை, பாருங்கள் !



தண்ணாறு பாயும் தடஞ்சோலை நாடிநான்
பண்ணமைந்த பாவொன் றெழுதுதற்குச் சென்றிருந்தேன்
அங்கோர் மரத்தினிலேஆறெழிற் புள்ளினங்கள்
தங்கி யிருந்து நலமுரைத்துச் சந்தோஷப்
பேரொலியே செய்து பெருமகிழ்வுகொண் டிருக்கும்
நேரத்தில் என்வருகைகண்டு திடுக்கிட்டுப்
பேச்சை நிறுத்தின, பின்பு சிலநிமிடம்
மூச்சன்றி வேறு முணுமுணுப்பு மில்லை;யங்கே
என்னுளத்தை ஈர்த்த எழிலார்ந்த புள்ளி னத்தின்
மென்மொழியைக் கேட்பதற்கு மேடை யொன்றில் யானமர்ந்தேன்.
நேரஞ் சிறிதுசெல நீண்டவால் புள்ளொன்று
'யாரிவன்?' என்றோர் வினாவையெழுப்பிற்று.
நாளெல்லாம் மக்களிடம் நன்கு பழகியுள்ள
நீள்மூக்குக் காகம் நெடுநேரம் பார்த்தென்னை,
'வில்லேந்தி நம்மையெலாம் வேட்டையிடும் வேடனல்ல;
கல்லுளந்தான் பெற்ற கயவனல்ல; கண்ணிவைத்துப்
பற்றிச் செலவந்த பாவியல்ல!' என்றுரைக்க,
'மற்றிவன்யார்?' என்றொரு மைனாப்புள் கேட்டதுவே.
மாடப் புறாவொன்று வாய்திறந்து 'இன்னவன்
மூட நம்பிக்கையில் மொய்த்த தமிழ் நாட்டான்!
ஆயினுந் தன்னினத்தோர்க் காறறிவுண் டென்றுரைத்து
நாயினைப்போல் சண்டையிடும் நாசமுறுங் கூட்டத்தான்!'
என்றுரைக்க, மற்றவைகள் ஈ ஈ ஈ! ஊ ஊ ஊ!
என்றடக்க மாட்டாச் சிரிப்புச் சிரித்தே.
'இவனா? அவன் இவனா?' என்றுமுறையாக
அவமானம் பண்ணின! அச்சமயம் ஓர்சிட்டுப்,
'பேதம் நமக்கில்லை; பெண்ணடிமை கொள்வதில்லை
வாதிட்டு மக்களுக்குள் பேதம் பலவுரைத்தும்,
மாதர் தமையடிமை செய்தும் இழித் துரைத்தும்
தீதற்று மாளும் சிறுசெயலார் கூட்டத்தை
சேர்ந்தோன் இவன்' என்று செப்பிடவே மற்றவை
ஆர்ந்த ஒலிச்சிரிப்பால் ஆ ஆ ஆ ! வென்றனவே.
அவ்வமயம் அன்றில் பறவைதான் முன்வந்தே,
இவ்வுலக வாழ்வில்நாம் இன்பம் அடைகின்றோம்
துன்பம் வெறுக்கின்றோம்; தூயநம் பெண்ணினத்தின்
இன்காதல் நற்சுவையால் என்றும் மகிழ் கின்றோம்!
ஆனால் மனிதர் அதைவெறுத்துக் கண்ணுக்குக்
காணாத ஒருலகங் கற்பித்த சாத்திரத்தைக்
கட்டி யழுகின்றார்; காதற் பயிர்தனையே
வெட்டி யெறிந்தே விதியென்று சொல்லு கின்றார்;
இன்ப வழிகாண மாட்டாமல் எப்பொழுதும்
துன்பத்தைத் தேடித்துயர் கொண்டழி கின்றார்!
அந்த மனிதராம் ஆறறிவுக் கூட்டத்தின்
சந்ததியில் வந்தோன் இவனொருவன்! ஆகையினால்
இந்த நிலையில் இவன்நமக்கு மேலென்றே
எந்த அறிவால் இயம்புவது?' என்றுரைக்கச்
'சீச்சீ! இவன்நிலையைச் செப்பாதீர்! மானமற்ற
பேச்சால் மனிதர்கள் மேலென்று பேசிடுவார்'
என்றதுநல் அன்னப்புள்! எல்லாமும் 'வெட்கம்' என்றே
விண்ணதிரக் கூவின; வெட்கித் தலை குனிந்தேன்!
பின்போர் மரங்கொத்தி பேச்சைத் தொடர்ந்ததுவாய்த்
'தன்முயற்சி யால்நாம் தரணியிலே வாழ் கின்றோம்;
தெய்வச் செயலன்றி நம்மால் சிறிதேனும்
உய்ய முடியாதென் றொப்பாரி வைக்கின்ற
சோம்பேறிக் கூட்டத்தைச் சேர்ந்தோன் இவன்' என்ன,
'ஆம் ஆம் இவர்கள் அசைவதும் நிற்பதும்,
உண்ப துறங்குவதும் ஊரைஏ மாற்றுவதும்,
அண்டை அயலோர் அழிகவென எண்ணுவதும்,
ஏமாந்தோர் சொத்துக் கெசமானர் ஆகுவதும்,
தீமை பலவாக மென்மேலுஞ் செய்குவதும்
எல்லாம் அவன் செயலே!' என்றே கிளியொன்று
சொல்லிற்று கிண்டலாய்! அவ்விடத்தில் சூழ்ந்திருந்த

புள்ளினங்க ளெல்லாம் பொழிலதிரத்
தாம்சிரித்தே

எள்ளி, 'இவனா?' வென் றேயுரக்கக்
கத்தினவே!

இந்த மொழியெல்லாம் என்னுளத்தைத்
தாக்கியே

சிந்தை தனைமாற்றிச் சீற்றத்தை யூட்டின!

'கேவலப் பட்சிகள் கேலிஎனைச்
செய்குவதோ?'

நாவை யடக்காமல் நான்சும்மா ஏகுவதோ?

என்றெண்ணி யானும் பதில்தேடிச்
சொல்லுதற்கு

முன்வந்தேன்; ஆனால் முடியாமற்போயிற்றே'

அய்யறிவு புட்கள் அவமானம் பண்ணியதால்
மெய்குன்றிப் போனேன் நான்!
மேன்மைப் பகுத்தறிவு

வாய்ந்த மனிதரின் வாழ்க்கையிலே ஊழல்கள்'
தோய்ந்திருக்கு தென்றே சொலவந்த
புள்ளினத்தைக்

கல்லால் எறிந்தேனும் காலொடித்துக்
கையொடித்துக்

கொல்ல நினைத்தேன் ! அதுசமயம்
கோலமயில்,

''ஆர்ந்த பகுத்தறிவு வாய்ந்தவர்தான்
ஆனாலும்

தேர்ந்த அறிவால் செயலொன்றும்
செய்ததில்லை!

பண்டை நிலைதன்னைப் பாராட்டிப்
பேசிடுவார்,

இன்றவர்தம் மேன்மை இழிவாகும் !
மற்றுந்தான்

நம்போல் சுதந்தரம் நல்லுரிமை இல்லாமல்
தம்முடைய நாட்டைப் பிறர்ஆள விட்ட

அடிமையரைச் சேர்ந்தோன் இவன்'
என்ன, 'ஆகா!

கொடுமை இவன்நிலை! மிக்க கொடுமை
யந்தோ

நாட்டை யிழந்து நலனொன்றுங் காணாமல்
கேட்டை யடைவோனைக் கேலியொன்றும்
செய்யாதீர்

என்றிரா சாளி இயம்பிற்று ; மற்றவைதாம்
கண்ணீர் வடித்துப் 'பரிதாபம்' என்றனவே!

என்னை மிகவே இழித்துரைத்தும்,
பின்புதாம்

நன்றிரக்கங் கொண்டும், நனிவருந்தும்
புள்ளினத்தின்

பேச்சால், எனது பெருமையிழந்தே சிறிய
பூச்சாகி விட்டேன்!' என்வீட்டு

மாடியிலே தங்கிக் கவிதை வரையாமல்
நாடிஇச் சோலையை நானெதற்கு வந்த
டைந்தேன்?'

என்று மிகவும் மனம்வருந்தி ஏக்கமுடன்
என்னில்லம் நோக்கி எழுந்திருந்தேன்;
சாக்குருவி,

'மூடச் செயலெல்லாம் முற்றும் ஒழியாமுன்
நாடாது தன்னரசு' என்று நவின்றதுவே!

அன்னவற்றைக் கேட்டே அவசரமாய்
வீடுதான்

சென்றுவிட்டேன். என்நாட்டுச் செந்தமிழ
வீரர்களே!

எள்ளி நகையாடி நம்மை இழிவுரைத்த
புள்ளினத்தின் பேச்செல்லாம் பொய்க்காமல்
உம்மிடத்தே

கூறிவிட்டேன்; நீங்கள் கொடுக்கும் பதி
லென்ன?

ஆறறிவால் ஆய்வீர் அமர்ந்து!



இத்தகைய கலைப் புரட்சிக்குக் கவிஞர் பாரதிதாசன், தம் திறமையைப் பயன்படுத்துகிறார் என்பதுமட்டுமல்ல அவரை நாம் புகழ்வதற்குக் காரணம், கலைப் புரட்சி மனப்பான்மையைத் தமிழகத்தில் ஏற்படுத்திவிட்டார். அவருடைய வெற்றி அது!

முன்பெல்லாம், மனித குலத்தால், இகழ்ச்சியாகக் கருதப்பட்டு, கேலி செய்யப்பட்டு வந்த பாம்பு முதல் சிட்டு வரையிலே, மனிதன் இருக்கும் நிலையையும் அவனுடைய நினைப்பையும் செயலையும் கேலி செய்து, அவனுக்குப் புத்தி புகட்டும் பேராசிரியர்கள் ஆக்கப்படுவது, உண்மையிலே புதுமுறை அல்லவா, கலைப்புரட்சி அல்லவா!!

['திராவிடநாடு' 21-7-1946 இதழில்
வெளிவந்த கட்டுரை.]

சென்னை இசைக் கழகத்தின் தலைவர் அவர்களே! நிர்வாகிகளே! இங்குக் கூடியுள்ள இசை வல்லுநர்களே!

இசையை வளர்ப்பதில் பேரார்வம் கொண்டு ஆதரவு நல்கும் பெரியோர்களே! தாய்க்குலமே! விருப்பு வெறுப்பின்றி இசைப் பேரறிஞர்களுக்கும் மக்களுக்கும் இடையில் நல்லதொரு தொடர்பேற்படுத்த அயராது உழைக்கும் இசைத் திறனாய்வாளர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கங்களைக் காணிக்கையாக்குகிறேன்.

இசைக் கலைக்குத் தொண்டு செய்யும் விற்பன்னர்களும் இசைக் கலையை இல்லத்தில் வளர்க்கும் தாய்மார்களும் நல்ல இசையை ரசனையுடன் பாராட்டிப் போற்றும் பெரியோர்களும் இங்கு இசை விழாவைத் தொடங்கி வைக்கக் கூடியிருக்கிறீர்கள்.

இத்தகைய மேலோர் குழுமிய அவையில் நிகழவிருக்கும் இசை விழாவைத் தொடங்கி வைக்குமாறு என்னை அழைத்திருக்கிறார்கள். ஆனால் இந்த விழாவைத் தொடங்கி வைப்பது உண்மையில் நானல்ல; நீங்கள்தான் !

இறைவனின் தேரை இழுப்பதற்காக, அவ்வூர் மரபுப்படி குறிப்பிட்ட ஒருவரையோ, அல்லது அமைச்சர் ஒருவரையோ அழைப்பார்கள். அவரும் தேரின் வடத்தைத் தொடுவார். அதை ஒருவர் தூக்குவதுகூட எளிதல்ல. ஊர்மக்கள் ஒன்று கூடித் தேரை இழுத்து, ஊர்வலம் சுற்றி மீண்டும் தேரை நிலைக்குக் கொண்டு வருவார்கள். ஆனால் ஏடுகளிலே வெளிவரும், ' அமைச்சர் அல்லது ஒரு பிரமுகர் தேரை இழுத்தார்" என்று.

அதுபோல் உங்களில் ஒருவனாக, இசையை, இசை மேதைகளை ஆராதிக்கும் முதற்றொண்டனாக, இந்தப்





பணியில் ஈடுபட வாய்ப்பளித்துள்ளீர்கள்.

தமிழகத்தின் முதல்வ.. என்பதற்காக அல்லாது, இசை, இசையோடு தொடர்பு கொண்ட நாடகம், மற்றும் நுண்கலைகள் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்ட ஒரு ரசிகன் என்ற முறையிலும் இந்த உயர்வு எனக்கு அளிக்கப்பட்டிருப்பதாகவே நான் கருதுகிறேன்.

இந்த இசைக் கழகம் பொன்விழாச் சிறப்புப் பெற்று, இப்பொழுது 52-வது விழாவை எட்டியிருக்கிறது.

52-என்ற எண்ணின் கூட்டுத் தொகை ஏழு.

இசை,ஏழு ஸ்வரங்களில் உண்டாவது.

ஆகையால் இந்த விழா இசையோடு எவ்வளவு நயமாக ஒட்டியிருக்கிறது என்பதை இதிலேயே உணர்ந்து நான் ரசிக்கிறேன்.

‘‘ஏழிசையாய்—இசைப் பயனாய் நின்றவன்’’

என்று நம் முன்னோர்கள் வழிபாட்டில்கூறியுள்ளார்கள். அந்த ஏழு இங்கேயும் இருக்கிறது.

நாத உபாசனை என்பார்கள் பெரியோர்கள். இசை மூலமாக இறைவழிபாடு செய்வது என்று அதற்குப் பொருள்.

இறை வழிபாடு என்றால் இறைமைக் குணங்களைக் கைக்கொண்டு அதன் வழிப்படுதல் என்றும் பொருள் கொள்ளலாம். மனிதன் மனிதனாக வாழ்ந்தால் அவன் கடவுளின் வாரிசாகக் கருதப்படுவான். அந்த மனிதத் தன்மையை அடைவதற்குத் தன்னைப் போல் பிறரை நினைக்கும் குணம் தேவை. எல்லாம் ஒன்று என்ற எண்ணம் உண்டாக வேண்டும்.

இசை ஒன்றுதான் ‘‘ஒன்ற’’ வைக்கும் ஆற்றல் கொண்டது. பாடுகின்றவர் சுருதியோடு ஒன்றும் போது, மற்றவர்கள் அவரோடு ஒன்றிவிடுகிறார்கள். சுருதி கொஞ்சம் கலைந்தால்கூட ஒன்றுகிற நிலை கலைந்துவிடும்.







உருகிப் பாடும்போது கண்களில் நீர் மல்குவதைக் காண்கிறோம். இது தனக்காக உகுக்கும் கண்ணீரல்ல. மற்றவருக்காக மற்றவரின் மனத்தில் நிலையான ஆனந்தத்தை ஏற்படுத்த உகுக்கின்ற கண்ணீர்!

‘‘காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி’’

என்ற செய்யுள் வரியை நாம் கேட்டிருக்கிறோம்.

கண்ணனைக் காதலனாக-சேவகனாக-சற்குருவாக-சீடனாக-காதலியாகக் கூட பாவித்துப் பாடினார்கள். அந்த பாவம் அய்க்கிய மடைந்த ஆன்மாவின் புனித சங்கமத்தில் உருவாகும் உன்னத நிலை.

நாத உபாசனை (இசைவழிபாடு) இருக்கிறதே, இதில் எந்த விதமான பேதத்திற்கும் இடம் கிடையாது. மனம் உள்ளவர்களின் மனங்களையெல்லாம் ஈர்க்கும் ஆற்றல், அதாவது இசையவைக்கும் சக்தி கொண்டது அந்த இசை.

நாத உபாசனை என்று சொல்வதோடு—

‘நாதயோகம்’ என்றும் சொல்வார்கள்.

‘‘பூதங்கள் ஒத்துப்
புதுமை தரல் விந்தையெனில்
நாதங்கள் சேரும்
நயத்தினுக்கு ஈடாமோ.’’

என்றார் பாரதியார்.

நாதங்கள் சேரும் நயம் தான் நாத யோகம்.

அத்தகைய புனிதமான பேரானந்த மண்டலத்திற்கு நம்மை அழைத்துப் போகும் நல்லிசை—மரபுவழி இசையாகும்; அதாவது கருநாடக சங்கீதமாகும்.

பொதுவாக—இசை நம்முடைய தமிழ்க் குடும்பங்களில் ஒன்றிப் போன ஓர் அம்சம் ஆகும். சின்னஞ் சிறு குழந்தையைத் தூங்கவைக்க, தாய் குழந்

தையைத் தொட்டிலில் போட்டுத் தாலாட்டுப் பாடுவது வழக்கம்.

அம்மானை ஆடுவதற்கு ஒருவகைப் பாட்டு-இசையும் பந்தாடுவதற்கு இன்னொரு வகைப் பாட்டு இசையும் இருந்தன. காவடியாட்டத்திற்கும் இறை வழி பாட்டுக்கும் சந்தமும் உருக்கமும் கொண்ட இசையை நம்முடைய தமிழ்க் குடும்பங்களில் பின்பற்றினார்கள்.

அக்கால இலக்கியத்தைப் பார்த்தாலும் இசையினுடைய முக்கியத்துவம் நமக்குப் புலப்படுகிறது. அன்று வாழ்ந்த பாணர்கள், மன்னர்களைக் கண்டு, யாழ் மீட்டி, இசை பாடித் தம் திறமைக்கு ஏற்ப அன்பளிப்பாகப் பொன்னும் மணியும் பெற்று வீடு திரும்புவார்களாம்.

வழியிலே பாலை நிலங்கள், காடுகள், ஆகியவற்றைக் கடந்து வரும்போது—அவர்களைக் கள்ளர்கள் வழிமறித்துக் கொள்ளையடிக்க முயலுவார்களாம். அந்தப் பாணர்கள் இனிமையான பாடல்களைப் பாடி, அந்தக் கள்ளர்களையும் மயக்கி, அவர்களிடமிருந்து தப்பித்துச் சென்றுவிடுவார்களாம்.

கோவில்களில் மங்கல விழாக்களில் நாதசுரம் இசைப்பது தமிழர்களுடைய வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. இந்த நாதசுரம் மங்கல விழாவுக்கே உரியது.

மங்கல இசைக்கு என்று தனியாகவும், மற்றைய நிலையை வெளிப்படுத்த வேறு வகையாகவும் வாத்தியங்களை வகுத்துக் கையாண்டவர்கள் நம் மூதாதையர்கள்.

அக்காலத்திலிருந்து நாட்டியம் தனிச் சிறப்புப் பெற்று வந்திருக்கிறது! இசை, காதால் கேட்டு அனுபவிப்பது, நாட்டியமோ கண்ணால் பார்த்தும் காதால் கேட்டும் அனுபவிப்பது!

தமிழ் நூலான சிலப்பதிகாரத்தில் இசையையும் நாட்டியத்தையும் பற்றிய எண்ணற்ற விசேடக் குறிப்புகள் கூறப்பட்டுள்ளன. நாட்டியம் மகேசனைத் தொழுவதற்கும் மன்னர்களை மகிழ்விப்பதற்கும் பயன் பட்டது. நாட்டியமாடுவதற்கென்றே ஒரு பகுதியினர் இருந்த காலம் அது. பிற்காலத்தில் அந்த அற்புதக் கலை எல்லோருக்கும் பொதுவாகப் பரவி, இன்னார்தான் ஆடவேண்டும் என்ற நிலை மாறி, ஆடற் கலையில் வல்லவர்களாக எல்லோருமே ஆகலாம் என்ற அளவுக்கு, விரிவடைந்திருக்கிறது.

இதற்குக் காரணம் என்ன? இசை தரும் இன்ப நிலைதான்.

பசுவும் பாம்பும் கூட இசையில் மயங்கும். மயிலும் மானும் கூட இசையினால் ஆடி மகிழும்; துள்ளி ஓடி மகிழும்.

ஏன் அப்படி!—


காதில் இன்பத் தேனைப் பாய்ச்சுகிறது இசை!


அந்த இசையின் ஒலி இதயத்தில் எதிரொலிக்கிறது!

அதோடு உடல் முழுவதும் பரவுகிறது.

ஒவ்வொரு நரம்பையும் தட்டி எழுப்புகிறது!

பரவசம் ஊட்டுகிற ஓர் அபூர்வ மின் சக்தியாகி, நம்முடைய உடலின் ஒவ்வோர் அணுவையும் தீண்டி, ஒருவிதப் புதுமைக் கிளர்ச்சியை—மலர்ச்சியை—நெகிழ்ச்சியை—பூரிப்பை உண்டாக்கி விடுகிறது. நம்மிடமுள்ள எல்லாவற்றையுமே தன்வசப்படுத்திக் கொண்டு விடுகிறது.





சோர்வு உற்சாகமாகிறது.

கவலை களிப்பாக மாறுகிறது.

கோபம் சாந்தமாகிறது.

பகைமை நட்பாகிறது.

ஆழ்வார் பாசுரங்களில் ஒன்று நினைவுக்கு வருகிறது.

'' கோவிந்தன் குழல் ஊதின போது
மட மயில்களோடு மான்பிணை போல
மங்கைமார்கள் மலர்க் கூந்தல் அவிழ,
உடை நெகிழ, ஓர் கையால் துகில் பற்றி
ஒல்கி, ஓடரிக்கண் ஓட நின்றனரே !''

என்று பாடுகிறார். குழலின் மெல்லோசை தருகின்ற பரவச நிலையை இப்படிச் சுவை ததும்ப வருணிக்கிறார் ஆழ்வார்.

'' பாராகிப் பண்ணாகிப்
பாடலாகிப் பரஞ்சுடராய் ''

என்று பாடுகிறார் நாவுக்கரசர்.

'' நாதமே முக்கலை—நாதம் மூவெழுத்து
நாதமே முக்குணம்—நாதமே முப்பொருள்
நாதம் மூவுலகாகி விரிந்து—
நாதமாம் பரத்தில் லயித்தது பாரே.
நாதம் பரத்தில் லயித்திடும் அதனால்
நாதம் அறிந்திடப் பரமும் அறியலாம் ''



இது ஓர் அகவல் பாடல்.

மேற்சொன்னவாறு மூன்று மூன்றாக விவரிக்கப்பட்ட இந்த நாதத்தின் மும்மூர்த்திகளாகத் திகழ்ந்தவர்கள் தியாகராசர், தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் ஆகிய மூவரும் ஆவார்கள். இவர்கள் மூவருமே ஆரூரைச் சார்ந்தவர்கள். ஆனாலும் ஒரூரைச் சேர்ந்தவர்கள் அல்லர். இந்தியத் துணைக்கண்டம் முழுவதற்கும், உலகத்தில் இசையை ரசிக்கின்றோர் வாழ்கின்ற அத்தனை இடங்களுக்கும் சொந்தமானவர்கள் இவர்கள். அறிவியல் துறையிலே மிக உயர்ந்து நிற்கும் அமெரிக்கா போன்ற நாடுகளில்கூட, நமது இசைக் கலைஞர்கள் நமது கருநாடக இசையை முழக்கிப் புகழ்பெற்றுத் திரும்புகிறார்கள். இசையரசி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள் அண்ணல் காந்தியடிகளின் உள்ளத்தை உருக வைத்ததையும், அய்க்கிய நாடுகள் சபையிலே பலநாட்டு மக்களின் ரசனையையும் ஒன்றுபடுத்தி, அவர்களால் புகழப்பட்டதையும், நாம் அறிவோம்! நம் இசை நாடு கடந்த, கடல் கடந்த ஒரு கலையாகும். அது போலவே, காலம் கடந்தும் நிலைத்து நிற்பதாகும்.

இசையாகிய தேனைப் பருகுவதற்கு அடிப்படை வடிவம். அந்த வடிவத்தைக் கீர்த்தனைகளாக்கி வழங்கிய மேலோர்கள் இந்த மும்மூர்த்திகள். முற்காலத் தமிழகச் சிறப்புக்கும், பண்பாட்டு மேன்மைக்கும், சேர, சோழ, பாண்டியர்களாகிய மூவேந்தர்கள் காரணமாக இருந்தது போல, பழம்பெரும் கருநாடக இசையின் மேம்பாட்டுக்கும் வளர்ச்சிக்கும் இந்த இசை—மூவேந்தர்கள் அடித்தளம் அமைத்துத் தந்திருக்கிறார்கள்.


ஆனால், இவர்களின் பாடல்கள் வடமொழியிலும் தெலுங்கு மொழியிலும் அமைந்திருக்கின்றன. அவற்றைக் கேட்கும் போது மனம் உருகினாலும், அந்த உருக்கம் அவற்றின் பொருளையும் நாம் அறிந்து கொள்ளும்போது இன்னும் அதிகமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

'' தமிழ்த் தியாகய்யா '' என்று போற்றப்படும் பாபநாசம் சிவன், அரிகேசநல்லூர் முத்தையா பாகவதர், கோபாலகிருஷ்ண பாரதியார், முத்துத்தாண்டவர் முதலானவர்களின் பாடல்களைப் பாடக் கேட்கும் போது, இசையின் இனிமையோடு, பொருளையும் சுவைக்க வாய்ப்பு ஏற்படுகிறது.

சிலர், தமிழில் இந்த இசைப் பாடல்கள் அமைந்தால் அவற்றின் சிறப்பு குன்றிவிடுமோ என அய்யப்படுகிறார்கள். தமிழ் மொழி எந்த மொழிக்கும் புனிதத்தில் குறைந்ததில்லை. நம் தமிழகத்தில் பிறந்து, தமிழிலேயே பாசுரங்கள் இயற்றிய பன்னிரு ஆழ்வார்கள் வழங்கியுள்ள அந்தப் பாடல்களுக்கும் நாயன்மார்கள் வழங்கியுள்ள தேவாரத்திற்கும் தனிப்பட்ட சிறப்பும் பெருமையும் உண்டு என்று தெய்வத்தொண்டில் ஈடுபட்ட ஆன்றோர்களும் கூறியுள்ளார்கள்.

''‘செந்திறத்த தமிழோசை வட சொல்லாகி’ என்கையாலே, தமிழ் மறைகளும் மிகமிகத் தொன்மையானவை. வடமொழி மறை ஒன்று சமஸ்கிருத வேதத்தைச் சொல்வது, தமிழ் மறைகள் என்றென்றும் உண்டு என்று நினைத்தேதான் சொல்லப்படுகிறது. நான்கு வேதங்களுக்கு ஆறு அங்கங்கள், எட்டு உபாங்கங்கள் இருப்பதுபோல, நம்மாழ்வார் பணித்த தமிழ் மறைக்குத் திருமங்கையாழ்வார் பாடியருளிய ஆறு அங்கங்களும் மற்றைய எட்டு ஆழ்வார்கள் பாடிய பிரபந்தங்களும் அமைந்திருக்கும்'' என்று, சிறப்பு மிகுந்த எம்பார் விஜயராகவாச்சாரியார் கூறியிருக்கிறார்.

இசை, மொழியைக் கடந்தது என்றாலும், சொந்த மொழியில் பாடல்கள் அழகாகப் பாடப்படும்போது—அவற்றின் பொருளையும் சேர்த்து அனுபவிக்க முடிவதால், இனிமை-ரசனை அதிகமாகிறது. கீர்த்தனைகள் ஆனாலும், பாடல்களானாலும் சொற்களுடைய அழகும், பாவமும் தெரியும்படியாகப் பாடவேண்டும். ஒரு சில இசைப் பேரறிஞர்கள் உணர்ச்சிவசப்பட்டுப் பாடும்போது சொற்கள் உருவிழந்து போகின்றன என்பது, ரசிகர்கள் பலரும் சொல்லிக்கொள்ளும் குறையாகும். ஆனால், தமிழ்ப்பாடல்களையும் கீர்த்தனைகளையும் சொற்களுடைய அழகு சிறிதும் குறையாமல் நயமாகத் திருமதி கே. பி. சுந்தராம்பாள், திருமதி டி. கே. பட்டம்மாள் முதலானவர்கள் பாடக் கேட்டு ரசித்திருக்கிறேன்.



இந்த விழாவிலே பாராட்டுப் பெறும் டாக்டர் பாலமுரளி கிருஷ்ணா அவர்கள்கூட, தெலுங்கிலே கீர்த்தனைகளை இவ்வாறு அழகுடன் பாடுவதை நான் பலமுறை கேட்டு அனுபவித்திருக்கிறேன். ரசித்து மகிழாதவர் இல்லை.

இசை, மொழிக்கு அழகு தருவது மட்டுமல்லாமல், அதனுடைய வளர்ச்சிக்கும் உதவ வேண்டும் என்பதே என் ஆசை. மதுரையிலே தமிழ் வளர்க்கும் பல்கலைக் கழகத்தில் இசை ஆராய்ச்சிக்கும் ஒரு பகுதியை நிறுவியிருப்பது, இத்தகைய ஆர்வத்தினால்தான் என்று இங்கே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

'' நாதப்பிரும்மம் '' என்பார்கள். இதிலிருந்து அதற்குண்டான தனி மதிப்பை நாம் அறிய முடியும். ஓசையை உண்டாக்கும் சக்திதான் காற்று. வசந்த காலத்திலும் காற்று வீசுகிறது. கடல் குமுறிக் கொந்தளித்தும் காற்று வீசுகிறது. முன்னதற்குத்தான் தென்றல் என்று பெயர். பின்னதற்குப் பெயர் புயல் அல்லவா!



ஸ்வரம், சுருதி, ராகம் இவை மூன்றும் நாதத்தின்— அதாவது ஓசையின் நல்லிசைக்குரிய ஜீவ அம்சங்கள்.

ஸட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவ்தம், நிஷாதம் இவை ஏழும் இசையின் ஸ்வரங்கள். இந்த ஏழையும் தமிழில் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

தேவாரம், திருவாய்மொழிப் பாடல்களுக்குப் பல வகையான பண்கள் உள்ளன. அந்தப் பண்களுக்கு ஏற்ற இராகங்களை ஆராய்ந்து வருகிறார்கள்.

எடுத்துக்காட்டாகச் சிலவற்றைச் சொல்லலாம். தமிழில் உள்ள பண்ணான நட்டபாடைக்குரிய இராகம் நாட்டை.

| | | |
|---|---|---|
| இந்தளம் | — | மாளவ கௌளை. |
| தக்கேசி | — | காம்போதி. |
| கௌசிகம் | — | பைரவி. |
| குறிஞ்சி | — | அரிகாம்போதி. |

இந்தப் பண் ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்று விரைவில் எல்லாப் பண்களுக்கும் உரிய இராகங்களை அறியும் வாய்ப்பு ஏற்படக்கூடும் என்று தெரிகிறது.

தமிழ் நாட்டுக்கு என்று ஒரு பண்பு இருக்கிறது. அதேபோல கருநாடக இசைக்கும் ஒரு பண்பு இருக்கிறது.

தமிழ் மறையான திருக்குறளில் கூறப்பட்டுள்ள நீதி முறைகள் எல்லாமே தமிழ்ப் பண்புகள்! அன்புடைமை, அருளுடைமை, அடக்கமுடைமை, வாய்மை இப்படி எத்தனையோ பண்புகள்.

அவ்வாறே, கருநாடக இசைக்கும் பல இலக்கணங்கள் உண்டு. மனித இலக்கணம் போல, இசைக்கும் இலக்கணம் இருக்கிறது. குறிப்பிட்ட கட்டுக்கோப்பைத் தாண்டக் கூடாது என்று வரம்பு உண்டு. சுதியோடு சேர்ந்து பாடவேண்டிய அவசியம் உண்டு. தாளம் தவறக்கூடாது. இப்படிப்பட்ட விதிகள் ஏராளம். அவை அனைத்தையும் அறிந்து, தெளிந்து முறைப்படி கடைப்பிடிக்கவேண்டும். ஆதலால் இதற்கு மிகவும் 'சாதகம்' தேவை. அதாவது பயிற்சி வேண்டும். பயிற்சியில் முதிர்ச்சி பெறுவதற்குப் பொறுமை வேண்டும். ஆர்வமும் ஈடுபாடும் அசைவிலாத ஊக்கமும், அனைத்துக்கும் மேலாக ஒரு பக்தியும் வேண்டும்.



ராகங்களுக்கு எத்தனையோ பெயர்கள் இருக்கின்றன. அவற்றில் பெரும்பாலானவைக்கு மாதர் திலகங்களின் பெயரைச் சூட்டியிருக்கிறார்கள்.

| | | |
|---|---|---|
| கல்யாணி | — | பைரவி |
| நீலாம்பரி | — | ஜகன்மோகினி |
| வசந்தா | | |

இப்படிப் பலப்பல. இதற்கு என்ன காரணமாக இருக்கும்!

'விண்' என்ற உத்தரத்தில், அன்பு என்கிற தாம்பு இட்டு, 'மண்' என்ற தொட்டிலிட்டு, 'கண்வளராய்' என்று கனிவோடும் கருணையோடும், அக்கறையோடும் ஆர்வத்தோடும், அன்போடும் அரவணைப்போடும் 'இன்னிசை' என்றும் செல்வச் சேயைத் தாலாட்டிச் சீராட்டும் தாய்க்குலத்தினர் அல்லவா அவர்கள்!

அதனால்தான் பெரும்பாலான இராகங்களின் பெயர்களில் அவர்கள் கொலுவிருக்கிறார்கள்.

பாட்டோடு பண் இணைய வேண்டும். இது மிகவும் முக்கியமாகும். திருவள்ளுவர் இதை ஆணித்தரமாகக் குறிப்பிடுகிறார் :

'' பண் என்னாம் பாடற்கு இயைபு இன்றேல்
கண் என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்!'' என்கிறார்.

தாட்சண்யம் என்பார்களே, அது இல்லாதபோது, கண் இருந்தும் பயனில்லை என்ற கருத்தைச் சொல்லவந்தவர், உவமையாகப் பண் பற்றிச் சொல்லுகிறார். '' பாடலோடு இணையாவிட்டால் பண் என்ன ஆகும்?'' என்று கேட்கிறார்.

நம்முடைய அன்றாட வாழ்க்கையிலே 'டென்ஷன்' எனப்படும் உணர்ச்சி வேகம் நிறைய இருக்கிறது. எல்லாத் துறைகளிலுமே பொறுப்புள்ளவர்களுக்குப் பொதுவாக ஏற்படும் பரபரப்பு நிலை இது!

இப்படிப் பரபரப்பான நிலை உண்டாவதால் உடல் நிலை பாதிக்கப்படும் என்றும், மனத்தை அமைதியாக வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் டாக்டர்கள் சொல்வதுண்டு. இதற்கு ஒரு வரப் பிரசாதம் போன்றதுதான் இன்னிசை.

'' துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ
இன்பம் சேர்க்க மாட்டாயா''



என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடியிருக்கிறார். 'இயற்றியிருக்கிறார்,' என்று நான் சொல்லவில்லை. அது செய்யுளாக மட்டுமாக இருந்தால் அப்படிச் சொல்லலாம். இசையோடும் இணைந்திருப்பதால் 'பாடியிருக்கிறார்' என்று குறிப்பிட்டேன்.

தமிழிலே மாபெரும் கவிஞர்கள் பல கவிதைகளை இயற்றியிருக்கிறார்கள். அவர்களின் கவிதைகள் இசையுடன் பாடப்படும்போதுதான் உயிர் பெற்று உலவும் நிலை பிறக்கிறது.

நந்தனார் கீர்த்தனையை அனுபவிக்கிறோம். மாபெரும் கவிஞரான கோபால கிருஷ்ண பாரதியார் சுடர்விட்டுத் திகழ்கிறார்.

'சின்னஞ் சிறு கிளியே' என்ற கவிதை இசையோடு ஒலிக்கிறது! மகாகவி பாரதியார் ஒளி வீசுகிறார்.

'' தமிழுக்கு அமுதென்று பேர்!''—இசையோடு ஒலிக்கிறது—பாவேந்தர் காட்சி அளிக்கிறார்.

தத்துவப் பாடல் ஒன்று, பாடப்படுகிறது. மாயூரம் வேதநாயகம் பிள்ளை நம்முன்னே காட்சி அளிக்கிறார்!

இப்படி, கவிஞர்களின் படைப்புகள் இசையோடு கலக்கும் போது, அவற்றிற்கும் அவற்றைப் படைத்தவர்களுக்கும் புகழ் உண்டாகிறது.

'' ஆன்ம வெளியில் மூழ்கித் திளைப்போர்க்கு
அச்சமுண்டோடா!
மனமே!

தேன்மடை இங்கே திறந்தது கண்டு
தேக்கித் திரிவமடா!'' என்கிறார் பாரதியார்.

'' தேன் மடை திறந்து விட்டது, தேக்கி மகிழ்ந்து ஆடுவோம்'' என்றால், என்ன தேன் அது! இசைத் தேன்! இனிமை மயமான சங்கீதத் தேன் அது!

திருவள்ளுவர் திருநாள் 15—1—1979



உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

நான் எனது மிகச் சிறிய பிராயத்திலேயே இசைக்கு முக்கியத்துவம் கொடுத்த நாடகக் கம்பெனியில், என்னுடைய வாழ்க்கையைத் தொடங்கியவன். அந்தக் காலத்தில் நாடகம் என்றால் வள்ளித் திருமணம், சம்பூர்ண இராமாயணம், மகாபாரதம், சத்தியவான் சாவித்திரி, நந்தனார் என்பவை போன்ற இசைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நாடகங்களாகத்தான் இருக்கும். மேடையிலே எஸ். ஜி. கிட்டப்பா, கே. பி. சுந்தராம்பாள், சுப்பையா பாகவதர் போன்றவர்கள் அற்புதமான பாடல்களை விரிவாகப் பாடி மக்களைக் கவர்வது வழக்கம். புகழ்பெற்ற நாடகங்கள் எல்லாம் இசைக்கு முதலிடம் தரும் நாடகங்களாகத்தான் இருக்கும். என்னுடைய ‘தொழில் வாழ்க்கை’யை நாடகக் கம்பெனிகள் மூலம் தொடங்கியதால் எனக்கும் இளம்பிராயத்திலிருந்தே இசையை ரசிப்பதில் அளவற்ற ஆர்வம் இயல்பாகவும், சூழ்நிலை உதவியாலும் ஏற்பட்டிருந்தது; இசையில் பாண்டித்யம் இல்லாவிட்டாலும், நான் இசையை ரசிப்பதன் மூலம் அமைதியைப் பெற விரும்புகிறேன்.

உண்மையிலேயே கருநாடக இசையின் அடிப்படையில் அமைந்த அழகான சுத்தமான பாடல்களை, படங்களில் அமைக்கச் செய்து நான் ரசித்து அனுபவித்து வந்திருக்கிறேன். கருநாடக இசை பின்னுக்குப் போய் விட்டது என்றும், மெல்லிசை என்ற பெயரில் மலிவான இலக்கணச் சுத்தமில்லாத பாட்டுக்கள் புகழ் பெற்று விட்டன என்றும் பலரும் இன்று குறை சொல்லுகிறார்கள். ஆனால், எனக்குத் தெரியும், ஒரு காலத்தில் பல திரைப்படங்கள் வெற்றியடைந்ததற்கு அவற்றினுடைய கருநாடக இசை மரபின்படி அமைக்கப்பட்ட பாட்டுக்களே காரணம் ஆகும் என்பது. இன்றும் நம்மில் பலர், பாபநாசம் சிவனின் பாட்டுக்களைத் தியாகராஜபாகவதர் திரைப்படங்களிலே பாடியதை, எவ்வளவு ரசனையோடு கேட்டு மகிழ்கிறோம் என்பது எனக்குத்தெரியும்.

இன்று திரைப்படங்களிலும் அத்தகைய நல்ல இசை இடம் பெறுவதற்கு அடிப்படையான ஆர்வமும் எண்ணமும் கொண்டு, திரைப்பட இசை இயக்குநர்கள் சிலர் அம்முயற்சியை மேற்கொண்டு வருகிறார்கள். இந்த இடத்தில் ஒரு செய்தியைக் குறிப்பிட விரும்புகின்றேன். மேலை நாடுகளிலும் கூட இந்தப் பிரச்சினை இருக்கின்றது. ‘வெஸ்டர்ன் கிளாசிக்கல் மியூசிக்’ என்ற இசையின்பால் மக்களுக்கு உள்ள விருப்பம் குறைந்து ‘பாப் மியூசிக்’ போன்ற நாகரிக இசையில் மக்கள் அதிகமாகக் கவனம் செலுத்துகிறார்கள் என்ற குறையை அறிஞர்கள் தெரிவிக்கின்றார்கள். அதே போல இன்று நம்முடைய குடும்பங்களிலும் இசைக்கு உள்ள ரசனை, ஓரளவு மாறுபட்டிருக்கின்றது. இதை நாம் எச்சரிக்கையோடு கவனித்தாக வேண்டும்.



எந்த ஒரு கலையும் ஆற்றின் நீரோட்டம் போல ஓடிக்கொண்டிருக்க வேண்டும். தேங்கிப் போனால் அதனுடைய அழகும், இனிமையும் குறைந்து போய்விடும். இந்தக் கருத்து இசைக்கும் பொருந்தும். நம்முடைய மக்கள் துரிதமான வாழ்க்கையை மேற்கொண்டு வருகிறார்கள். நிதானமாகவும், நீண்ட

நேரம் கவனம் செலுத்தியும் நுட்பமாகவும் கலைகளை ரசிக்க அவர்களுக்குப் பொழுது இருப்பதில்லை. ஒரு காலத்தில் இசைப் பேரறிஞர் இராஜரத்தினம் பிள்ளை போன்றவர்கள் ஒரு ராகத்தை இரவு முழுவதும் விடிய விடிய நாதசுரத்தில் வாசிப்பார்கள். கிராமங்களில் பல கோயில்களிலும் இரவு ஒரு மணி வரையில் சங்கீதக் கச்சேரி நடப்பதுண்டு. ஆனால் இன்று சங்கீத சபாக்களில் நிகழும் மேடைக் கச்சேரிகள் மூன்று மணி நேரத்திற்கு மேல் இருப்பதில்லை. வானொலியில் இசைக்கச்சேரியை ஒலி பரப்பும்போது ஒன்றரை மணி நேரம்தான் ஒலிபரப்பப்படுகிறது. அதிலும் நல்ல பாடகர்களைச் சேர்ந்தாற்போல் பாடவிடாமல் நேரத்தை இரு பிரிவாகப் பிரித்துத் தந்து பாடச் சொல்கிறார்கள் என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். டெலிவிஷனில் அதே இசைக்கச்சேரி முக்கால் மணிநேரந்தான் இடம் பெறுகிறது. ஆகவே, இன்று நல்ல இசையையும் கூடச் சுருக்கமாகவும், அதே சமயத்தில் இனிமையாவும் கேட்க வேண்டும் என்றுதான் மக்கள் விரும்புகிறார்கள். மெல்லிசை இன்று மக்களிடையேயும், இளம் சமுதாயத்தினரிடையேயும் பிரபலமாக இருப்பதற்கு இதுதான் காரணம். நம்முடைய கருநாடக இசையை அழகான, சுருக்கமான வடிவத்தில், இனிமை குறையாமல் பாடச் செய்தால், அது அனைத்து மக்களையும் கவரமுடியும்; இளம் சமுதாயத்தினரையும் ஈர்க்க முடியும்.

சென்னை இசைக் கழகம், இசை வளர்ச்சிக்கு பல விதத்திலும் தொண்டு செய்து வருகிறது. இசை விழாக்களை நடத்துவதுமின்றி இசைப் பயிற்சிக்கும் வழி செய்கிறது. நான் சொன்னபடி, இந்தப் புதிய முயற்சியிலும் ஈடுபட்டு, நமது பழம்பெரும் கலையைப் புதிய வடிவத்துடன் புதிய மெருகுடன் தருவதற்கு அவர்கள் துணை செய்யலாம். சிறப்பாக இசைப்பணி ஆற்றி வரும் ஏனைய இசைக்கழகங்களும் இப்பணியில் ஈடுபடலாம்.



அப்படிச் செய்வதன் மூலம் இந்தக் கலையின் வளர்ச்சிக்கு அவர்கள் பெரிதும் உதவி செய்தவர்கள் ஆவார்கள்.

இந்தக் கழகத்துக்கு இன்னொரு யோசனையையும் நான் சொல்ல விரும்புகின்றேன். இசை விற்பன்னர்கள் என்றால் பழம்பெரும் இசைவாணர்களைத்தான் எல்லோரும் நினைவில் கொள்கிறார்கள். புதியவர்களின் திறமையையும் நாம் ஏற்றுக் கொண்டு அவர்களை மக்களுக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டும். இன்று பல துறைகளிலும் புதிய இளம் கலைஞர்கள் திறமையுடன் பிரகாசிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். இசைத்துறையும் விதிவிலக்கு அல்ல. இத்துறையில் இளங் கலைஞர்களுக்குப் போதிய வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். அத்தகைய வாய்ப்பு அளிக்கப்படாததால் அவர்கள் மனம் சோர்ந்து விடுகிறார்கள்! உற்சாகம் குன்றிப் போகிறார்கள்! முயற்சியில் தளர்ச்சியை அடைகிறார்கள்.

அவர்களை ஆதரிப்பது எல்லா இசைக் கழகங்களுக்கும் தலையாய கடமை எனச் சொல்ல விரும்புகிறேன். புகழ்பெற்ற இசைவாணர்களுக்கு அளிக்கப்படும் முக்கியமான நேரத்தில், புதிய கலைஞர்களையும் பாடச் சொல்லி ஊக்குவித்தால் அவர்கள் மட்டுமல்லாமல், இசைக் கலையும் வளர்ந்து செழிப்படைய வாய்ப்பு உண்டாகும்.

இந்தத் துறையை நம்பிவருவோருக்குப் பாதுகாப்பு ஏற்படுத்தித் தரவேண்டும். வாழையடி வாழையாக இசைக் கலை வளர்வதற்கு இதுவே அடிப்படை.

இங்கே, விழாவில் விருது பெறும் இசை விற்பன்னர் டாக்டர் பால முரளி கிருஷ்ணா அவர்கள், இளம் பிராயத்திலேயே புகழ் பெற்று வளர்ச்சி பெற்ற இசை மேதை ஆவார். இசையிலே டாக்டர் பட்டம் பெற்றவர்.

இசைப் பேரறிஞர்களை ஒன்று சேர்த்து, தியாகய்யாவின் புனித இடமான திருவையாற்றில் ஆண்டு தோறும்

மகத்தான இசை விழாவை நடத்த, டாக்டர் பாலமுரளி கிருஷ்ணா அவர்கள் மிகவும் பாடுபட்டிருக்கிறார் என்று அறிகிறேன்.

இளம் இசைவாணர்களை ஊக்குவிப்பதிலும் அவருக்குத் தணியாத ஆர்வம் இருப்பதாக நான் அறிந்தேன். 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற பரந்த உள்ளத்துடன் அவர் செய்து வரும் பணிகளையும் அவருடைய உயர்ந்த நோக்கங்களையும் பாராட்டுகிறேன்.

'கலாசாரம்' என்ற சொல்லைத் தமிழில் 'பண்பாடு' என்பார்கள். 'பண்பாடு' என்னும் சொல் பண்—பாடு என்று பிரிந்து அழகான மற்றொரு பொருளையும் தருகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கையில் முதலிடம் பெற்ற அரிய தன்மை இந்தப் 'பண்பாடு' ஆகும். அதோடு, நுண்கலைகளின் காவலராகத் திகழ்ந்த



அவர்கள் பண்—பாடுவோரைப் பாராட்டிப் போற்றுகின்ற பண்பாட்டைக் கொண்டவர்கள்!

அந்தப் பண்பாட்டைக் கடைப்பிடிக்கின்ற நான் பண்—பாடுவோரோடு கலந்து மகிழவும், இசையோடு நெஞ்சை இசையச் செய்யவும் ஒரு நல்வாய்ப்பு அளிக்கப்பட்டதற்கு, எல்லோருக்கும் என் இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க இசை.

வாழ்க தமிழ்.

வாழ்க அண்ணா நாமம்.

[சென்னை இசைக் கழகத்தின் (சங்கீத வித்வத் சபை) 52-வது மாநாட்டை 21-12-1978 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தொடக்கி வைத்து ஆற்றிய உரை

# அனைவருக்கும் பெருமை!

டிசிப்ளின் (Discipline) என்று சொல்கிறார்களே--கட்டுப்பாடு அது வெளிநாடுகளில் குழந்தைப் பருவம் முதலே தோன்றிவிடுகிறது. இதை நான் நேரிலேயே உணர்ந்தேன். ஆனால் இங்கேயோ தங்கள் குழந்தைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லையே என்று சில பெற்றோர்கள் சொல்கிறார்கள். இது வெட்கப்பட வேண்டிய விஷயம்.

குழந்தைகளிடம் பெற்றோர் காட்டும் பாசம் அவர்களை நல்வழியில் அழைத்துச் செல்ல உதவவேண்டும்; தவிர தகாத வழியிலே செல்ல உதவுமேயானால் அது பாசமல்ல. பாசக்கயிறு என்றுதான் சொல்ல வேண்டும். பெரியவர்களிடமுள்ள — பெற்றோரிடமுள்ள பண்பு அப்படியே குழந்தைகளிடம் படிகிறது. இதை கவனத்தில் கொண்டு நல்ல வழியில் குழந்தைகளைப் பேணி வளர்க்க வேண்டும்.

குழந்தைகள் அஞ்ச வேண்டியதற்கு அஞ்சுவதில்லை. அஞ்சக்கூடாததற்கு அஞ்சுகிறார்கள். இந்த நிலையை மாற்றியாக வேண்டும். இதை என் கோரிக்கையாக கைகூப்பி வேண்டுகிறேன். குழந்தைகளுக்கு பெற்றோர் வழிகாட்டி, நல்ல குடும்பம் ஓர்



ஊருக்கு வழிகாட்டி. சிறந்த ஊர் ஒரு மாவட்டத்துக்கு வழிகாட்டி. சிறந்த மாநிலம் ஒரு நாட்டிற்கு வழிகாட்டி; சிறந்த மாநிலமாகத் தமிழகம் அமையுமேயானால் நம் அனைவருக்கும் பெருமை.

—மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் 20-12-78 அன்று சென்னை கிருஷ்ணகான சபா வெள்ளி விழா நிகழ்ச்சிகளைத் துவக்கி வைத்து ஆற்றிய உரையில்.....

# கூட்டுறவு ஒரு கோயில்



மாண்புமிகு கூட்டுறவுத்துறை
அமைச்சர்
**திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி**

கூட்டுறவுத் துறையை மட்டும் நீங்கள் சரியாகப் பயன்படுத்தினால் தேசிய பிரச்சினைகள் மட்டுமல்ல; சர்வதேசியப் பிரச்சினைகளையும் தீர்க்க முடியும் என்று பண்டிதநேரு அவர்கள் 1960-ல் சொன்னார். அதற்கு ஓர் எடுத்துக் காட்டாக சோவியத் நாட்டிலிருந்து நம்முடைய சகோதரி டாக்டர் வீரா மதுவீஷ் அவர்கள் வந்திருக்கிறார்கள் என்றால் இது நம்முடைய வெற்றிக்கும், நம்முடைய விழாவிற்கும் நல்ல சிறப்பு என்று கருதுகிறேன். சோவியத் நாட்டிலிருந்து, சமதர்ம தத்துவத்தை தொழிலாளிக்காக உருவாக்கிய ஒரு நாட்டிலிருந்து, அதுவும் ஒரு தாய்க்குலத்தினுடைய பிரதிநிதியாக டாக்டர் வீரா. மதுவீஷ், அவர்கள் இன்றைக்கு வந்திருக்கிறார்கள். அவர்களை வருக வருக என தமிழக அரசினுடைய சார்பாகவும், என் சார்பாகவும் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் கூட்டுறவு இயக்கம் என்பது ஒரு பிராந்திய இயக்கம் அல்ல. கூட்டுறவு இயக்கம் என்பது ஒரு கட்சிக்குச் சொந்தமான இயக்கம் அல்ல. கூட்டுறவு இயக்கம் என்பது ஏதோ ஒரு தனி நபருக்காக இருக்கின்ற இயக்கம் அல்ல. அது ஒரு தத்துவம், தனி மனிதர்கள் அழியலாம்; ஆனால் தத்துவங்கள் அழியாது; தனி மனிதர்கள் அழியலாம்; சரிதங்கள் சாகாது; தனி மனிதர்கள் மாறலாம்; ஆனால் கொள்கைகள் வீழாது. கூட்டுறவு என்பது ஒரு கோவில்; கூட்டுறவு என்பது ஒரு சகாப்தம்; அதன் காரணமாகத் தான் சோவியத் நாட்டுக்காரர்களாக இருந்தாலும் சரி, ஆஸ்திரேலியாவிருப்பவர்களாலும் சரி; அமெரிக்கத் திருநாட்டிலே இருப்பவர்களாக இருந்தாலும் சரி, ஆப்பிரிக்கா நாட்டிலிருக்கின்ற நம்முடைய அருமைச் சகோதரர்களாக இருந்தாலும் சரி, இதை ஒரு தத்துவமாக ஏற்றுக்கொண்டிருக்கின்ற காரணத்தினால் தான் இப்படிப்பட்ட அரிய காட்சிகளை இன்றைக்கு நாம் பார்க்கிறோம்.

தமிழ்நாட்டில் தான் முதன் முதல் 1904-வது ஆண்டு முதல் கூட்டுறவுச் சங்கம் ஏற்பட்டது. தமிழ்நாட்டில் தான் முதன் முதல் 1904-வது ஆண்டு முதல் கூட்டுறவுச் சங்கம் ஏற்பட்டது. எதிலுமே தமிழ்நாடு தான் முதன்முதலாக முதல் பணியைச் செய்கின்ற நாடாக இருந்திருக்கிறது. 1904-வது ஆண்டு, இன்றைக்கு ஏறத்தாழ 74 ஆண்டுகள் கடந்திருக்கின்றன. அந்தக் கூட்டுறவுச் சங்கம் தோன்றிய இடம் செங்கற்பட்டு மாவட்டம். அந்த இடம் திரூர் என்ற

---

தமிழ்நாட்டில் சுமார் 73 ஆண்டுகளுக்கு முன்பு செங்கல்பட்டு மாவட்டத்தில் திரூர் என்ற ஊரில்தான் முதல் கூட்டுறவுச் சங்கம் ஏற்பட்டது. அதில் முதன் முதலில் அங்கத்தினராகச் சேர்ந்தவர்கள் திருமதி லலிதாம்பாள் என்ற மாது ஒருவர் இன்றும் உயிரோடு உள்ளார். தன்னுடைய 20-வது வயதில் கூட்டுறவு உறுப்பினராகச் சேர்ந்து தொடர்ந்து உறுப்பினராக இருக்கும் அவருக்கு இப்போது 93 வயதாகிறது.




ஒரு இடம். இன்றைக்குமிருக்கிறது. திருவள்ளூர் தாலுக்காவில் திரூர் என்கின்ற ஓர் ஊர் இருக்கிறது. ஏறத்தாழ 74 ஆண்டுகளுக்கு முன்பு அங்கு அந்தச் சங்கம் துவக்கப்பட்டது. அந்த சங்கத்திலே - உறுப்பினராக— 2-வது உறுப்பினராக இருந்த மதிப்பிற்குரிய லலிதா அம்மையார் உயிரோடு இருக்கிறார்கள். அவர்களும் இந்த மேடையிலே இருக்கிறார்கள். 92வது வயது நிரம்பிய மூதாட்டி இந்த லலிதா அம்மையார் அவர்கள் இங்கே வந்திருக்கிறார்கள், வாழ்த்துக் கூற! 74 ஆண்டுகளுக்கு முன்பு சங்கம் தொடங்கிய நேரத்திலே உறுப்பினராக ஆன நம்முடைய மூதாட்டி லலிதா அம்மையார் அவர்கள் இன்றைக்கு இந்த மேடையிலே இருக்கிறார்கள் என்றால், இதைவிட நமக்கு ஒரு அரிய வாய்ப்பு வேறு எந்த மாநிலத்திற்கும் நமக்குத் தவிர— தமிழ்நாட்டைத் தவிர வேறு எந்த பிராந்தியத்திற்கும் கிடைத்திருக்காது, என்று நான் கருதுகின்றேன்.

எப்படிப்பட்ட இரண்டு வாய்ப்புகள் - உலகத்தினுடைய சின்னமாக உலகத்தினுடைய சகோதரத்துவத்தினுடையசின்னமாக சோவியத் பிரதிநிதி இருக்கிறார். 74 ஆண்டுகளுக்கு முன்பு துவக்கிய அந்த சங்கத்தினுடைய இரண்டாவது பிரதிநிதி உயிரோடு இருக்கிறார்கள். மனைமக்களோடு இருக்கிறார்கள். வாழையடி வாழையாகப் பெருமையைச் சொல்ல மக்களெல்லாம் இருக்கிறார்கள். அவர்கள் இன்றைக்கும் உறுப்பினராக அந்தச் சங்கத்திலே இருக்கிறார்கள். இதை எதற்காக இந்த நேரத்திலே சொல்லுகிறேன் என்றால், இதுவரையிலே கூட்டுறவியக்கம் கடந்த 74 ஆண்டுகளாக, அரும்பு நிலையிலே இருந்து பார்த்து வந்த இந்த அம்மையாரைப் பார்க்கிறபொழுது அவ்வைப் பாட்டி, தமிழ் நாட்டினைப் பார்த்தால் எந்த உணர்வு ஏற்படுமோ அப்படிப்பட்ட உணர்வு இன்றைக்கு ஏற்படுகிறது. 92 வயது நிரம்பியவர் இன்றைக்கு இந்த இயக்கத்திலே ஈடுபாடு கொண்டிருக்கிறார்கள். இந்த இயக்கம் அந்த அளவிற்கு அடித்தளத்திலே பலம் பொருந்திய இயக்கமாக இருக்கிறது. அந்த பலம் பொருந்திய கூட்டுறவு இயக்கத்தைத் தமிழக அரசு கண்ணும் கருத்துமாக இருந்து கொண்டு வளர்த்து வருகிறது.

[14—11—78 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற கூட்டுறவு விழாத் துவக்க நாள் நிகழ்ச்சியில் ஆற்றிய தலைமை உரையிலிருந்து.]

# ஆனந்தமான குழந்தை அகிலத்துக்குப் பெருமை!

**மேதகு ஆளுநர்**
**திரு. பிரபுதாஸ் பட்வாரி**




குழந்தைகள் நாட்டின் மிக முக்கியமான உடமையாகும் என்ற கொள்கையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது. குழந்தைகள் ''வளர்ச்சிக்கும், பரிவுக்கும்'' நாடுதான் பொறுப்பாளி என்றும் கூறுகிறது. குழந்தைகள் உடல் நலம், உணவுப்போஷாக்கு, உடல் ஊனக் குழந்தை நலம், அனாதைக் குழந்தைகள் நலம் போன்ற வேலைத் திட்டங்களுக்கு முக்கியம் கொடுத்து, முன்னுரிமைகள் வழங்குவது, பல்வேறு திட்டங்கள் மேற்கொள்வதைப் பற்றியும் கூறியுள்ளது. குழந்தைகள் நலனிலும், குழந்தை வளர்ச்சியிலும் கவனத்தை முனைப்பாகச் செலுத்தச் செய்யவும், பல்வேறு மட்டங்களிலும் குழந்தைகளுக்கான திட்டமிடுதல், மறுபரிசீலனை செய்தல், எல்லா அத்தியாவசிய சேவைகளையும் ஒருங்கிணைத்துக் கொண்டுபோதல் போன்றவை இடையறாது நடப்பதை உறுதி செய்து கொள்ளவும் தேசிய குழந்தைகள் நல வாரியம் அமைக்கவும் கொள்கை வழி செய்துள்ளது.

இந்தியாவில் சர்வதேசக் குழந்தைகள் ஆண்டு கொண்டாடுவதற்கான திட்டவட்டமான குறிக்கோள்கள் உள்ளன. தாய் சேய் மரண விகிதத்தைக் குறைக்கவும், நோய்களைக் குறைக்கவும் முனைப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். குழந்தைகளின் உடல் நல வளர்ச்சியின் முக்கியத்தை சமூகம் உணரும்படிச் செய்வதும், அதற்கான வகையில் அறிவூட்டலும் மேற்கொள்ளப்பட வேண்டும். பூர்வாங்க பள்ளிக் கட்டத்தில் குழந்தைகளின் உளவியல் சமூக உணர்வுக்கு அதிகபட்ச வசதி அளிப்பது, சர்வஜனத் தொடக்கக் கல்வி இலக்கைத் துரிதமாக எய்த முயல்வது; பள்ளிகளை நட்ட நடுவில் விட்டுவிடும் மாணவர் தொகையை கணிசமாகக் குறைப்பது என்பதே இந்தியாவின் திட்டம்.

''கதியற்ற குழந்தையை எட்டுவது'' தான் இந்தியாவில் உலகக் குழந்தைகள் ஆண்டின் பொதுத் தத்துவமாக இருக்கும். குழந்தைகள் நலமென்பது ஓராண்டுத் திட்டம் அன்று; இந் நூற்றாண்டுக்குள்ளேயே பரவலான நோக்கங்களை ஈடேற்றுவதற்கான இடையறாத முயற்சியாக இருக்கும். பின்னடைந்த குழந்தைகள் நலன்தான் முக்கியமான நோக்கமாக இருக்க வேண்டும்.

கோடிக் கணக்கான குழந்தைகளுக்குப் போதிய உணவு இல்லை; உடையும் இல்லை. பெரும்பாலோருக்குப் பால் கிடைப்பதில்லை. அவர்களுடைய உடல் நலனைப் பேணுவாரும் இல்லை. இதன் விளைவாக ஆயிரக் கணக்கான குழந்தைகள் குருடாகி விடுகின்றன. பலவித நோய்களுக்கு உள்ளாகிவிடுகின்றன. நூற்றுக் கணக்கில் அனாதைக் குழந்தைகளும் உள்ளன. அரசாங்கம் தன்னாலியன்றதையெல்லாம் சிறந்த அளவுக்குச் செய்யும். இருந்தாலும், குழந்தைகளுக்கு உதவுவதில் மக்கள் தீவிரமாகப் பங்கு பற்றுவது மிகவும் அத்தியாவசியமாகும்.

# மலை வாழ் மக்கள் முன்னேற்றம்



மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர்

**திரு. சவுந்தரபாண்டியன்**

தமிழ்நாட்டில் ஏறத்தாழ நான்கு இலட்சம் பழங்குடியினர் பல்வேறுபட்ட மலைப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் அனைவரும் சமுதாயத்தில் அடித் தளத்திலும், மிக, மிகப் பின்தங்கிய நிலை மையிலும், பொருளாதாரத் துறையில் ஏற்றம் பெற முடியாமல் ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டும், கல்வியறிவு பெற வழி வகை தெரியாது அறியாமை என்னும் இருளினால் மூழ்கியவர்களாகவும், நோயுற்று. உடல் மெலிந்து, உள்ளம் பயந்து வாழும் தன்மை யுள்ளவர்களாகவும், இதுநாள் வரை வாழ்ந்து கொண்டிருந்தார்கள். தற்போது அவர்களின் வாழ்வில் புத்தொளி வீச, தமிழக அரசு பல புதுத் திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருவது வளரும் தமிழகத்திற்கு மேலும் பொலிவூட்டுவதாகும்.

தமிழ்நாட்டில் வாழும் பழங்குடியினர் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள் ளனர். குறிப்பிட்ட பகுதிகளில் பெரும்பான் மையினராக வாழுவோரை முதற் பிரிவின ராகவும், மிகப் ''பண்டைய'' நிலையிலேயே உள்ள பழங்குடியினரை இரண்டாம் பிரிவின ராகவும், சிதறி வாழும் பழங்குடியினரை மூன்றாம் பிரிவினராகவும் கொள்ளலாம். முதற் பிரிவின் கீழ் வரும் பழங்குடியினர் வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தருமபுரி, சேலம் மற்றும் திருச்சி மாவட்டங்களில் வசிக்கின் றனர். இரண்டாம் பிரிவின் கீழ் வரும் பழங் குடியினர், நீலகிரி, கோவை, மதுரை, இராம நாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியா குமரி மாவட்டங்களில் வாழ்கின்றனர். மூன் றாம் பிரிவின்கீழ் வரும் பழங்குடியினர் கிட்டத் தட்ட எல்லா மாவட்டங்களிலும் குறிப்பாக செங்கை மாவட்டத்திலும் சிதறி வாழ்கின் றனர்.

நம் நாடு சுதந்தரம் அடைந்த பிறகு நாட்டு மக்களுக்கு பல்வேறுபட்ட ஆக்கப் பணிகளையும், பொருளாதார முன்னேற்றத் திற்கான திட்டங்களையும் வகுத்து, மத்திய மாநில அரசுகள் செயல்படுத்தி வருகின்றன. ஆனால் மலைவாழ் மக்களைப் பொறுத்த வரையிலும் இப்போதுதான் நாம் ஆரம்பக் கட்டமாக திட்டப் பணிகளைத் துவக்கிச் செயல்படுத்த முனைந்துள்ளோம்.

பழங்குடி மக்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு துணைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மொத்த மதிப்பு 8 கோடியே 42 இலட்சத்து 54 ஆயிரம் ரூபாய். இதில் மத்திய அரசு 1 கோடியே 36 இலட்சம் ரூபாய் உதவியாக அளிக்கிறது. இத் திட்டத்திற்காக ஒதுக்கப் பட்ட தொகையிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் தேவைக்கு ஏற்ப நிதி ஒதுக்கி விவசாயம், சிறு பாசனம், மண்வளப் பாதுகாப்பு, கால் நடை பராமரிப்பு, கூட்டுறவு, கைத்தொழில், சுகாதாரம், குடிநீர்த் திட்டம், வீட்டு வசதி, கல்வி, சாலை வசதி, வேலை வாய்ப்பு ,வன வளம், மின் வசதி, மகளிர் நலன், குழந்தை கள் பாதுகாப்பு, சுற்றுலா போன்ற பல்வேறு பட்ட முன்னேற்றப் பணிகளை நிறைவேற்றி மலைவாழ் மக்களின் நல்வாழ்வுக்காக அரசு தன் கடமையைச் செய்து வருகிறது.

இவர்களுடைய அறியாமை அகலவும், வாழ்க்கைத் தரம் உயரவும், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு அரசு 1977-78ஆம் ஆண்டில் 153 இலட்சம் ரூபாயும், 1978-79-ஆம் ஆண்டில் 200 இலட்

சம் ரூபாயும் நிதி ஒதுக்கி பல்வேறுபட்ட வளர்ச்சிப் பணிகளை முனைப்புடன் செயல் படுத்தி வருகிறது.

மலைவளம் நிறைந்த நமது நாட்டில் அங்கு வாழும் மக்கள் மட்டும் எல்லா வளமும் நலமும் இழந்து வாழக் காரணம் என்ன என்பது பற்றியும், அரசு ஆய்வு நடத்தியது. நீண்ட காலமாகவே, பழங்குடியினர் கல்வி யறிவு அற்றவர்களாகவும், வெளி உலகம் தெரியாதவர்களாகவும், நாகரிக உணர்வு இல் லாதவர்களாகவும், அஞ்சி வாழ்பவர்களாக வும், அடங்கி நடப்பவர்களாகவும், அறியா மை இருளில் மூழ்கித் தவித்து வாழ்ந்து வருவ தாலும் பழங்குடியினர் அல்லாதவர்கள் இவர் களை எளிதில் ஏமாற்றி சுரண்டி வாழ இடம் கொடுத்து விட்டனர். அவர்கள் இவர்களை கடனாளிகளாக்கி இவர்களுக்குச் சொந்தமான நிலங்களை ஏமாற்றி எடுத்துக் கொண்டனர். மலைவாழ் மக்கள் இழந்த நிலங்களை மீட்டுத் தந்து அவர்களின் வாழ்க்கையை வளப்படுத்த தமிழ்நாடு அரசு ஒரு சட்டம் கொண்டு வர இருக்கிறது.

பழங்குடி மக்களின் வாழ்க்கை முறையும், வாழும் தன்மையும் வேறுபட்டது. அவர் களின் திருமணச் சடங்குகளுக்காகவும், திரு விழா நடத்துவதற்காகவும், இன்னும் பல் வேறுபட்ட குடும்பக் காரியங்களுக்காகவும் கடன் பட்டிருப்பதாகத் தெரிகிறது. வாங்கிய கடன்களில் பெரும்பகுதி பலன் தராத வழி களில் தான் அவர்கள் செலவழித்திருப்பதாக வும் அறிய முடிகிறது. மேலும் அவர்களால் வாங்கப்படுகின்ற கடன் தொகைகளில் பெரும் பகுதி ஏற்கனவே பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்தவும், தேவையற்ற காரியங் களுக்குப் பயன்படுத்தவும் சரியாகப் போய் விடுகிறது. இதனால் மேலும் கடன்பட்டு சொத்தை இழந்து, வாழ்க்கைச் சுகத்தை இழந்து தவிக்கின்ற பரிதாபமான நிலைமை யில் அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர் களின் வாழ்வில் மேலும் ஒளி ஊட்டவும், வாழ வழி காட்டவும், கடன் தொல்லையி லிருந்து அவர்களை மீட்கவும் புரட்சித் தலை வர் அவர்களின் தலைமையில் இயங்கும் தமிழ் நாடு அரசு மலை வாழ் மக்களுக்கு எனத் தனி யாக கடன் நிவாரணச் சட்டம் ஒன்றைக் கொண்டு வர நடவடிக்கை எடுத்து வருகிறது.

மலைவாழ் மக்களும் வேளாண்மையை முக்கியத் தொழிலாகக் கொண்டு வாழ்க்கை நடத்துகிறார்கள். அவர்களின் விவசாய மேம் பாட்டிற்காக விவசாயக் கருவிகள், விதைகள், உரங்கள் முதலியவற்றை இலவசமாக வழங்க வும், விவசாயிகளுக்குப் புதிய விவசாய முறை களில் பயிற்சி அளிக்கவும் பல இடங்களுக்கு அவர்களை அழைத்துச் சென்று விவசாயப் பணிகளையும் செயல் முறைகளையும் எடுத் துக் காட்டவும் தமிழ்நாடு அரசு அவர்களுக்கு உறுதுணை புரிந்து வருகிறது. அதோடு மட்டு மல்லாமல் மலைவாழ் மக்களுக்கும் நாட்டுக் கும் பயன்தரும் பழத்தோட்டங்கள் அமைத்து உடல் நலம் காக்கவும் பண வளம் காணவும் அரசு திட்டம் வகுத்துத் தென் ஆர்க்காடு, சேலம், போன்ற மாவட்ட மலைப் பகுதிகளில் செயல்படுத்தி வருகிறது.

உழவர்களின் உற்ற தோழர்கள் கால் நடைகள் என்பது சொல்லித் தெரியவேண் டியதில்லை. மலைவாழ் மக்களின் மேம்பாட் டிற்கான துணைத்திட்டத்தில் கால்நடைப் பராமரிப் பிலும் கவனம் செலுத்தப்படுகிறது. கறவை மாடுகள், செம்மறி ஆடுகள், கோழி, பன்றி போன்றவைகளை மலைவாழ் மக்களுக்கு அரசு வழங்கி வருகிறது. இதற்காக கடந்த ஆண்டு, 16 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப் பட்டது. இந்த ஆண்டில் 22 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய் அரசு ஒதுக்கியுள்ளது.

கூட்டுறவே நாட்டு உயர்வுக்கு அடிப்படை மூலதனம் என்பதை உணர்ந்து, நாம் நடை முறைப்படுத்தி வருகிறோம். ஆகவேதான் மலைப்பகுதிகளில் ஒன்பது பெரிய அளவிலான பல நோக்குக் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இந்த கூட்டுறவுச் சங்கங்கள் அங்குள்ள நிலைமையினை நன்றாக அறிந்து அதற்கு ஏற்றவாறு திட்டங்களை வகுத்து வெளியாட்களின் சுரண்டலை ஒழித்து, மலை வாழ் மக்களின் மேம்பாட்டிற்காக செயல்படும்படிக்கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளன.

இந்தக் கூட்டுறவு சங்கங்களுக்கு வாகனங்கள் வாங்கவும் கிடங்குகள் கட்டவும், அரசு நிதி உதவி அளித்து வருகிறது. வனளை பொருட்களை அனுப்பும் செலவினை யும் அரசு ஏற்றுக்கொள்கிறது. கடுக்காய், புளி, சீயக்காய் போன்ற மலைப் பகுதிகளில் உற்பத்தியாகும் பொருள்களை இச்சங்கங் களுக்கு மலைவாழ் மக்கள் விற்பனை செய்து நியாயமான விலை பெற அரசு வழி வகை செய்து அவர்களின் பொருளாதாரத்தை வளப்படுத்த முற்பட்டுள்ளது. தமிழ்நாட்டு விவசாயத் தொழில் கழகத்தின் கீழ் தென் ஆர்க்காடு மாவட்டம் கல்ராயன் மலைப் பகுதி யில் ஒரு கடுக்காய் பதனிடும், தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டமும் பரிசிலனையில் உள்ளது.

மலைப்பகுதியிலுள்ள நிலங்களை நல்ல முறையில் பயன்படுத்துதல், வனப்பகுதிகளை அழித்து விடாமல் பாதுகாத்தல், வனவிளை பொருள்களைப் பயபடுத்தும் உரிமையை மலைவாழ் மக்களுக்கு உறுதிப்படுத்துதல் ஆகியவை வனவளத்தில் நாட்டம் செலுத்திக் கவனிக்க வேண்டியவைகளாகும். மலைவாழ் மக்களின் பொருளாதார நிலையும், மேன்மை யும், வனத்துறையின் நடவடிக்கைகளைப் பொறுத்தே அமையும் என்றால் மிகையாகாது. மலையில் விளையும் பொருட்கள், விறகு போன்றவைகளை சேகரித்து வற்பனை செய்து வாழ்க்கை நடத்தும் நிலையில் மலைவாழ் மக்கள் உள்ளனர்.

தங்களுக்கு உணவு அளித்துக் காக்கும் வனத்தைப் பாதுகாக்கும் பொறுப்பும் மலை வாழ் மக்களிடம் உள்ளது. வனங்களைப் பாதுகாக்கும் பழங்குடி மக்களுக்கு சிலவகை மரங்களை எடுத்துக் கொள்ளவும். விளை பொருட்களை அனுபவிக்கவும் உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன, வனவளத் திட்டத்தின் கீழ் பழச் செடிகளும், விதைகளும் அவர் களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. மலைவாழ் மக்களுக்கு பல்வேறுபட்ட உரிமை களும், சலுகைகளும் வழங்கப்பட்டாலும் விவசாயக் காரியங்களைச் செய்ய நிலமில்லாத நிலையிலும் அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களின் தேவைக்குப் போதுமான நிலத் தை ஒதுக்கித் தரும்படி வனத் துறையும், வருவாய்த் துறையும் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளன.

வனத் துறையினர் பழங்குடி மக்களிடம் மிகவும் கடுமையாக இருக்க வேண்டாம்

என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். வன விளை பொருட்களை பழங்குடியினர் அல்லாதவர்களுக்கு குத்தகைக்கு விடுதல் கூடாது என வலியுறுத்தப்பட்டுள்ளது. வனத் துறையே தற்போது விவசாயம், கல்வி, வீட்டு வசதி, சாலை வசதி செய்து தருதல் போன்ற காரியங்களையும் இணைத்துச் செயல்படுத்தி வருகிறது. இதற்கெனத் தேவையான நிதி வசதிகளையும் அரசு செய்து தருகிறது.

பழங்குடி மக்களின் மேம்பாட்டிற்கான திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தவும், அவற்றை மேற்பார்வை செய்யவும் ''பழங்குடி மக்களின் மேம்பாட்டு அதிகாரக் குழு'' ஒன்று இயங்கி வருகிறது. இதற்கு முன்பு அக்குழுவில் அலுவல் சார்புள்ள அதிகாரிகளே உறுப்பினர்களாக இருந்தனர். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையின் கீழ் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு அலுவல் சார்பற்ற சட்டமன்ற உறுப்பினர்களையும், மலைவாழ் மக்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்டவர்களையும் உறுப்பினர்களாகவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகவும் ஏற்றுச் செயல்பட இக் குழுவை சமீபத்தில் மாற்றி அமைத்துள்ளோம். மேலும் மலைவாழ் பழங்குடி மக்களின் நலனை ஆராய்ந்து அறிந்து தக்க ஆலோசனைகள் வழங்க ''பழங்குடி மக்கள் ஆலோசனைக் குழு'' ஒன்றும் இயங்கி வருகிறது. இக்குழுவும் தற்போது திருத்தி அமைக்கப்பட்டு விரைவில் தனது பணிகளைத் துவக்க இருக்கிறது. பழங்குடி மக்களின் மேம்பாட்டிற்கான பணிகளை துரிதமாகச் செயல்படுத்த இக் குழு தூண்டுகோலாக அமையும்.

பழங்குடி மக்களின் வாழ்க்கையை வளப்படுத்துவதற்காக அரசு தீட்டும் திட்டங்களையும், நிறைவேற்றும் சட்டங்களையும், இடும் ஆணைகளையும் செயல்படுத்துகின்ற பொறுப்பு நிர்வாகத்தினரையும், அதனைச் சார்ந்த ஊழியர்களையுமே சாரும். ஆகவே பழங்குடி மக்களுக்கான திட்டங்களை செயல்படுத்துவதற்கான செயல் திறமையும், தியாக உணர்வும், மன வலிமையும், ஆர்வமும், தொண்டு உள்ளமும் கொண்டவர்களையே இப் பணியில் ஈடுபடுத்தத் தேர்ந்தெடுப்பது முக்கியமாக கவனிக்க வேண்டிய ஒன்றாகும். இம்மாதிரியான திட்டப் பணிகளில் ஏற்படும் பலவிதமான இன்னல்களையும், இடையூறுகளையும் தாங்கிக் கொண்டு சேவை செய்ய வருபவர்களுக்கு ஊக்கம் அளிக்கிற வகையில் அவர்களுக்குச் சில அடிப்படை வசதிகளைச் செய்து தர அரசு கருத்தில் கொண்டுள்ளது. ஊழியர்களுக்கு சிறப்புப் படி வழங்கும் சலுகைகளை விரிவுபடுத்துதல், வீடு கட்டித் தருதல், மருத்துவ வசதி செய்து கொடுத்தல் போன்றவைகள் . அதில் முக்கியமானவை. மலைவாழ் மக்களின் மேம்பாட்டிற்காக உழைக்கும் அலுவலர்களின் வாழ்வு உயரவும் அரசு மேலும் பல சலுகைகளை அளிக்க பரிசீலனை செய்து வருகிறது. வளரும் தமிழகத்தில் மலைவாழ் மக்களும் வாழ்க்கையில் மேன்மை அடைந்து, மற்ற மக்களைப் போல வாழ மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் இயங்கும் தமிழ்நாடு அரசு பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிற காரணத்தால் விரைவில் மலைவாழ் மக்கள் மேம்பாடு அடைவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. வணக்கம்.

—17-12-1978 அன்று சென்னை வானொலியில் ஆற்றிய உரை.

விளையும் பயிர்

## எட்டு ரூபாயில் படித்தவர்!

அந்தப் பையனுக்கு வயது பன்னிரண்டு இருக்கும். அந்த வயதிலே அவனுடைய அருமை அப்பா இறந்துவிட்டார்.

இருக்கும்போதே அவர் மிகவும் குறைந்த வருவாய் சம்பளத்தில் தான் வேலை பார்த்து வந்தார். வருமானம் குறைவாயிருந்தும், தம்முடைய மகனை நன்றாகப் படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணத்துடன் சிரமப்பட்டுப் படிக்க வைத்தார். ஆனால் பாவம், இப்போது அவர் இறந்துவிட்டார்!

''அப்பா இறந்துவிட்டார். இனி, நம் படிப்புக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டியதுதான். ஏதேனும் ஒரு வேலையில் சேருவதைத் தவிர வேறு வழியில்லை' என்று எண்ணினான் அந்தப் பையன். பல இடங்களில் வேலைக்கு முயன்றான்.

இதைப் பார்த்தார், அந்தப் பையனுடைய அண்ணா. அவருடைய மனம் கலங்கியது. ''தம்பிக்கு நல்ல அறிவு இருக்கிறது. நன்றாகப் படிப்பு வருகிறது. அவன் இந்தச் சின்ன வயதிலேயே வேலையில் சேர்ந்தால் படிப்புப் பழாகிவிடும். எப்படியும் அவனைப் படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டு வந்துவிட வேண்டும்'' என்று எண்ணினார்.

ஆனால், அப்போது அவரும் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருந்தார். எங்கெங்கோ அலைந்தார். கடைசியாக 15 ரூபாயில் ஒரு சிறு உத்தியோகம் அவருக்குக் கிடைத்தது. உடனே, தம்பியை மேல் படிப்புக்கு அனுப்பினார். தமக்குக் கிடைக்கும் 15 ரூபாயில், தம்பியின் படிப்புக்காக மாதா மாதம் எட்டு ரூபாய் அனுப்பி வைத்தார்.

நமக்கு ஒரு 'புஷ்கோட்' தைப்பதென்றாலே எட்டு ரூபாய் போதாது! ஆனால், அவன் பள்ளிக்கூடச் சம்பளம் கட்டுவதும் அந்த எட்டு ரூபாயில்தான்! சாப்பாடு சாப்பிடுவதும் அந்த எட்டு ரூபாயில்தான்! சட்டை, வேட்டி வாங்குவதும் அந்த எட்டு ரூபாயில்தான்! புத்தகங்கள் வாங்குவதும் அந்த எட்டு ரூபாயில்தான்!

தானே சமையல் செய்து சாப்பிட்டு வந்தான். ஒரு நாளைக்கு ஒரு வேளைதான் சாப்பிடுவான். மற்ற வேளைகளிலெல்லாம் பட்டினிதான்!

இரவில் படிப்பதற்கு எண்ணெய் வாங்க முடியாது. ஆகையால், தெரு விளக்கின் அடியிலே உட்கார்ந்து பாடம் படிப்பான். தெரு விளக்கிலே படித்தாலும் தன்னுடைய 18-வது வயதிலேயே பி.ஏ. பட்டம் பெற்றுவிட்டான்! தெரு விளக்கில் படிப்பதைப் பற்றிச் சொன்னதும், உங்களுக்கு சர். டி. முத்துசாமி அய்யர் ஞாபகம் வருகிறதல்லவா?

இந்தப் பையனும் பிற்காலத்தில் சாதாரண மனிதனாக இருக்கவில்லை. சிறந்த அறிஞர்; உயர்ந்த தலைவர்; பெரிய ராஜதந்திரி; நல்ல பரோபகாரி என்றெல்லாம் புகழப்பட்ட **கோபால கிருஷ்ண கோகலே**தான், தெரு விளக்கில் படித்த அந்த ஏழைப் பையன்!

# தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

**த**மிழக அரசினால் 1949 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகத் தின் முக்கிய குறிக்கோள், தமிழ் நாட்டில் தொழில் முன்னேற்றத் தைத் துரிதப்படுத்துவதே!

மாநில அளவில் நிதி உதவி அளிக்கும் நிறுவனமான இக் கழகம், தவணை முறைக் கடன் களை அளித்தும், தவணை முறை களில் தொகை செலுத்த உத்தர வாதம் அல்லது மறு உத்தர வாதம் அளித்து, முன்னுரிமை மற்றும் சமவிகிதப் பங்குகள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றுக் கான உத்தரவாதங்கள் அளித் தும் தொழில்துறை முன்னேற்றத் திற்கு உதவி செய்கின்றது.

**செயல்முறை:**

இக் கழகம், சுலப தவணை முறைகளில் நிரந்தரச் சொத்துக் களான நிலம், கட்டடம், இயந் திரத் தளவாடங்கள் வாங்கி, புதிதாகத் தொழில்களைத் துவங் குவதற்கு மட்டுமல்லாமல், இயங்கிவரும் தொழிலகங்களை விரிவுபடுத்தவும் மாற்றுப் பொருள்கள் உற்பத்தி செய்ய வும், நவீனப்படுத்தவும் நிதி உதவி அளிக்கின்றது.


**நிதி உதவியின் அளவு:**

இக் கழகம் ஒரு தனி அமைப் புக்கு அதிகபட்சக் கடன் தொகை யாக ரூ. 30 இலட்சமும், தனி நபர் ஏற்று நடத்தும் நிறுவனங் கள் அல்லது கூட்டுச் சேர்ந்து நடத்தும் நிறுவனங்களுக்கு ரூ. 15 இலட்சமும், தவணை முறை யில் தொகை செலுத்தும் உத்தரவாதமும் அளித்தல் மூலம் அதிகபட்சத் தொகை ரூ. 30 இலட்சமும் அளிக்கின்றது.

தொழில் நிறுவனங்கள் வெளி யிடும் பங்குகளுக்கு உத்தரவாதம் வழங்குவதில் ரூ. 25 இலட்சத் திற்கு அல்லது வெளியிடும் பங்கு களில் 25 சதவீதத்திற்கு, அல்லது தொழில் முனைவோரின் பங்கு களுக்கு உட்பட்ட தொகை இவற்றில் எந்தத் தொகை குறை வாக உள்ளதோ, அந்த அளவில் நிதி உதவி வழங்கப்படுகிறது. ஒரு தொழில் நிறுவனத்திற்கு மொத்தத்தில் நிர்ணயிக்கப்பட்ட உச்ச வரம்பு ரூ. 65 இலட்ச மாகும். குறைந்தபட்சத் தொகை ரூ. 5,000 ஆகும்.

**நடைமுறையிலுள்ள திட்டங்கள்:**

(அ) கழகம் இப்போது சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் களுக்கு நிதி உதவி அளிக்கின்றது.



TIIC ESTD. 1949

(ஆ) உலக வங்கி கடன் ஒதுக்கீட்டிலிருந்துப் அன்னியச் செலாவணி பெற்று இயந்திரத் தளவாடங்களை இறக்குமதி செய்யவும், வெளிநாட்டு இயந் திர உறுப்புகள் வாங்கவும், தொழில் நுட்ப முறைகளைப் பெறவும் உதவுகின்றன.

(இ) சுலப வரைமுறைகளில் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு ரூ. 3 இலட்சம் வரையிலும் நிதி உதவி அளிக்கின்றது.

(ஈ) தகுதி வாய்ந்த கிராமப் புற மருத்துவ பயிற்சியாளர் களுக்குக் கிராமப்புறங்களில் மருத்துவப் பணியாற்ற ரூ. 1 இலட்சம் வரை தவணைக் கடன் அளிக்கின்றது.

(உ) சுலபக் கடன் மற்றும் ஆரம்பமுதலீட்டு உதவித்திட்டத் தின் கீழ், தொழில் மதிப்பீட்டில் 20 சதவீதத்திற்கு மேல் இல்லாம லும், ரூபாய் இரண்டு இலட்சம் வரையிலும் இவற்றில் எது குறை வோ அத்தொகையை ஆண்டுக்கு 1 சதவீதம் வட்டி வீதத்திலும் முன்னுரிமைப் பங்குகளுக்கு 5 முதல் 6 சதவீதம் வரையிலான இலாபப் பங்குத் தொகை கொடுத்தும் உதவுகின்றது.

(ஊ) ஜெனரேட்டர்கள்வாங்க உதவியளிக்கின்றது.

(எ) விடுதிகள் நடத்தவும், குறிப்பாக நட்சத்திரத் தகுதிப் பெறாத விடுதிகள் நடத்தவும் கடன் உதவி அளிக்கின்றது.

ஆட்டோ ரிக்ஷாக்கள் வாங்கவும், போக்குவரத்து வண்டிகள் வாங்கவும் மற்றும் மீன் பிடிக்கும் படகுகள் வாங்க வும் நிதி உதவி அளிக்கின்றது.

**1978-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத் திலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட புதிய திட்டங்களும் மற்றச் சலுகைகளும்:**

(அ) மிகச்சிறிய தொழில் நிறு வனங்களின் நலனுக்காக குறைந்த அளவு கடன் திட்டம்.


நடப்பு ஆண்டில் கழகம் 'குறைந்த பட்ச அளவு கடன் திட்டம்' என்ற புதிய திட்டத் தைச் சமூகத்தில் பொருளாதா ரத்தில் பின்தங்கியுள்ள பகுதி யினருக்கு உதவும் முறையிலும், கிராமப் புறங்களில் அதிக வேலை வாய்ப்புக்கள் உருவாக்கவும் அறி முகப்படுத்தியுள்ளது. பின்தங்கிய மாவட்டங்களிலும் கிராமப் புறங் களிலும் துவக்கப்படும் தொழில் நிறுவனங்களுக்கு ரூ. 5,000 லிருந்து ரூ. 10,000 வரை நிதி உதவி வழங்கப்படுகின்றது.

**சட்டதிட்டங்களும் வரைமுறை களும்:**

(அ) குறைந்தபட்சத் தொகை ரூ. 5000-க்கு ஆண்டிற்கு 9 சத வீதம் வட்டி வீதமாக வசூலிக்கப் படுகின்றது.

(ஆ) ரூ. 5,000-லிருந்து ரூ. 10,000 வரை நிதி உதவி அளிக் கப்படுகின்றது.

(இ) இயந்திரங்கள் வாங்கு வதற்கு மட்டுமே நிதியுதவி அளிக்கப்படுகின்றது.





(ஈ) மாவட்டத் தொழில் மையங்களுக்குள் அடங்கும் தொழில் நிறுவனங்களுக்கே இத் திட்டத்தின்கீழ் நிதி உதவி அளிக்கப்படும்.

**இயந்திரம் பொருத்தப்பட்ட மீன் பிடிக்கும் படகுகள் வாங்க நிதி உதவி:**

இக்கழகம், மீன் பிடிக்கும் படகுகள் வாங்க நிதி உதவி அளிக்கும் திட்டத்தை அறிமுகப் படுத்தியது. இத் திட்டத்தின்கீழ் சிறுரகத் தொழில்களுக்கு வழங்குவதுபோல் குறைந்த வட்டி வீதம், கடனைச் செலுத்த அவகாசம், ஈட்டுப் பொறுப்புத் தொகையில் குறைந்த பங்குத் தொகை போன்ற சலுகைகளை அளிக்கின்றது.

**சுலபக் கடன் உதவித் திட்டம்:**

இக் கழகம் குறிப்பாக பின் தங்கிய பகுதிகளில் தொழிலில் அக்கறை கொண்டு, ஆனால் பணப்பற்றாக் குறையினால் தொழில் துவங்க வாய்ப்பில்லாமலிருக்கும் தொழில்நுட்ப வல்லுநர்களுக்குச் சுலபக் கடன் உதவி மூலம் உதவியளிக்க 'சுலபக் கடன் உதவித் திட்டத்தை'ப் புகுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் உதவி அளிக்கப்படும் கடன் தொகைக்கு ஒரு சதவீதம் மட்டுமே வட்டிவீதம் வசூலிக்கப் படும். தகுதியும் திறமையும் உள்ள தொழில் முனைவோர் தொழில் வல்லுநர்களுக்கு இத் திட்டத்தின் கீழ் நிதி உதவி அளிக்கப்படும்.

**ஆட்டோ ரிக்ஷா வாங்குவோருக்கு வட்டி குறைப்பு:**

பொருளாதாரத்தின் பின்தங்கிய பகுதியினரால் வாங்கப்படும் ஆட்டோ ரிக்ஷா நிதி உதவிக்கு வசூலிக்கப்படும் வட்டி வீதத்தை ஆண்டு வட்டி 11.5 சதவீதத்திலிருந்து 9.5 சதவீதமாக இக் கழகம் குறைத்துள்ளது.

**பின்தங்கிய பகுதிகளில் தொழில் ஆரம்பிக்கும் தொழில் வல்லுநர்களுக்கு வட்டி வீதத்தில் தள்ளுபடி:**

பின்தங்கிய மாவட்டங்களில் தொழில் நுட்ப வல்லுநர்கள் தொழில் துவங்க ஊக்கமளிப்பதற்கும் அவர்களுக்கு வட்டிச் சுமையைக் குறைப்பதற்கும் வட்டி வீதத்தை 9.5 சதவீதத்திலிருந்து 8 சதவீதம் ஆகக் குறைத்துள்ளது. மற்ற மாவட்டங்களில் தொழில் நுட்ப வல்லுநர்களால் துவக்கப்படும் தொழிலகங்களுக்கு 9.5 சதவீதமே ஆண்டு வட்டியாக உள்ளது.

**கிளை அலுவலகங்களை மாற்றியதும் புதிய கிளைகளை நிறுவியதும்:**

இக் கழகம் நிதி உதவியை அதிகப்படுத்தவும் தொழிலதிபர்களுக்கு உதவி செய்யவும் கோயம்புத்தூர், மதுரை கிளை அலுவலகங்களை மண்டல அலுவலகங்




களாக மாற்றியுள்ளது. தொழில் அதிபர்களுக்கு மேலும் போதுமான உதவிகள் செய்து ஊக்கப் படுத்த திருச்சிராப்பள்ளி, கடலூர், தர்மபுரி ஆகிய இடங்களிலும் கிளை அலுவலகங்களை ஆரம்பித்துச் செயல்பட வைத்துள்ளது. மாவட்டத் தொழில் மையங்களுடன் இணைந்து செயல்பட இவை உதவும்.

**சிறுதொழில் துறையில் தொழில் திட்டங்கள்:**

டாடா பொருளாதார ஆலோசனை நிறுவனம், மற்றும் முக்கிய வங்கிகள் தயாரித்துள்ள மாவட்ட தொழில் வாய்ப்புத் திட்டங்கள், சிறுதொழில் சேவைக்கழகம், தமிழ்நாடு சிறுதொழில் முன்னேற்றக்கழகம் ஆகிய நிறுவனங்கள் தயாரித்துள்ள தொழிலமைப்புத் திட்டங்களிலிருந்து, சிறு தொழில் மற்றும் கிராமத் தொழில்கள் தொடங்குவதற்காகச் சுமார் 100 தொழில்கள் அமைப்புத் திட்டங்களைத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் சேகரித்து அச்சடித்துத் தொழில் முனைவோர்களுக்கு இலவசமாக வழங்க ஏற்பாடு செய்துள்ளது. தொழில் முனைவோர்கள் இத் திட்டங்களில் தேவையானவற்றைத்தெரிந்தெடுத்துத் தொழில் தொடங்கிப் பயனடையவும், வேலைவாய்ப்புக்களை அதிகரித்தும், தொழில் முன்னேற்றத்திற்கு உதவலாம்.

**நடப்பு ஆண்டில் செயல்திறனின் பயன்:**

ஏப்ரல் 1978 முதல் அக்டோபர் மாதம் முடிய இக் கழகம் 360 தொழில் நிறுவனங்களுக்கு ரூ. 677.82 இலட்சம் நிதி உதவி செய்து ஊக்கப்படுத்தியது. இந்த நிதி உதவியில் பெரும்பகுதி சிறு தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது. சுமார் 333 சிறு தொழில் நிறுவனங்களுக்கு ரூ. 324.52 இலட்சம் வழங்கப்பட்டது. மேலே குறிப்பிட்ட கால உரையில் பின்தங்கிய மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்ட 101 நிறுவனங்கள் ரூ. 306.51 இலட்சம் நிதி உதவி பெற்றுப் பயன் அடைந்துள்ளது. கிட்டத்தட்ட 5250 பேருக்கு இதனால் வேலை வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. கடன் வட்டி வசூல் செய்ததில் மேற்படி காலவரையில் சுமார் ரூ. 458.26 இலட்சம் வசூலித்து இக் கழகம் சிறப்படைந்துள்ளது. நடைமுறை அரையாண்டில் இக் கழகத்தின் பணிகள் மேலும் சிறப்பாக இருக்குமென எதிர் பார்க்கப்படுகிறது.



# திரு ஆரூரான் சர்க்கரை ஆலை

வடபாதிமங்கலம் தஞ்சாவூர் மாவட்டம்

## விவசாயிகளுக்கு ஓர் நற் செய்தி!

கரும்பு நடவு செய்து ஆலையினரால் கொடுக்கப்படும்
கணிசமான மான்யத் தொகைகளைப் பெறுங்கள்.

1. முன்பட்ட நடவு மான்யம் :

(அ) ஆலையிலிருந்து 30 மைல்களுக்குட்பட்ட தொகுதி :

| | |
|---|---|
| டிசம்பர் 78, ஜனவரி 79 நடவிற்கு | ரூ. 250 (ஏக்கருக்கு) |
| பிப்ரவரி 79 நடவிற்கு | ரூ. 200 (ஏக்கருக்கு) |

(ஆ) ஆலையிலிருந்து 30 மைல்களுக்கு அப்பால் உள்ள தொகுதி :

| | |
|---|---|
| டிசம்பர் 78, ஜனவரி 79 நடவிற்கு | ரூ. 200 (ஏக்கருக்கு) |
| பிப்ரவரி 79 நடவிற்கு | ரூ. 150 (ஏக்கருக்கு) |

2. புதுரக கரும்பு நடவு மான்யம் :

| | |
|---|---|
| ஏப்ரல் 79, மே 79, ஜூன் 79 மாதங்களில் கோ 671 நடவிற்கு | ரூ. 300 (ஏக்கருக்கு) |

3. 'டிரான்ஸ்போர்ட்' மான்யம் :

ஆலையிலிருந்து 30 மைல்களுக்கு மேல் உண்டாகும் லாரி வாடகையை ஆலையினர் ஏற்றுக் கொள்வார்கள்.

4. மான்யத் தொகை வழங்குவதற்கான நிபந்தனைகள் :

(அ) ஏக்கர் ஒன்றுக்கு குறைந்தபட்ச மகசூல் 27 டன்கள் இருக்க வேண்டும்.

(ஆ) கம்பெனி வெட்டு உத்திரவுப்படி காலத்தில் கரும்பு வெட்டி சப்ளை செய்ய வேண்டும்.

மேற்கொண்டு விபரங்களுக்கு எங்கள் கிளை அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

நிர்வாக மேலாளர்,
திரு ஆரூரான் சர்க்கரை ஆலை,
வடபாதிமங்கலம்.

ANNA PUB/2811/8/AS/11178/G.



# தந்தை பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தம்!

## பத்திரிகைகளில், வெளிவந்த கருத்துக்கள்!

தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் இனியும் தொடருமென்றால், தமிழக அரசு அமைத்துள்ள தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றத்தையேனும் கலந்து ஆலோசித்த பின்னர் அரசு இறுதி முடிவுக்கு வருவது நல்லது.

**—சிலம்புச் செல்வர் ம. பொசி.**
**—செங்கோல், 12-11-78**

**த**மிழக அரசு அமலாக்கியிருக்கும் 'தமிழ் எழுத்துக்களில் மாறுதல்' முறை குழப்பத்தை உண்டாக்காதா...? அழகான தமிழ் மொழியில் இத்தகைய மாறுபாடு திடீரென்று தேவைதானா?

மாறுதல்கள்தாம் வளர்ச்சியின் அடையாளங்கள் இன்றையத் தமிழ் எழுத்துக்களே பண்டைய சங்ககால எழுத்துக்களிலிருந்து பல மாறுதலுக்கு உட்பட்டவை தான். இன்றைய மாறுதல்கள் இன்னொரு வளர்ச்சிக்கு அடிகோலுகின்றன.

**—இதயம் பேசுகிறது**
**29-10-78**

**பெ**ரியார் நடைமுறையில் கடைப்பிடித்து வந்த 9 எழுத்துக்கள் பற்றிய சீர்திருத்தத்தைத் தமிழக அரசு தன்னளவில் ஏற்றுக்கொண்டதை மனநிறைவுடன் ஆதரிக்கிறேன். அதையும் பெரியாரின் நூற்றாண்டு விழாவின் போது செய்தத்தற்காக மகிழ்ச்சியும் அடைகிறேன்.

இந்த நேரத்தில் மற்றொரு கருத்தையும் இங்குத் தெரிவிக்க விரும்புகிறேன். உயிர் எழுத்துக்கள் 12-ல் எந்த ஓர் எழுத்தையும் தமிழ் நெடுங்கணக்கிலிருந்து அகற்றாமல் இருப்பது நல்லது என்பது என் கருத்து, 'ஐ' யும் 'ஔ' வும் ''ஓரெழுத்தொரு மொழி'' என்று மிகுந்த பெருமிதத்துடன் சொல்லுகின்றார் தொல்காப்பியர். இந்தப்பெருமை தமிழுக்கு நீடிக்கட்டுமே!

'ஔ' என்பது ஒலியளவில் தனி எழுத்தாக இருப்பினும் வடிவத்தில் 'ஒ' வும் 'ள' வும் சேர்ந்த கூட்டு எழுத்தாகத்தான் இருந்து வருகிறது. 'ஔ' வைத் தமிழ் நெடுங்கணக்கிலிருந்து அகற்றிய பின்னரும் 'ஒ'வும் 'ள'வும் இருக்கத்தான் போகின்றன. ஆகவே, 'ஔ' என்னும் எழுத்தைக் கைவிட வேண்டிய கட்டாயம் எதுவும் ஏற்பட்டு விடவில்லை.

தட்டச்சுப் பொறியில் 'ஔ' என்ற எழுத்து தனியிடத்தைப் பெற்றிருக்கவில்லை. 'ஒ' வையும் 'ள' வையும் சேர்த்துத்தான் 'ஔ' என்று டைப் செய்யப்படுகிறது. அச்சகத்திலே அச்சுக்கோப்பதிலும் இதுதான் நிலைமை. அங்கும் எழுத்துப் பெட்டிகளிலே 'ஔ' என்ற எழுத்துக்குத் தனிப்பெட்டி இல்லை. ஆகவே, எழுத்துக் குறைப்பு என்னும் பெயரில் 'ஔ'வை அகற்ற வேண்டிய அவசியமில்லை.

இன்னொன்றையும் இங்குச் சொல்லியாக வேண்டும். ஐ, ஔ என்னும் எழுத்துக்களுக்குப் பதிலாக 'அய்', 'அவ்' என்னும் எழுத்துக்களைப் பயன்படுத்துவது ஏற்கெனவே இருந்து வருவதுதான். செய்யுளில் எதுகை நோக்கி இந்த முறை கடைப்பிடிக்கப்படுகிறது.

மீண்டும் சொல்லுகிறேன்; தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் என்ற பெயரில் உயிர் எழுத்துக்களில் எந்த ஓர் எழுத்தையும் இழக்காமல் இருப்பது அவசியம்.

பொதுவாக, தமிழக அரசு தன்னளவில் ஏற்றுள்ள எழுத்துச் சீர்திருத்தத்தை அப்படியே வரவேற்கிறேன். ஆனால், ஐ, ஔ என்னும் உயிர் எழுத்துக்கள் ஆய்த எழுத்துப் போன்று தமிழ் நெடுங்கணக்கில் இனியும் நீடித்திருக்க வேண்டும். இது, எனது வேண்டுகோள்!

**ப**குத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களால் கடந்த நாற்பது ஆண்டுகட்கு மேலாக, உருவாக்கப்பட்டு, கடைப்பிடித்து நடைமுறைப்படுத்தப்பட்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைத் தந்தையின் நூற்றாண்டு விழாவின்போது அறிவித்தவாறு செயல்படுத்த முன் வந்து ஆணை பிறப்பித்த தமிழக அரசுக்கும், அதன் முதலமைச்சர் மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்கட்கும், நமது இயக்கத்தின் சார்பாகவும், இலட்சோப இலட்சம் பெரியார் தொண்டர்கள் சார்பாகவும் நெஞ்சார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்து, நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தக் காரியம் மிகப் பெரிய சரித்திர சாதனையாகும். அ.தி.மு. க. ஆட்சியின் கிரீடத்தில் ஜொலிக்கும் ஒரு வரலாற்றுப் புகழ்வாய்ந்த வைரம் ஆகும்.

தமிழ்மொழியின் வளர்ச்சியில் அக்கறையும், கவலையும், பற்றும் உள்ள எவரும் இதனை இருகரம் நீட்டி வரவேற்கவே செய்திடுவர் என்பது பாராட்டத்தக்கது.

தமிழக அரசு விளம்பர வாசகங்களில் இந்தச் சீர்திருத்த எழுத்து மாற்றங்கள் உடனடியாக இடம் பெற்றது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

பள்ளிப்பாட நூல்களில் இவை உடனடியாக இடம்பெற வேண்டுமென்று ஆணை பிறப்

பித்த அரசும், கல்வி அமைச்சரும் மிகவும் பாராட்டத்தக்கவர்கள் ஆவார்கள்.

தமிழ்நாட்டுப் பத்திரிகைகளுக்குத் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தில் இம் முறையைப் பின்பற்ற வேண்டும் என்று கண்டிப்பாக அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும்.

அ.தி.மு.க. அரசு தற்போது பிறப்பித்திருக்கும் இவ்வாணை, தமிழ்மொழி வளர்ச்சிக்கும், தமிழ் இலக்கிய முன்னேற்றத்துக்கும் பெரிதும் துணை புரியத் கூடிய மாற்றம் ஆகும்.

தமிழ் தட்டெழுத்து (Type-writing) முறையும், சுருக்கெழுத்து முறையும் (Short-hand) இதனால் வெகு சுலபமாகிவிடக் கூடிய நிலையில் தமிழ்மொழி வளர்ச்சிக்கு அதைவிட வாய்ப்பான நிலை வேறு உண்டா?

**—திரு கி. வீரமணி,**

**(30-10-78 'விடுதலை' தலையங்கம்)**

**மொ**ழி என்பது கருத்துக்களை எடுத்துச் சொல்லும் வாகனம். எனவே, படிப்பதற்கும், அச்சடிப்பதற்கும், டைப் செய்வதற்கும் மொழியை எளிமையாக்கும் சீர்திருத்தங்கள் வரவேற்கப்பட வேண்டியவைகளே. தற்போது தமிழ் எழுத்தில் செய்யப்பட இருக்கும் சீர்திருத்தங்கள், பல தடைகளை அகற்றுகின்றன. டாக்டர் மு. வ., தெ. பொ. மீ. டாக்டர் இலக்குவனார், பாவாணர் போன்ற தமிழறிஞர்களும், மொழி வல்லுநர்களும், இலக்கண அறிஞர்களும் தங்கள் ஒப்புதலை ஏற்கெனவே தந்து விட்டார்கள்.

சம்பிரதாயங்கள் என்ற பெயரால் பழமையைக் காப்பாற்றிக் கொண்டு வருவதும், புதிய முறைகளுக்கு முட்டுக்கட்டை போடுவதும், தமிழ் வளர்ச்சிக்கு ஆபத்தானதாக முடியும். பழமையான தொல்காப்பியம்கூட ''பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினானே'' என்று குறிப்பிடுகிறது.

மை, காகிதம் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பு பனை ஓலையில் எழுத்தாணியால் எழுதுவதற்கேற்ப இப்போதுள்ள தமிழ் எழுத்துமுறை உருவாக்கப்பட்டது. எழுத்துக்களில் சீர்திருத்தம் செய்யப்படுவது என்பது புதியது அல்ல. துருக்கி எழுத்துக்களில் கமால்பாட்சா கட்டாயமான சீர்திருத்தத்தைப் புகுத்தினார். பெர்னாட்ஷா, ஆங்கில எழுத்துக்களில், உச்சரிக்கும் போது ஒலி எழுப்ப முடியாத எழுத்துக்களை நீக்கிவிட வேண்டும் என்ற சீர்திருத்தத்தை வற்புறுத்தி வந்தார். மலையாள எழுத்துக்கள்கூட சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கின்றன.

இப்போது நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கும் தமிழ் எழுத்துக்கள்கூட, வீரமா முனிவர் என்று அழைக்கப்படும் கிறிஸ்தவ பாதிரி ஜோசப் பெஸ்கி செய்த சில சிறிய சீர்திருத்தங்களின் அடிப்படையில் உருவானவைதான்.

**—திரு வி. ஏ. இளவழகன்,**

**திருவையாறு.**

**('இந்து' நாளிதழ் 8-11-78)**

**ம**றைந்த பெரியார் ஈ.வெ.ரா. தந்த சீர்திருத்தங்களின் அடிப்படையில் தமிழ்நாடு அரசு கொண்டுவந்துள்ள எழுத்துச் சீர்திருத்தம் மிகச் சரியான ஒன்றாகும்.

வார்த்தைகள் அமைப்பு, வாக்கியங்கள் அமைப்பு, அகராதி போன்றவைகளில் கொண்டு வரப்படும் மாற்றங்கள், ஏதோ நவீனப்படுத்தும் நோக்கிற்காக அல்ல; மாறாக, கல்வி, நிர்வாகம் தகவல் தொடர்பு போன்ற சமூக நலக்காரியங்களுக்கு எளிமையாகவும், மேலும் திறமையாகவும், எளிதில் பின்பற்றக் கூடியதாகவும் மாற்றியமைப்பதே இந்தச் சீர்திருத்தங்களின் முக்கிய நோக்கமாகும். தற்போதுள்ள எழுத்து முறையே, மாற்றத்திற்குள்ளானதுதான் என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

தற்போது அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்டுள்ள புதிய முறை, பொருளாதார ரீதியாகவும் மிகவும் சிக்கனமானது. தமிழ் எழுத்துத் துறையில் எளிமையையும், சீர்மையையும் கொண்டு வரக்கூடியது என்பதில் சந்தேகமே இல்லை. புது எந்திரங்கள் கண்டுபிடிப்புக்கு ஏற்றவாறு மொழி எழுத்துச் சீர்திருத்தம் செய்யப்படுகிறது என்று கருதுவது தவறு; அதற்கு மாறாக நமது எழுதும் முறையை இன்னும் திறமையாக்கும் நோக்கத்தோடுதான் தேவையான மாற்றங்களைச் செய்கிறோம். தமிழ் எழுதும் முறை வரலாற்றைப் பார்த்தால் இதைப் புரிந்து கொள்ள முடியும். எனவே, இப்போது கொண்டு வரப்பட்டுள்ள எழுத்துச் சீர்திருத்தம் உண்மையிலேயே நியாயமானதும் சரியான காரணங்களைக் கொண்டது மாகும்.

மக்கள் அரசாங்கமும் பொறுப்புள்ள தமிழறிஞர்களும் மாற்றத்தைக் கொண்டு வரும்போது தான் அது வெற்றிகரமாக முடியும் என்பதற்கேற்ப, தமிழ்நாட்டில், பல பத்திரிகையாளர்கள், அறிஞர்கள், தமிழ்ப்பெருமக்கள் இப்படி ஒரு மாற்றம் அவசியமே என்று கருதுகிறார்கள்.

பலமொழி பேசும் மக்களைக் கொண்ட இந்தியா போன்ற நாட்டில், மாநில மொழியைப் பயன்படுத்துவதில் பல பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. ஆங்கிலத்தின் மூலம் தான், விஞ்ஞான தொழில் நுட்ப சம்பந்தமான அறிவைப் பெற்று வருகிறோம். நாம் இப்போது நமது சொந்த மொழியையே மேலும் பயனுள்ள முறையில் மாற்ற விரும்புகிறோம். நம்முடைய மாற்றத்திற்கு அஞ்சும் வறட்டுத்தனமான போக்குகளைக் கைவிட்டால் நம்முடைய மொழியை இப்போதாவது நல்ல முறையில் வளர்ச்சி அடையச் செய்யலாம்.

**—டாக்டர் கருணாகரன்,**

**அண்ணாமலைநகர்.**

**('இந்து நாளிதழ் 8-11-78)**

**த**மிழக அரசு தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்று ஓர் ஆணை பிறப்பித்தது. அரசு அலுவலகங்கள், கல்லூரிகள், மற்றும் நகராட்சி மன்றங்கள், பஞ்சாயத்துக்கள், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் மற்றும் அரசுப் பிரசுரங்கள்-எல்லாவற்றிலும் உடனடியாக இச்சீர்திருத்தம் செயல்படுத்தப்படும் என்று தெரிவித்தது.

பொதுவாக இச் சீர்திருத்தம் வரவேற்கத்தக்கது. அது அரசின் முனைப்பான முன் முயற்சியில் செயல்படுத்தப்படுவது விரைவான, பரவலான, தர்க்கத்தை உண்டாக்கிப் பயனளிக்கும்.

இப்போது பெரியார் நூற்றாண்டு விழாவின்போது அரசு இச் சீர்திருத்தத்தைச் செயல்படுத்துவது மிகவும் பொருத்தமாகும். 1935 ஜனவரி முதல் ''குடியரசு'' பத்திரிகையிலும் பின்னர் ''விடுதலை'' ஏட்டிலும் அவர் தொடர்ந்து இச்சீர்திருத்தத்தைச் செயல்படுத்தி வந்ததை நாடறியும்.

அரசாங்கம் பிறப்பித்துள்ள ஆணையில் உயிர்மெய் எழுத்துக்கள் சம்பந்தமான சீர்திருத்தம்பற்றி யார்க்கும் ஆட்சேபணை இல்லை.

ஆனால், ஐ, ஒள எனும் உயிரெழுத்துக்களில் சீர்திருத்தம் செய்திருப்பதில் ஆட்சேபணை கிளம்பியிருக்கிறது. அதில் நியாயமும் உண்டு.

ஏனெனில், இச் சீர்திருத்தத்தால் ஐ, ஒள என்பவை உயிரெழுத்துவரிசையிலிருந்து அறவே அடிபட்டுவிடும். அவற்றின் இடத்தில் அய், அவ் எனும் உயிர்மெய் எழுத்துக்களைச் சேர்ப்பது இயலாது. நெடுங் கணக்கு அபத்தமாகிவிடும்.

எல்லா ஏடுகளும், பதிப்பகங்களும், அமைப்புகளும் இச்சீர்திருத்தத்தில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

**—'ஜனசக்தி' தலையங்கம்**
**19-11-78**

பெரியார் செய்த சீர்திருத்தம் வரவேற்கத்தக்கது. அதை அரசு ஏற்றுக் கொண்டிருப்பதும் பாராட்டத்தக்கது.

பெரியார் செய்துள்ள இந்தச் சீர்திருத்தம், அரை குறைதான். அது முழுமையானது அல்ல. பெரியார், மூன்று மாறுதல்களைச் செய்து இருந்தார்.

(1) ஸெ, ஸை, ஸெ, ஸெ என்ற எழுத்துக்களை லை, ளை, னை, ணை என்று எழுதுவது.

(2) ஞ, ண, ரு, போன்ற நெடில் எழுத்துக்களை னா, ணா றா என்று எழுதுவது.

(3) 'ஐ' என்பதை 'அய்' என்றும்; 'ஒள' என்பதை 'அவ்' என்றும் எழுதுவது.

மேற்கண்ட மூன்று மாறுதல்களைத்தான் பெரியார் ஏற்றுக் கொண்டிருந்தார். அல்லது ஏற்கச் செய்து வந்தார்.

இவற்றில் மூன்றாவதாக உள்ள அய்-அவ் மாறுதலை எழுத்துச் சீர்திருத்தம் என்று சொல்ல முடியாது. காரணம், தமிழ் இலக்கணத்திலேயே அய்-அவ் என்று எழுதலாம் என்று விதி இருக்கிறது.

எந்த ஒரு சீர்திருத்தமும், ஒரு மொழியின் வளர்ச்சிக்குப் பயன் உடையதாக இருக்கும் என்ற நோக்கத்தில்தான் செய்யப்படுகிறது. பாதகம் என்று பார்த்தால், எதையுமே புதுப்பிக்க முடியாமல் போய்விடும்.

என்னைக் கேட்டால் தமிழ் மொழி, உலகில் உள்ள மற்ற மொழிகளைவிட சொல்வளம் மிக்க மொழி. ஆனால் அது உலக அளவில் வளர்ச்சி அடையவும் எல்லா விதமான விஞ்ஞான அறிவுகளையும் தமிழ்ச் சொற்கள் மூலமாகவே அறியவும், தற்போதுள்ள தமிழ் மொழியில் சீர்திருத்தம் தேவை.

ஒரு சொல் எந்த இடத்தில் வந்தாலும் அதன் ஒலிவடிவம் மாறாமல் வருகின்ற தனிச்சிறப்பு தமிழ்ச் சொற்களுக்குத்தான் உண்டு. அதாவது ஆங்கில எழுத்துக்கள் தனி வடிவத்தில் ஓர் ஒலியையும் வரிவடிவத்தில் வரும்போது வேறு ஓர் ஒலியையும் தருவதாக இருக்கின்றன.

என்றாலும், 26 எழுக்கள்—அதாவது குறைவான எழுத்துக்களை உடைய மொழி என்ற தனிச்சிறப்பால் ஆங்கிலம் உலகம் எல்லாம் பரவி இருக்கிறது.

தமிழுக்கு எத்தனையோ சிறப்புகள் இருந்தும் அதில் 247 எழுத்துக்கள் இருக்கின்ற காரணத்தால், கற்பதற்குக் கடினமான மொழி என்ற கருத்து நிலவி வருகிறது.

ஆங்கிலத்தைப் போலத் தமிழிலும் எழுத்துக்களைக் குறைத்தாக வேண்டும் என்று தமிழ் ஆராய்ச்சிக்கழக இயக்குநர் திரு மகாதேவன் கருத்து தெரிவித்திருக்கிறார்.

என்னைக் கேட்டால், ஓர் உயிர் எழுத்து தனியாகவும் ஒரு மெய்யெழுத்து தனியாகவும் இருந்தால் எளிதாக இருக்கும்.

**—பன்மொழிப் புலவர்**
**திரு கா. அப்பாதுரையார்**
**மாலைமுரசு : 11-11-78**

தமிழகத்தில் தற்போது அமைந்துள்ள அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பெரியாருக்குச் சிலை எடுத்தது. மத்திய அமைச்சரைத் திறந்து வைக்கச் செய்து இந்தியா முழுமையும் எல்லோரும் பெரியாரைத் தெரிந்து கொள்ளச் செய்தது. இவர்கள் காலத்தில் மத்திய அரசு பெரியாருக்குத் தபால் தலை வெளியிட்டுப் பெரும் புகழைத் தேடிக் கொண்டது. தமிழக அரசுக்கும் இதில் ஓரளவு புகழ் சேர்ந்தது. இவ்வளவன்றிப் பெரியார் நூற்றாண்டு விழாவை மாவட்டந்தோறும் பெரியாரின் கொள்கையடிப்படையில் விழா நடத்தியதும், நடத்த இருப்பதும் பாராட்ட வேண்டிய ஒன்றாகும்.

இன்றைய தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் பெரியாரால் கண்டுபிடிக்கப்பட்டுப் பல்லாண்டுகளாக நடைமுறைப்படுத்தி வரும் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை உடனடியாக அரசு மேற்கொள்ள ஆணையிட்டதோடு மற்றவர்களையும் இதனைப் பின்பற்றக் கேட்டுக்கொண்டிருப்பது மேற்குறிப்பிட்டவை எல்லாவற்றுக்கும் முடி வைத்ததுபோல அமைந்துள்ளது.

**—பேராசிரியர் ந. இராமநாதன்,**
**எம்.ஏ. பி.ஒ.எல்.,**
**'விடுதலை' 15-11-78**


## முதன் முதலில் !

திருச்சிராப்பள்ளி மாவட்டம் முசிறி, தொட்டியம் பகுதிவாழ் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சுமார் 105 பேருக்கு இலவச மனைப்பட்டாக்கள் அண்மையில் வழங்கப்பட்டன.


முதன்முதலாக 1 இலட்சத்து 25,000 ரூபாய் செலவில் இம் மனைப்பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. அதிக அளவில் மனைப்பட்டாக்கள் வழங்குவது இதுவே முதல் தடவையாகும். இன்னும் 6 மாத காலத்தில் 5,000 பட்டாக்கள் வழங்கப்படும்.

தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கும் மாநில முழுவதும் 1 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இம்மாவட்டத்தில் மட்டும் 650 வீடுகள் கட்டப்பட உள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டுவதில் தென்னார்க்காடு மாவட்டம் முதல் இடமும், திருச்சி மாவட்டம் 2வது இடமும் வகிக்கிறது.


விரைவில் முசிறியில் 3 இலட்சம் ரூபாய் செலவில் அரிசன மாணவர் விடுதி துவங்கப்பட உள்ளது. இம் மாவட்டத்தில் பத்தாயிரம் பட்டாக்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு மட்டும் 10 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.




டிரான்ஸ்மிஷன் (மின்விசை)
கோபுரங்கள்




இயந்திரக் கருவிகள்



டிராக்டர் இணைப்பு (Trailers)
வண்டிகள்



எனமல் பூசிய செம்புக் கம்பிகள்



வீட்டுக்கும், அலுவலகத்துக்கும்
ஏற்ற பலவித மேசை. நாற்காலி



பாத அணிகள் மற்றும் அழகு
தோல் பொருட்கள்


# தொடர்ந்து சேவை புரியும் டான்சி மேலும் ஒரு வளர்ச்சி ஆண்டை எதிர்நோக்குகிறது!

இன்று டான்சி வளர்ந்து பல்வேறு துறைகளில் விரிவடைந்து 57 தொழிற் கூடங்கள் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 13 கோடிக்கு மேற்பட்ட பொருட்களை உற்பத்தி செய்தும் சேவை அளித்தும் வருகிறது.

கடந்த 12 ஆண்டுகளில், தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்ச்சிக்காக டான்சி தன்னை அர்ப்பணித்துக்கொண்டு சேவை புரிந்து வருகிறது.

சிறு தொழில்களைத் துவக்குவது, அவற்றின் வளர்ச்சிக்குப் பாடுபடுவது டான்சியின் குறிக்கோள்.

பதனிடப்பட்ட தோல், தோல் பொருட்கள், கதவுச்சட்டங்கள் போன்றவைகளை ஏற்றுமதி செய்து வருகிறது டான்சி.



ரூ. 32 இலட்சம் மதிப்புள்ள கிரானைட் கற்களை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்தது இந்த ஆண்டில் ஒரு பெரும் சாதனையாகும்.

தனக்கும், மாநிலத்துக்கும், நாட்டுக்கும் மேலும் ஒரு வளர்ச்சி ஆண்டை டான்சி எதிர்நோக்குகிறது. ஒவ்வொரு ஆண்டும் மேலும் வளர்ச்சி பெற்று, சேவை புரிய பாடுபடுகிறது

**டான்சி**

**தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்**

1, ஒயிட்ஸ் ரோடு, சென்னை-600 014

# புதியன பொலிவதாக



செங்கம லப்பூ திகழும் வாவியில்
திங்கள் குளித்துச் சிரிப்பது போல
மங்கையர் கைகள் வளையல் ஒலியொடு
பொங்கற் பானை ஏற்றும் புதுநாள்!
ஓயா(து) உழைக்கும் உழவர் திருநாள்!
தாய்-மகன் என்று தழுவி இருந்து
வாயும் கையும் மணக்க அருந்தி
பழனத்து வயலைப் பாராட்டும் பொன்னாள்!
சித்திரக் கோலம் முத்திரை பதிக்க
புத்தம் புதிய பொங்கற் பானையில்
மஞ்சள் கட்டி மணப்பதைப் பார்த்தால்
மங்கல மங்கையர் வடிவெனத் தோன்றும்!
பாரத தேசத்துப் பதினான்கு மொழியோர்
விதவிதப் பேரில் விழாக்கொண் டாடுவர்
எனினும் தமிழர்க்கே இதுபெரும் திருநாள்!
'தை'முத லாகத் தமிழர் ஆண்டினை
அளக்கும் சிலரும் அவனியில் உண்டு!
மார்கழிப் பனியை வழிவழி அனுப்பி
'தைமகள்' வருகெனத் தமிழர் பாடுவர்!
திங்கள் பன்னிரண்டு திகழும் ஆண்டில்
ஓரெழுத் தால்'தை' உயர்ந்து நின்றது!
தமிழர் வாக்கினைச் சால்புறப் பெற்று
தமிழ்பா ராட்டத் தனிஅறம் நடத்தும்
தமிழக அரசும் தமிழர் குலமும்
இத்'தை' முதலாய் இன்னும் பலநாள்
சீர்பெற வாழ்ந்து சிறப்புற வளர்க!
ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்!
நன்னெறி வளர்க்க ஞாயிறு போற்றுதும்!
திங்கள் போற்றுதும் திங்கள் போற்றுதும்!
திருநாள் சிறக்கத் திங்கள் போற்றுதும்!

அரசவைக் கவிஞர்
**கண்ணதாசன்**








# வேலூரில் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா

பகுத்தறிவுச் சமுதாய சீர்திருத்தச் செம்மல் தந்தை பெரியார் நூற்றாண்டுவிழா, வேலூரில் வரலாறு காணாத வகையில் கொட்டும் மழையிலும் மிகச் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

தமிழ்நாடு அரசின் சார்பில் டிசம்பர் திங்கள் 25, 26 ஆகிய இருநாட்களில் வேலூர் அண்ணா கலையரங்கிலும், கோட்டை மைதானத்திலும் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா நடைபெற்றது.

25-ஆம் தேதி காலை மங்கல இசையுடன் விழா 'அண்ணா கலையரங்கில்' தொடங்கியது. முத்துரங்கம் அரசினர் கலைக்கல்லூரி முதல்வர் திரு ச. ந. சொக்கலிங்கம் அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார். திரு ஏ. சி. சண்முகம் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் விழாவினைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :

நாட்டுக்காக-மொழிக்காக - ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்குவதற்காக ஏறத்தாழ 60 ஆண்டுகள் அயராது உழைத்தவர் பெரியார்! அவர் பட்ட துயரங்கள், துன்பங்கள் ஏராளம்! அவரது சேவைக்கு இவ்வளவு பெரிய விழா எடுக்கப்படும் என்று பெரியாரே எதிர்பார்த்து இருக்கமாட்டார்.

வேலூரில் கொடுத்த 'பெரியார்' பட்டம்:

''வேலூரில் நடந்த பெண்கள் மாநாட்டில் தான் 'பெரியார்' என்ற பட்டம் வழங்கப்பட்டது. அதற்கு அவர் தகுதியானவர்தான். படித்தவர்கள்-பணக்காரர்கள்-உயர்பதவி வகிப்பவர்கள்-எழுத்தாளர்கள்- அறிஞர்கள் ஆகியோர்தான் பெரியவர்கள் என்று போற்றப்பட்ட காலம் செத்துவிட்டது. செயற்கரிய செய்பவர்தான் 'பெரியார்''.

மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு கே. நாராயணசாமி முதலியார் அவர்கள் சிறப்புரையாற்றிப்பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''1939-ஆம் ஆண்டுதான் பெரியாருக்கும் எனக்கும் தொடர்பு ஏற்பட்டது. நான் அப்போது வேலூரில் வக்கீலுக்கான பயிற்சி செய்து கொண்டிருந்தேன். 'பிராமண மகா சபை' என்ற சங்கம் அவர்மீது கிரிமினல் வழக்குத் தொடர்ந்தது. அவருக்குத் தண்டனை கிடைத்தது. பிறகு வழக்கு அய்கோர்ட்டுக்கு வந்தது. அதில் பெரியார் விடுதலை அடைந்தார். பிறகு அந்த வழக்கு சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனது. ஆனால், எதற்கும் பெரியார் அஞ்சியது கிடையாது.

பெரியார் ஒரு மேதை :

'பெரியார் ஒரு மேதை, தமிழ் நாட்டில் கலாச்சார, அரசியல், பகுத்தறிவு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் அவர்.

மாணவர் அரங்கில் பங்கு கொண்டு, திரு வி. இராமதாசு அவர்கள் (புதிய சகாப்தத்தின் விடிவெள்ளி), திரு வெங்கட்ராமன் அவர்கள் (தொண்டில் பழுத்த பழம்), திரு மோசசு மைக்கேல் பாரடே அவர்கள் (எழுச்சிமிகு எழுத்தாளர்), திரு போளூர்






கோவிந்தன் அவர்கள் (போராட்ட வீரர்), திரு அ. இராமலிங்கம் அவர்கள் (ஏற்றமிகு பேச்சாளர்), செல்வி. பெ. மணிமொழி அவர்கள் (சீர்திருத்தச் செம்மல்), செல்வி உமாமகேசுவரி அவர்கள் (பெண்ணடிமை சாடிய பெரியார்) திரு கோரி. எஸ். மோகனன் அவர்கள் (பண்புகளின் பாசறை), திரு வி. எம். சையது அகம்து அவர்கள் (பகுத்தறிவுப் பகலவன்), திரு டி. ராசன் அவர்கள் (பெண்ணுரிமை பேணிய பெருந்தகை) என்ற தலைப்புகளில் உரையாற்றினர். இத்துடன் காலை நிகழ்ச்சிகள் இனிது முடிவுற்றன.

அண்ணா கலையரங்கில் மாலையில் நடந்த கவியரங்கில் கருத்து மழை பொழிந்தது.

கவியரங்கத்திற்கு உவமைக் கவிஞர் சுரதா அவர்கள் தலைமை தாங்கினார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் திரு சி. என். விசுவநாதன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

கவியரங்கத்தில் கவிஞர் புலமைப்பித்தன் (புரட்சி எழுத்தாளர் பெரியார்), கவிஞர் சோதிவாணன் (பகுத்தறிவுத் தந்தை பெரியார்), கவிஞர் த. கோவேந்தன் (தன்மான வீரர் பெரியார்), புலவர் இளஞ்செழியன் (சிந்தனைச் சிற்பி பெரியார்), திருமதி சரளா ராசகோபாலன் (பெண்ணுரிமை பேணுநர் பெரியார்), புலவர் மா. வீர அரசு (மொழிப் போர் வீரர் பெரியார்), கவிஞர் கே. அறிவுமதி (சீர்திருத்தச் செம்மல் பெரியார்) என்ற தலைப்புகளில் பல்வேறு கவிஞர்கள் தந்தை பெரியாருக்குக் கவிமாலை சூட்டினார்கள். மக்கள் தங்கள் கரவொலி மூலம் ரசிப்புத் தன்மையை எடுத்துக் காட்டினார்கள்.

மதுரை காமராஜ் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் திரு எஸ். வி. சிட்டிபாபு அவர்கள் கருத்தரங்கிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது: ''பெரியார் அவர்களின் வாழ்க்கையினை செய்திப் படம் தயாரித்து அதைப் பள்ளிக் கூடங்களில் காண்பிக்க வேண்டும்''

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் திரு ஏ. கே. அரங்கநாதன் எம். எல். ஏ. அவர்கள் அனைவரையும வரவேற்றுப் பேசினார்.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு ச. இராமச்சந்திரன் அவர்கள் கருத்தரங்கைத் துவக்கி வைத்துக் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''பெரியார் சகாப்தம் முடிந்துவிடவில்லை. தொடர் கதையாக வளர்ந்து வருகிறது. மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். தான் பெரியார் விழாவை அரசு விழாவாகக் கொண்டாடும்படி உத்தரவிட்டார். அவருடைய எழுத்துச் சீர்திருத்தத்தை அமல் படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது. கொட்டும் மழையாக இருந்தாலும் இன்று இங்கு ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் கலந்து கொண்டிருப்பது கண்டு மகிழ்ச்சியடைகின்றேன்.''

கருத்தரங்கில் பங்கு கொண்டு திரு க. அறிவழகன் எம். எல். சி. (பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும்), டாக்டர் சி. பாலசுப்பிரமணியம் (பெரியாரும் பெண்ணுரிமையும்), பேராசிரியர் நா. பாண்டுரங்கன் (பெரியாரும் சமூகச் சீர்திருத்தமும்), பேராசிரியர் மா. நன்னன் (பெரியாரும் சாதி ஒழிப்பும்), திரு வே. ஆனைமுத்து (பெரியாரும் போராட்டங்களும்) என்ற தலைப்புகளில் உரையாற்றினர்கள்.

அன்று இரவு டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் (பெரியார் நூற்றாண்டு விழாக் குழுத் தலைவர்) அவர்கள் தலைமையில் நடிப்பிசைப் புலவர் நாடக மன்றத்தாரின் பேரறிஞர் அண்ணா அவர்களின் 'நீதி தேவன் மயக்கம்' நாடகம் மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் முன்னிலை நடைபெற்றது. நாடகம் அனைவரையும் கவர்ந்தது.

26-ஆந்தேதி காலை 9 மணி யளவில் முதல் நிகழ்ச்சியாக தந்திர இயல் கலைஞர் திரு கே. பி. சாமிநாதன், ''மந்திரமா-தந்திரமா'' என்னும் உண்மை விளக்கத் தந்திரக் காட்சிகளை நிகழ்த்திக் காட்டினார்.



'நீதிதேவன் மயக்கம்' நாடகத்தில் ஒரு காட்சி

மகளிர் அரங்க நிகழ்ச்சிக்குப் பேராசிரியை திருமதி சரசுவதி இராமநாதன் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

திரு ஆ. முத்துச்சாமி (செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்) அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

தந்தை பெரியாரின் அருங் கருத்துக்களை விளக்கி திருமதி ஜெயலட்சுமி அவர்கள், செல்வி ஜி. கஸ்தூரி அவர்கள், திருமதி தேசியமணி கண்ணன் அவர்கள், திருமதி சரோஜா இராமச்சந்திரன் அவர்கள், திருமதி மனோரஞ்சிதம் சனார்த்தனம் ஆகியோர் பேசினார்கள்.

மகளிர் அரங்க நிகழ்ச்சியின் இறுதியில் மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரசுவதி அவர்கள் ஆற்றிய சிறப்புரையில் குறிப்பிட்டதாவது:

''இன்றைய சமூகத்தில் ஆண்களும், பெண்களும் உரிமையுடன் சமமாக வாழ்ந்துகொண் இருக்கிறார்கள். பெண்களுக்கு உரிமை வேண்டும் என்று நாம் கேட்டுக் கொண்டு இருக்கக் கூடாது. உரிமைகளை நாமே எடுத்துகொள்ள வேண்டும்.

''தந்தை பெரியாரை பலர் சிக்கனக்காரர் என்று கூறி வந்தார்கள். அவர் சேர்த்த சொத்து தனக்கோ, தன் பிள்ளைகளுக்கோ, தன் குடும்பத்தினருக்கோ அல்ல. எல்லாச் சொத்துக்களையும் பொதுச் சொத்தாக்கிவிட்டுப் போய்விட்டார்.

''பெரியாரின் கொள்கைகளைப் பெண்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். அவர் வகுத்த வழியில் நம் உரிமைகளைத் தேடிக் கொள்ள வேண்டும்.''

அன்று மாலை வேலூரை அடுத்த பாகாயத்திலிருந்து அலங்கார வண்டிகளுடன் ஊர்வலம் புறப்பட்டது. ஊர்வலத்தில் பெரியாரின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் கருத்து விளக்க அலங்கார வண்டிகள் 14 சென்றன. ஒவ்வொரு வண்டியும் மிக அழகாக அமைக்கப்பட்டிருந்தது.

ஊர்வலத்தின் முன்னணியில் உள்ள வண்டியில் பெண்கள் நாதசுரம் வாசித்துக் கொண்டிருந்தனர்.

அலங்கார வண்டிகளுக்கு இடையே, என். சி. சி. மாணவர்கள், சாரணப்படையினர், ஊர்க்காவல் படையினர், மகளிர், மலைச்சாதிப் பெண்கள் ஆகியோர் ஊர்வலமாக வந்தார்கள்.

பொய்க்கால் குதிரை, மயில் நடனம், பெண்கள் கோலாட்டம் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம் பெற்றிருந்தன.

கடைசியாக வந்த அலங்காரத் தேரில், பெரியார் நூற்றாண்டு விழாக் குழுத் தலைவர் இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு அமைச்சர்கள் கே. ஏ. கிருஷ்ணசாமி, எஸ். டி. சோமசுந்தரம், இராம. வீரப்பன், செல்வி பி. டி. சரசுவதி ஆகியோர் அமர்ந்திருந்தனர்.

சட்ட அமைச்சரின் பேரவைச் செயலர் திரு எம். ஏ. ஜெயவேலு, குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் ஏ. கே. அரங்கநாதன் எம். எல். ஏ., திரு சி. என். விசுவநாதன் எம். பி., மாணவர் அமைப்பாளர் திரு சி. ஏ. சண்முகம் ஆகியோரும் தேரில் அமர்ந்திருந்தனர்.

ஊர்வலம் ஓர் இடத்தைக் கடக்க 45 நிமிடம் பிடித்தது. விருப்பாட்சிபுரம், சாயிநாதபுரம், வேலப்பாடி, ஆரணி ரோடு, ஆபீசர் லயன் வழியாகக் கோட்டை மைதானத்தை அடைந்தது. ஊர்வலம் வந்த 3 மைல் தூரமும், தெருவின் இரு புறமும் லட்சக்கணக்கான ஆண்களும், பெண்களும் திரண்டு நின்று அணி வகுப்பைப் பார்த்தார்கள். ஊர்வலம் கோட்டை மைதானத்திற்கு 8 மணி அளவில் வந்தடைந்தது.

வேலூர் கோட்டை மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த விழா மேடையில் ஒரு ஜோடிக்கு கலப்புத் திருமணத்தை மலர் தூவி, தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் நடத்தி வைத்தார். மணமகள் பெயர் சேகர் (முதலியார்), மணமகள் கஸ்தூரி (அரிசன்).

இரண்டு கலப்புத் திருமண ஜோடிகளுக்கு தமிழக அரசு சார்பில் தங்கப்பதக்கங்களையும் முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் வழங்கினார். அந்த ஜோடிகளின் விவரம் (1) பலராமன் (யாதவர்)-ராஜாத்தி (இருளர்), துத்தித்தாங்கல் கிராமம், (2) சக்கரபாணி (முதலியார்)-குப்பம்மாள் (அரிஜன்) மேட்டுப்பாளையம்.



ஆந்திரா வங்கியின் சார்பில் முதல்வர் அவர்களிடம் ஆட்டோ ரிக்ஷாக்களுக்கான கடன் தொகை வழங்கப்பட்டது

குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் திரு ஏ. கே. அரங்கநாதன் எம். எல். ஏ. அவர்கள் தலைமையின் கீழ் ஆட்டோ ரிக்ஷாக்களை முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் வழங்கினார். இதற்கான கடன் தொகையை ஆந்திரா பாங்க்கின் சார்பில் டிவிஷனல் நிர்வாகி திரு ஏ. ஆர். மூர்த்தி வழங்கினார்.

சட்ட அமைச்சரின் பேரவைச் செயலர், திரு எம். ஏ. ஜெயவேலு எம். எல். ஏ., அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள், தந்தை பெரியார் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்தார். விழா நிகழ்ச்சிக்கு டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி சோமசுந்தரம் அவர்கள், திரு ப. உ. சண்முகம் அவர்கள், திரு நெ.து . சுந்தரவடிவேலு அவர்கள், டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் திரு வி. தண்டாயுதபாணி எம். பி. அவர்கள், திரு. திருவாரூர் தங்கராசு அவர்கள், திரு ஜே. எம். மியாக்கான் எம். எல். சி. அவர்கள் ஆகியோர் தந்தை பெரியார் அவர்களின் கருத்துக்களையும் சிறப்பு இயல்புகளையும் விளக்கிக் கூறினார்கள்.

பெரியார் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற பெண்ணாடம் நகரைச் சேர்ந்த 11 வயது மாணவி துரைஅழகுராணி தந்தை பெரியாரின் கருத்துக்களை அழகு தமிழில் அனைவரும் கவரும் வண்ணம் எடுத்துரைத்தார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் விழாவின் நிறைவு விழாச் சொற்பொழிவு நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது:

''இந்த விழாவில் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும், அரசியலுக்கு அப்பாற்பட்ட பெரியார் கொள்கைப் பிடிப்புள்ளவர்களும் கலந்து கொண்டுள்ளார்கள். அனைவருக்கும் தமிழக அரசின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

''அண்ணா முதல் அமைச்சராக இருந்த போது பெரியாரின் கொள்கைகளை அரசு சார்பில் நிறைவேற்றி வைத்தார். அண்ணாவின் வழியைப் பின்பற்றி இப்போது தமிழக அரசு மேலும் பெரியாரின் கொள்கைகளைச் செயல்படுத்தி வருகின்றது. பெரியார் ஒரு கட்சிக்கோ, ஜாதிக்கோ மட்டும் சொந்தம் அல்ல. நாட்டு மக்கள், ஏன், உலக மக்கள் அனைவருக்கும் சொந்தம்.

''வெளிநாட்டுக்கு நான் சென்றபோது தான் அய்யா (பெரியார்) சொன்ன கருத்துக்களை முழுவதுமாக உணரமுடிந்தது. இங்கே தான் ராகுகாலம், எமகண்டம் எல்லாம் பார்க்கிறோம். ஆனால் அங்கே இவற்றையெல்லாம் பார்ப்பதில்லை.

''தமிழ்மொழியில் சில சீர்திருத்தங்களைச் செய்தோம். தொல்காப்பியர் காலம் முதற்கொண்டே எழுத்துச் சீர்திருத்தம் தேவை யென்று கூறியிருப்பதாக மீனாட்சிசுந்தரனார் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.


''இன்னும் அதில் சீர்திருத்தம் செய்ய வேண்டியிருக்கிறது. தமிழை, உலக மொழியாக்க வேண்டும். அதற்கு ஆன்றோரும் சான்றோரும் நல்ல தேவையான கருத்துக்களைச் சொல்ல வேண்டும். அவ்வாறு கூறினால் அவற்றைத் தமிழக அரசு ஏற்றுச் செய்யும். தமிழை யாரும் அழிக்க அனுமதிக்க மாட்டோம். தமிழில் வளமிகுந்த சொற்கள் இருக்கின்றன. இதை இன்னும் வளமாக்க வேண்டும்.

''ஆங்கில மொழியை அமெரிக்கர்கள் சுருக்கி அதைப் பயன்படுத்துகின்றார்கள். அதுபோல தமிழ் மொழியில் இன்னும் சீர்திருத்தங்கள் செய்து தமிழை வளர்க்க வேண்டும். தமிழை யாரும் பாதுகாக்கத் தேவையில்லை. தமிழர்கள் அதைப் பாதுகாத்துக் கொள்வார்கள். தமிழ் எழுத்தில் இந்த அரசு செய்த சீர்திருத்தங்களைப் பாராட்டி திராவிட கழகம் தீர்மானம் போட்டு இருக்கிறது. தமிழில் இன்னும் இன்னின்ன சீர்திருத்தங்களைச் செய்யுங்கள் என்றுசொன்னால் அதை நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யும்.''

''மக்களின் மகத்தான வேண்டுகோளுக்கிணங்க முந்தைய நாள் நடைபெற்ற நீதி தேவன் மயக்கம் நாடகம் மறுநாளும் நடைபெற்றது. கரிக்கோல் ராஜு குழுவினர் சிறப்பாக நடித்து மக்களின் அமோகமான பாராட்டைப் பெற்றனர்.

வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு த. பா. பாட்டிக்கர் அய். ஏ. எஸ்., அவர்கள் நன்றி நவில விழா இனிது முடிவுற்றது. விழா நிகழ்ச்சி முடிவுற்றாலும் அதன் அருமையும் பெருமையும் அனைவரின் நெஞ்சங்களிலும் நீங்காது நிறைந்திருக்கிறது என்பதைக் குறிப்பிடவும் வேண்டுமோ!

—மருதம்.





# மூதறிஞர் ராஜாஜி சிலை திறப்பு விழா

"இராஜாஜி சிறந்த சேவகராகவும், தியாகியாகவும் கொள்கைப் போராட்ட வீரராகவும், அதைச் செயல்படுத்தும் துணிவுடையவராகவும் திகழ்ந்து வந்தார்" என்று மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு பி. டி. ஜாட்டி அவர்கள் மூதறிஞர் இராஜாஜியின் திருவுருவச் சிலையினைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

டிசம்பர் திங்கள் 24-ஆம் நாள் சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள இராஜாஜி முழு உருவச் சிலைத் திறப்பு விழா இராஜாஜி சதுக்கம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள பாரிமுனையில் தமிழக அரசின் சார்பில் சீரும் சிறப்புமாக நடந்தது.

மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் ஆரம்பத்தில் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் ''இராஜாஜிக்கு சிலை எழுப்பி விழா எடுக்க இந்தியா முழுவதும் உரிமை பெற்றிருந்தாலும் புரட்சித் தலைவர் தலைமையில் அமைந்திருக்கும் தமிழக அரசு முன்னுரிமை பெற்றிருக்கிறது. ஏனெனில் இராஜாஜி தன் வாழ்நாள் முழுதும் எந்த இலட்சியத்திற்காகப் பாடுபட்டு வந்தாரோ அந்த இலட்சியத்திற்காகப் புரட்சித் தலைவர் அவர்கள் பாடுபட்டு வருகிறார்கள்'' என்று தன் உரையில் குறிப்பிட்டார்கள்.

விழாவுக்கு மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தலைமை வகித்தார்.

முதல்வர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :

''அ. தி. மு. க. வை நான் தொடங்கியதும் முதல் முறையாக மூதறிஞர் இராஜாஜியைச் சந்தித்தேன். அவர் ஆசி கூறி, என் கையைப் பிடித்து, அவரது உறுதியினால் கண்ணீர் விடவில்லை—என்னைப் போன்றவர்கள் என்றால் கண்ணீர்விட்டுப் பேசியிருப்பார்கள்-கண்ணீர் விடாமல் உறுதியோடு பேசினார்.

''மதுவிலக்கு ரத்தினால் நாட்டு மக்களை எங்கேயோ அழைத்துச் செல்கிறார்கள்: அவர்கள் நல்வழியில் வாழ உத்தரவாதம் அளிக்க வேண்டும்'' என்று என்னிடம் சொன்னார்கள். காலம் நிச்சயம் செய்யும் என்றேன். அந்தக் காட்சியைப் பார்க்க நான் உயிரோடு இருக்க வேண்டுமே என்றார். அவர் உயிரோடு இல்லாவிட்டாலும் இந்தச் சிலை நாம் செய்யும் கொள்கைத் திட்டங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறது.

''தமிழக அரசு எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்தியை ஆட்சிமொழியாக ஏற்காது. எந்த வகையிலும் அதை அனுமதிக்காது. நாலே முக்கால் கோடி தமிழக மக்களின் சார்பில் இராமச்சந்திரன் என்ற முறையில் இல்லாமல், முதலமைச்சர் என்ற முறையில் இதைக் கூறுகின்றேன்.

''இராஜாஜி சிலை நிறுவப்பட்டுள்ளது. வடக்குக் கடற்கரைச் சாலைக்கு இராஜாஜி சாலை என்றும் பெயரிடப்பட்டுள்ளது.

ராஜாஜி பிறந்த ஊர்ப்பக்கத்தில் இருக்கும் ''சிப்காட்'' நகருக்கு, ''இராஜாஜி நகர்'' என்று பெயர் மாற்றப்படும்....

''தொழிலாளர்கள் இனி, வன்முறையில் இறங்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையில், உயிருக்கு ஆபத்து விளைவிக்கின்ற வகையில் உள்ள வழக்குகளைத் தவிர, மற்ற எல்லா வழக்குகளும் வாபஸ் பெறப்படும். தொழிலாளர் எந்தக் கட்சியினராக இருந்தாலும் வாபஸ் பெறப்படும்.

''இனி, தொழிலாளர்கள் வன்முறையில் ஈடுபடாமல், பேச்சு




வார்த்தையின் மூலம் சமரசமாகத் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுவார்கள் என நினைக்கிறேன். மீண்டும் வன்முறையில் இறங்கினால், இதுபோன்று அரசு வழக்குகளை வாபஸ் பெறும் என்று நினைத்தால் அது நிச்சயம் இருக்காது.

''மாணவர்கள் மீதும் பல் வேறு வழக்குகள் உள்ளன. உயிருக்கு ஆபத்து விளைவிக்கின்ற குற்றங்களைத் தவிர, மற்ற எல்லா வழக்குகளும் வாபஸ் பெறப்படும். யாருடைய தூண்டுதலுக்கும் இரையாகாமல் மாணவர்கள் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.''

குடியரசுத் துணைத் தலைவர் திரு பி. டி. ஜாட்டி அவர்கள், உருவச் சிலையைத் திறந்து வைத்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''இராஜாஜி தொடர்பு கொண்டுபணியாற்றாத துறையே இல்லை. அவரைப் போல அரசியலில் எதிர் நீச்சல் போட்டு, மாற்றுக் கருத்தைச் சொல்லிப் பின்னர் அவர் சொன்னதே சரி என்று தீர்க்க தரிசனத்துடன் நிரூபணமான நிலை இந்த நாட்டில் வேறு எந்தத் தலைவருக்கும் ஏற்பட்டதில்லை.''

''இராஜாஜி நினைவு நூலகக் கட்டடத்திற்கு மேதகு தமிழக ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் அடிக்கல் நாட்டினார். இந்த நூலகம் கிண்டி இராஜாஜி நினைவு மண்டபம் அருகே நிறுவப்படும்.''

ஆளுநர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''தன்னுடைய சகாக்களுடனும், ஆட்சியில் நெருங்கிய நண்பர்களுடனும் கருத்து மாறுபாடுகள் தோன்றியபோதெல்லாம் ராஜாஜி அவைகளைப் பற்றிப் பகிரங்கமாகச் சர்ச்சைக்கிடமான அறிக்கைகள் வெளியிடாமல் அடக்கத்துடனும், அமைதியாகவும், நிதானம் தவறாமலும் நடந்து கொண்ட பாங்கு போற்றுதற்குரியது.''

இதுவரை 'வடக்குக் கடற்கரைச் சாலை' என்று அழைக்கப்பட்டு வந்த சாலையின் பெயரை இனி 'இராஜாஜி சாலை' என்று மாற்ற தமிழக அரசு அறிவித்த முடிவிற்கேற்ப, 'இராஜாஜி சாலை' என்ற அந்தப் பெயர்ப் பலகையை மாண்புமிகு கேரள முதல்வர் திரு பி. கே. வாசுதேவன் நாயர் அவர்கள் திறந்து வைத்தார்.

அவர் பேசுகையில், ''எளிமையின் சின்னமாக, அடக்கத்தின் உறைவிடமாக விளங்கிய இராஜாஜியின் ஆட்சிக் காலம் பொற்காலம் என்றால் மிகையாகாது'' என்று குறிப்பிட்டார்.


மூதறிஞர் இராஜாஜி அவர்களின் சிறப்பியல்புகளைப் பாராட்டிய மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் திரு ம. பொ. சிவஞானம் அவர்கள் தனது உரையில் ''இராஜாஜி அப்பழுக்கற்ற அரசியல்வாதி; நேர்மையின் பிறப்பிடம், இந்தியா என்ற நாணயத்தின் ஒரு பக்கம் காந்தியடிகள்; இன்னொரு பக்கம் ராஜாஜி'' என்று குறிப்பிட்டார்.

தமிழ்நாடு தலைமை நீதிபதி திரு ராமபிரசாத்ராவ் அவர்கள் பேசுகையில், ராஜாஜியின் சிலை இந்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது மிகவும் பொருத்தமானது. இங்கிருந்த கலங்கரை விளக்கம் இப்பொழுது இல்லை. ஆனால் சிலைவடிவில் உள்ள இராஜாஜி அவர்கள் நமக்கெல்லாம் ஒளிவிளக்காக, கலங்கரை விளக்கமாகத் திகழ்வார்'' என்று குறிப்பிட்டார்.

முன்னாள் முதல்வர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் தனது உரையில் ''மதுவிலக்குக்காக ராஜாஜி எப்படியெல்லாம் பாடுபட்டாரோ அப்படியே இன்றைய முதலமைச்சரும் பாடுபட்டுக் கொண்டு வருகிறார்'' என்று குறிப்பிட்டார்.

திரு கே. சந்தானம், டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், திரு அப்துல் வகாப் எம். எல். சி., டாக்டர் எச். வி. ஹண்டே எம். எல். சி., திரு பி. மாணிக்கம் எம். எல். சி., திரு ஏ. ஆர். மாரிமுத்து எம். எல். ஏ. ஆகியோர் இராஜாஜிக்கு புகழ் அஞ்சலி செலுத்தினார்கள்.

இறுதியில் செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு என். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நன்றி நவில, விழா இனிதே நிறைவு பெற்றது.



# சிறப்பு விருது பெறும் இசைக்கலைஞர்கள்





மாண்புமிகு முதல்வர் அவர்கள் 21.12.78-ல் சென்னை சங்கீத வித்வத் சபையின் 52-வது ஆண்டு விழாவில் பேசுகையில்,

''வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம், நாதஸ்வரம், தவில், வீணை, பரத நாட்டியம் ஆகிய பல்வேறு நுண்கலைகளில் சிறந்து விளங்குபவர்களுக்குத் தமிழக அரசின் சார்பில் விருது வழங்கிச் சிறப்பிக்கும்'' என்று அறிவித்தார்.

''தமிழக அரசைப் பொறுத்த வரையில் நல்ல காரியங்களுக்குச் செலவு செய்யத் தயங்காது'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வறிவிப்பினைத் தொடர்ந்து, மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள், தமிழக அரசின் சார்பில் சிறப்பு விருது பெறும் கலைஞர்களின் பெயர்ப் பட்டியலை அண்மையில் அறிவித்தார்.



**'பண் இசைக் கலைஞர்' — என்னும் விருது பெறுபவர்கள் :**


*வாய்ப்பாட்டு*

மதுரை சோமசுந்தரம்

டாக்டர் பாலமுரளி கிருஷ்ணா

*வயலின்*

லால்குடி ஜெயராமன்



*மிருதங்கம்*

சி. எஸ். முருகபூபதி

*நாதஸ்வரம்*

நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன்



*தவில்*

வலங்கைமான் ஏ. சண்முகசுந்தரம்

*வீணை*

கே. வி. சிவானந்தம்

*பரத நாட்டியம்*

திருமதி வைஜயந்திமாலா பாலி

இவர்கள் அய்ந்தாண்டுக்காலம் அரசுக் கலைஞர்களாகச் சிறப்பிக்கப்படுவர். அரசின் சார்பில் இவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் 1000 ரூபாய் வழங்கப்படும்.

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் 15.1.1979 அன்று நடைபெற்ற திருவள்ளுவர் விழாவில் முதல்வர் அவர்கள் இக்கலைஞர்களுக்கு விருதுகளையும், பதக்கங்களையும் வழங்கினார்கள்

அரசினால் இப்படி விருதுகள் வழங்கப்படுவது இதுதான் முதல் தடவையாகும்.

அதே நாளில், தமிழுக்காகப் பல்வேறு துறைகளில் பாடுபடும்

*மொழிநூல் வல்லுநர்*

ஞா. தேவநேயப்பாவாணர்

*பன்மொழிப் புலவர்*

கா. அப்பாத்துரையார்

*சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக நிறுவனர்*

வ. சுப்பையா பிள்ளை

*முன்னாள் கல்வி அமைச்சர்*

தி. சு. அவினாசிலிங்கம்

*முன்னாள் கலைக்களஞ்சிய ஆசிரியர்*

ம. ப. பெரியசாமித்தூரன்

ஆகியோருக்குச் 'செந்தமிழ்ச் செல்வர்' என்ற சிறப்பு விருது வழங்கப்பெற்றதுடன், அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்புச் செய்யப்பட்டது.

## முன்னாள் அமைச்சருக்கு அரசின் உதவி


''முன்னாள் அமைச்சர் திரு. கக்கனின் நல்வாழ்வு கருதி, அவருக்கு மாதந்தோறும் 500 ரூபாய் அவரது வாழ்நாள் முழுவதும் வழங்கப்பெறும்.

''இது தவிர, அவர் குடியிருக்கும் வீட்டின் வாடகையை அரசே செலுத்தி வரும்.

''அரசு மருத்துவமனைகளில் அமைச்சர்களுக்குச் சமமான மருத்துவ வசதி அவருக்கு அளிக்கப்பெறும்.


''தமிழக அரசுப் பேருந்துகளில் அவர் இலவசமாகப் பயணம் செய்யலாம்.

என்று செய்தித்துறை அமைச்சர் அவர்கள் முதல்வர் சார்பாக அறிவித்தார்கள்.



ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

# ஜாதிகளற்ற சமுதாய அமைப்பே சமதர்மச் சமுதாயத்தின் அடித்தளம்!



உயர்வு, தாழ்வு என்னும் உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்துவரும் ஜாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாய் இருப்பதால், இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிர் ஒன்றென்று எண்ணும் உண்மை அறிவு மக்களிடம் வளர வேண்டும்.

—தந்தை பெரியார்.



இந்த நாட்டிலே, ஜாதி தான் மக்களுக்குள் பேதத்தை ஏற்படுத்தும் முதல் சாதனம். மக்களின் இரத்தத்திலே கலக்கப்பட்டிருக்கும் கடுவிஷம். மனதிலே முடக்கு நோயைப் புகுத்திவிட்டமுறை — எனவேதான் பேதமற்ற சமுதாயத்தை — சமத்துவத்தை — சமதர்மத்தை நாம் நாடவேண்டுமானால் முதலில் ஜாதி தொலைந்தாக வேண்டும்.

—பேரறிஞர் அண்ணா.

**எங்கும் சமத்துவம் ஓங்க**
**எல்லாரும் ஓர் குலம்**
**எல்லாரும் ஓர் நிறை**
**எனும் இலட்சியம் ஈடேற**
**தொண்டாற்றுவோம்!**

பதிவு எண். M. 8676

